கழக வெளியீடு : ௧0௧௮

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

இயற்றிய

# விக்கிரமசோழனுலா

★

விளக்க உரை :

பண்டித, வித்துவான், தி. சங்குப் புலவர்

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6 : : சென்னை-1.
1967

திருமலை வேற்கவிராயர் **சங்குப் புலவர்** *(1893)*

© 1967 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed 1 July 1960
Reprints: July 1963; May 1967

O31, IG40,2
K7

VIKRAMACHOZHAN ULA

Appar Achakam, Madras-1

# பதிப்புரை

நம் நாட்டு மொழி இலக்கியம், பேரிலக்கியம் சிற்றிலக்கியம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சிந்தாமணி முதலிய ஐம்பெருங்காவியம், சூளாமணி முதலிய சிறு காப்பியம், பெரியபுராண முதலிய பல புராணங்கள், பாரதம் இராமாயணம் முதலிய பெருங்காப்பியங்கள் ஆகிய பலவும் பேரிலக்கியமென்று பேசப்படும். பிற்காலப் புலவர், கடவுளருள் கருதியும், புரவலர் பொருள் கருதியும் பாடிய கலம்பகம், உலா, மடல், பிள்ளைத்தமிழ், தூது, கோவை, அந்தாதி, பரணி, குறவஞ்சி, பள்ளு போன்ற நூல்கள் யாவும் சிற்றிலக்கியமெனச் செப்புவர். நாட்டு மக்கள் நலங்கருதி இயற்றிய நூல்கள் சிறியவையாயினும் பேரிலக்கியமென்றே பேசுவது தக்கது. அருளும் பொருளும் பெறுதலாகிய தந்நலங் கருதிப் பாடியவை பெரியவையாயினும் சிற்றிலக்கியத்துட் சேர்க்கப்படும். தொண்ணூற்றுறு வகைப்படும் அச்சிற்றிலக்கியம். அவற்றுள் உலா என்பதும் ஒன்று.

"ஆதியுலா" என்று சிறப்பித்துக் கூறப்படுவது "திருக்கைலாய ஞான உலா" ஒன்றே. இறைவனருள் கருதி இயற்றியது; காலத்தால் முற்பட்டது; நாயன்மார்களுட் சிறந்த சேரமான் பெருமாணாயனாரால் பாடப்பட்டது. ஆதலின், அது சிறப்பு வாய்ந்ததென வறிக. அடுத்தது ஒட்டக்கூத்தராலியற்றப்பட்ட **மூவருலா**வாம். அவற்றுள் முன்னிற்பது **விக்கிரமசோழனுலா**. இவ்விக்கிரம சோழனுலா என்ற நூல் மட்டும் கி. பி.

1914 இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் **செந்தமிழ்** வாயிலாக முதலில் வெளிவந்தது. பின்னர் அடையாற்றுக் கல்லூரித் தமிழாசிரியர் அ. கோபாலையரவர்கள் 1926 இல் **மூவருலா** என்று ஒன்ருகப்பதிப்பித்துவெளியிட்டனர். 1946 ஆம் ஆண்டு பழையவுரை, குறிப்புரை, விசேடக் குறிப்பு, பாடபேதம் வரைந்து மூவருலாவையும் ஒன்ருகச் சேர்த்து அச்சிற் பதித்து வெளியிட்டனர் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள். அப்பதிப்பே இது காறும் உலவுகின்றது.

**விக்கிரமசோழனுலா** என்னும் இந்நூல் வித்துவான் வகுப்புக்குப் பாடமாக வைத்திருப்பதாலும் மூன்றுலாக்களின் முன்னிற்கும் நூலாதலாலும் விளக்கவுரை வரைந்து வெளியிடின் நலம்பயக்குமெனக் கருதினேம். கற்பார்க்கும் கற்பிப்பார்க்கும் இடர்ப்பாடின்றி எளிதிற் பொருள் புலப்படுமாறு பொழிப்பு விளக்கம், மேற்கோள் காட்டிப் புதிய முறையில் இவ்வுலாவைப்பதித்து வெளியிடுகின்றனம். மக்கள் நலங் கருதித் தக்க முறையில் ஒவ்வொரு நூலையும் காலமுணர்ந்து வெளியிடுதல் நம் கழகச் செயல் என்பது எவர்க்குந் தெரிந்ததே. இதனேடியைந்த இரண்டுலாக்களையும் அடுத்து உரை விளக்கம் வரைந்து வெளியிடும் ஆர்வம் உடையேம்.

செந்தமிழ்ப் பற்றுள்ள செல்வர், மாணவர், ஆசிரியர் அனைவரும் கற்று இன்புறுவதற்கேற்ற நூல் ஆகும் இது. ஆதலால், வாங்கிக் கற்றும் கற்பித்தும் நற்பயன் பெறுக.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# ஆராய்ச்சி உரை

## சிற்றிலக்கியங்கள்

"**விக்கிரமசோழனுலா**" என்னும் நூல், ஒட்டக் கூத்தர் என்ற புலவராலியற்றப்பட்டது. விக்கிரம சோழனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. பிற்காலப் புலவர்களாற் பாடப்பட்ட சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது. சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். அவற்றைப் பிரபந்தம் என்று முன்னோர் பெயரிட்டு வழங்கியதாக அறிகின்றோம். கலம்பகம், பிள்ளைத் தமிழ், உலா, மடல், தூது, கோவை, பரணி, குறவஞ்சி, பள்ளு இவை போல்வன பிரபந்தங்கள் என அறிக. நம் தமிழ்மொழியில் மேற்கூறிய சிற்றிலக்கியம் தொண்ணூற்றாறும் உள்ளனவா? என்று ஆய்ந்தால் சில உள்ளனவென்று கூறுமளவிற்கு நூல்கள் உள்ளன. எல்லாவற்றிற்கும் இலக்கணங்கூறும் நூலும் இது காறும் கிடைத்திலது. பன்னிரு பாட்டியல், வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல் ஆகிய நூல்கள் சிற்றிலக்கியங்கள் சிலவற்றிற்குத் தாம் விதி கூறுகின்றன. பல பெயரளவில் உள்ளன.

### உலா

"உலா" என்னும் நூல், பாட்டுடைத்தலைவன் பல நாட்களோ ஒரு நாளோ பவனி வரக்கண்டு பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற எழுவகைப் பருவ மங்கையரும் காதல் கொண்டு மயங்கி நின்றனர் எனப் பொருளமைத்துக் கலி வெண்பாவிற் பாடுவதாகும். பன்னிரு பாட்டியலில் "முதனிலை பின்னெழு நிலை யுலா வெண்கலி" (131) என்றும், "பேதை முதலா வெழுவகை மகளிர்கண், டோங்கிய வகை நிலைக்குரியா னொருவனைக் காதல்செய் தலின்வருங்

கலிவெண் பாட்டே" (132) என்றும் விதி கூறப் பட்டுள்ளது. வெண்பாப்பாட்டியலிலும் "திறந் தெரிந்த பேதை முதலெழுவர் செய்கை மறந்தயர வந்தான் மறுகென் - றறைந்தகலி, வெண்பா வுலாவாம்" என அவ்விதியே கூறப்பட்டுள்ளது. பெருங் காப்பியங்களிலும் சிறுகாப்பியங்களிலும் தலைவர்கள் உலா வந்தார்கள். கன்னியர்கள் கண்டு காதல் கொண்டு மயங்கி நின்றனர் என்ற பொரு ளமைத்துப் புலவர்கள் பாடியிருப்பது காணலாம். அப்பொருள்தான் உலாவி லமைந்துள்ளது. உலாப் புறம் "என்றும் இதனைக் கூறுவர். புறப்பொருளைச் சார்ந்த பெண்பாற் கைக்கிளையாதலாற் புறம் என்பதைக் குறித்தது எனக் கொள்க. புறத்தே உலா வருதலைக் குறித்தலால், இது உலாப்புறம் என்று பெயர் பெற்றது என்பாரும் உளர். "பாட்டுடைத் தலைவன் உலாப்புற வியற்கையும்" எனப் பொய்கையார் பாடிய (பன்னிரு. சூத். 131 மேற்.) தாகக் காட்டியிருப்பதும், நச்சினார்க்கினியர் "திருவுலாப்புறம்" (தொல். செய். சூ. 160 உரை) என வரைந்திருப்பதும் இதனை வலியுறுத்தும்.

### உலா நூல்களின் பெயர்

உலா நூல்கள் பல உள்ளன. திருக்கைலாய ஞானவுலா, விக்கிரமசோழனுலா, குலோத்துங்க சோழனுலா, இராசராசசோழனுலா, சங்கரசோழ னுலா, ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை, ஞானவிநோதனுலா, சிவஞானபாலையதேசிகனுலா, சிவந்தெழுந்த பல்லவராயனுலா என்பன போல்வன அவை.

### விக்கிரமசோழன் அரசுபுரிந்த காலம்

இவ்வுலாவின் பாட்டுடைத்தலைவன் விக்கிரமன் என்பது முன் கண்டோம். அம்மன்னன் பெருமை யும் காலமும் பிறவும் ஆய்ந்தறிதல் ஈண்டுத் தக்கதே.

இவன் இராசகேசரி முதற்குலோத்துங்கனுக்கும் மதுராந்தகிக்கும் பிறந்த எழுவரில் ஒருவன். இவனுடன் பிறந்தோர் இராசராசன், வீரசோழன், சோழகங்கன் ஆகிய மூவரே. மற்றை மூவர் பெண் மக்களாவார். ஆடவர்களில் இளையான் இவனே என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். கி. பி. 1118 ஆம் ஆண்டில் முடிசூடி யரசுகட்டிலேறினன். கி. பி. 1122 வரை தந்தையுடனிருந்து அரசு செலுத்தினன். சிதம்பரம் கோவில் திருப்பணி புரிந்த பெருமை இவனைச் சார்ந்ததே. "பூமகள் புணர" "பூமாது மிடைந்து" என்று தொடங்கும் கல்வெட்டு மெய்க் கீர்த்திகள் இச்செய்தியை நன்கு விளக்குகின்றன. இளமையிற் செய்த கலிங்கப்போர் நிகழ்ச்சியையும் அவை விளக்கும்.

## பரணி பாடிய செய்தி

இவன்மீது ஒட்டக்கூத்தர் கலிங்கப்போர் குறித் துப் பரணி நூல் ஒன்று பாடியதாகத் தெரிகிறது. தக்கயாகப் பரணி உரையாசிரியர் "முத்தின் கனங் குழையை" என்ற மேற்கோள் காட்டி, 'என்ருர் தாமே' என்று நூலாசிரியரையே சுட்டுவதும், குலோத்துங்கசோழனுலா, "வேற்ருேர், விரும் பரணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப், பெரும் பரணி கொண்ட பெருமான் - தரும்புதல்வன், கொற்றக் குலோத்துங்கன்" (27-29) என்று கூறுவதும், இராசராசசோழனுலா, "தரணியொரு கவிகை தங்கக் கலிங்கப், பரணி புனைந்த பருதி - முரணில் புரந்தர னேமி பொருவு மகில, துரந்தரன் விக்கிரமசோழன்" (27, 28) என்று கூறுவதும் இச் செய்தியை வற்புறுத்தும்.

## பஞ்சம்

இவன் அரசுபுரியும்காலத்தில் வடஆர்க்காடு தென்ஆர்க்காடு மாவட்டத்தில் வெள்ளக்கேடு நேர்ந்த

காரணத்தால் ஊர்ப்பொது நிலங்களை விற்று அரசாங்கவரி செலுத்தப்பட்டது என அறிகிறோம். கல்வெட்டு ஒன்றில் இவ்வெள்ளக் கொடுமை நிகழ்ந்தது பொறிக்கப்பட்டுள்ளது. "காலம்பொல்லாதாய் நம்மூர் அழிந்து குடி ஓடிப்போய்க் கிடந்தமையால்" என்பது அச்சொற்றொடர்த் தொடக்கம். அதனால் இவன் ஆறும் ஆண்டு ஆட்சியில் உணவுப் பஞ்சம் மிகுந்திருந்தது என அறியலாம்.

### சமயப் பொதுநோக்கம்

கூத்தப்பெருமானையே குலதெய்வமாகக்கொண்டவன் இவன். வருவாயிற் பெரும்பகுதியைத் தில்லைக் கோயிற் றிருப்பணிச் செலவிற்கே தந்தனனெனக் கல்வெட்டுக் கூறுகின்றது. நரலோக வீரன் தொடங்கிய திருப்பணிகள் யாவும் இவன் காலத்தில் நிறைவேறினவெனக் கொள்ளலாம். கூத்தப் பெருமான் திருக்கோயில் வெளிச்சுற்று முழுவதும் 'விக்கிரமசோழன் திருமாளிகை' என்றும், திருவீதிகளுள் ஒன்று 'விக்கிரமசோழன் தென்திரு திருவீதி' என்றும் கூறப்படுவதால், அவற்றை யமைத்தவன் இச்சோழமன்னனேயாவன் என்பது சொல்லாமலே விளங்கும். "சீரங்கம் கோயிலொழுகு" என்னும் நூலில், ஐந்தாம் மதிலும் சீராமன் கோயிலும், அகளங்கன் திருவீதி, விக்கிரமசோழன் திருவீதி என்னும் இருவீதிகளும், வேறு சில கட்டடங்களும் இவனாற் கட்டப்பட்டனவென்று வரையப்பட்டுள்ளது. இதனாற் பொதுநோக்குடையவன் என்பது புலப்படும்.

### பட்டப்பெயர், மனைவியர் பெயர், மைந்தன் பெயர்

தியாகசமுத்திரம் என்பதும், அகளங்கன் என்பதும் இவன் பட்டப்பெயர்களாம். இவன் மனைவியர் முக்கோக்கிழானடி, தியாகபதாகை, நேரியன்மாதேவியார், தரணிமுழுதுடையாள், திரிபுவன

முழுதுடையாள் எனக் கல்வெட்டிற் காணப்படு கின்றன. எத்தனை பேர் மனைவியர் இருந்தனர் என்பது தெரிய வழியின்று. குலோத்துங்கன் என்னும் ஒருவனே இவன் மைந்தன் எனத் தெரிகிறது.

## தலைநகர், தங்கும் இடம்

இவன் ஆட்சிக்கால முழுவதும் கங்கைகொண்ட சோழபுரமே தலைநகராயமைந்திருந்தது. பழையாறை, காட்டுமன்னார் கோவில் என இப்போது வழங்கும் வீர நாராயண சதுர்வேதிமங்கலம், குணிவள நல்லூர் இவைகளில் தங்கியிருந்து ஆணைவிடுத்தான் எனக் கல்வெட்டுக் கூறுவதால் மேற்குறித்த ஊர்களில் அரண்மனை இருந்தனவென எண்ணலாம். இக் குறிப்பினால் இவன் அரசுமுறை மக்கட்குப் பெருநலம் விளைவித்ததென நன்கு விளங்கும்.

திருமழபாடிக் கல்வெட்டு ஒன்றில் இவன் செய்த திருப்பணியும் திருவிழாவும் விரித்துப் பொறிக்கப் பட்டுள்ளது. அதனை அடியிற் காண்க:

"பத்தாம் ஆட்சி ஆண்டில் சிற்றரசர் தந்த தூய பொற்குவியல் பேரரசன்முன் வைக்கப்பட்டது. அப் பொழுது மணிகள் பதித்த பொற்றட்டில் கீழ்வருவன வரையப்பட்டன: மன்னன் நீண்டநாள் வாழ்ந்து உலகைக் காப்பானாக! செம்பொன் அம்பலஞ்சூழ் திரு மாளிகையும் கோபுர வாசல்களும் கூடசாலைகளும் பெருமாள் கோவிலைச் சூழவுள்ள கட்டடங்களும் பொன்னாக்கப்பட்டன. பலிபீடமும் பொன்னாற் செய்யப்பட்டது. முத்துமாலைகளால் அணிசெய்யப் பட்ட தேர்க்கோவில் பொன்னால் இயன்றது. இத் தேரில் கூத்தப்பிரான் பூரட்டாதியிலும் உத்திரட் டாதியிலும் உலாப்போவானாக. அப்பொழுது நடை பெறும் விழா "பெரும் பெயர் விழா" எனப்படும். நிறைமணி மாளிகை நெடுந்தெரு ஒன்றும் அமைக்கப்

பட்டது. இத்தெரு அரசன் பெயர் பெற்றதாகும். பைம்பொன் குழித்த பரிகலம் முதலாகச் செம்பொற் கற்பகத்தோடு பரிச்சின்னமும் அரசனுல் கோவிலுக்குத் தரப்பட்டன. இத்திருப்பணி அரசனது 10 ஆம் ஆண்டில் சித்திரைத் திங்களில் அத்த நட்சத்திரம் கூடிய ஞாயிறன்று செய்யப்பட்டது.''

இதனுல் தில்லைக் கூத்தப்பெருமான் திருக்கோயிற் பணியில் இவன் உள்ளம் பெரிதும் பதிந்திருந்தது என்பது வெள்ளிடைமலை. சோழமன்னரனைவரும் சைவசமயத் துறையினின்று தனிப்பெருந் தொண்டு புரிந்து சமயத்தை வளர்த்தனர் என்பதை இலக்கியங்கள் பலவும் எடுத்தியம்பும். விக்கிரம சோழன் பெருமை முழுவதும் விரிக்கிற் பெருகுமென விடுத்தோம். நூலின் பெருமை நுவல்வோம்.

## நூல்

கூத்தரியற்றிய உலா மூன்றனுள் முன்னிற்பது விக்கிரமசோழனுலா. அடுத்தது குலோத்துங்கனுலா. மூன்ருவது இராசராசனுலா. இம்முறை நிற்பதற்குக் காரணம் முந்தையுலா, தந்தையுலா, பிந்தும்உலா, மைந்தருலா இம்முறையே யெனவறிக. புலவர்கட்கு முதன்மை யுடையதாய்த் தோன்றுவது இராசராசன் உலாவே. அடுத்த சிறப்புடையது விக்கிரமசோழனுலா. மூன்ருவதாக மதிக்கப்படுவது குலோத்துங்கனுலாவேயாம். இவ்வாறு கூறுதற்குக் காரணம் என்னையென வினவில் எடுத்துக்காட்டுகின்றேம். ''காசினியிற் பிள்ளைக் கவிக்கம்புலி புலியாம், பேசுமுலாவிற் பெதும்பைபுலி'' என்ற கவியின்படி பெதும்பைப் பருவச் சிறப்பு மிகவும் நுண்மையாக விளக்க வேண்டிய தொன்று. மூன்றுலாவினுமுள்ள பெதும்பைப் பருவ வருணனையை யெடுத்தாய்ந்து காணுங்கள். குலோத்துங்கனுலா கண்ணி 141 முதல் 146 வரை ''உலகமுழுவதும் அழிப்பதற்கு முடியை

யுடைய மன்மதன் சூட்டிய கிரீடம் போன்ற உச்சிக் கொண்டையை யுடையவள்; அக்காலத்தில் நீராட்டிய தாரை வீழ்வதுபோலத் தாழவிடப்பட்ட முத்தங் கோத்த பெரிய மாலையையுடையவள்; பாம்புகட்கு (பல் ஆகிய) அவ்விடத்தில் நஞ்சு ஊறுவது போல வும் யானைகட்கு எல்லாம் மதமூறுவது போலவும், கொலைத் தொழில் ஊறுகின்ற விழியுடையாள். அடங்காத வயிரமுடைய இயமன் பெண்ணுருக் கொண்டு வந்த வடிவமோ இதுவென்று ஐயங் கொண்டார், அவ்வையம் நீங்காமலிருப்பதற்கேற்ற அழகுடையவள். உயிர்ப்பார்வை கொல்லியிலும் உண்டு திரிகூடமலையிற் சொல்லிக்கிடக்கின்ற துணை மணிக்கும் உயிருண்டு. அவற்றைப்போல இவ்வல்லிக் கும் நடைவாய்த் துயிர் வாய்த்தது என்று கூறும்படி செருக்கும்ஒருபெண்'' எனப்பெதும்பையை வருணித் தார். விக்கிரமன் உலாவில் 134-143 வரை பெதும் பையை வருணிக்கின்றார். உரை காண்க. இராசராசன் உலாவில் 133 முதல் 145 வரை பெதும்பைப்பருவம் பேசப்படுகின்றது. அதன் பொழிப்பு அடியிற் காண்க.

''ஆயிரம் வலம்புரி சூழவருஞ் சலஞ்சலம்போல மகளிருட் சிறந்தவள். அன்னம் தன்னடையைக் கற்றுத் தன்னுடன் நடக்கும்படி நடப்பவள்; கிளி தான் பேசியபின் பேசும்படி பேசுவாள்; இனிய வீணையினிசைபாட, அதனுடன் பாடுவாள்; பசிய தோகைமயில் ஆட அதனோடு ஆடுவாள்; சேர்ந்த நல்லிளமான் நோக்கும்படி பார்ப்பாள்; நாணம் நிறைந்து முல்லையரும்பு அரும்பப் புன்முறுவ லரும்புவாள்; கொல்லும் இளமையான யானையின் கொம்பு பின் எழும் என்றும், பாம்பின் குட்டிக்குப் பின் பல் எழும் என்றும், பழகி இடிக்கின்ற ஒலியால் முகில் பின் எழும் என்றும் உலகம் அறியும். அது போல முலையெழும் இவட்குப் பின் என்று உலகம்

அறியும்படியிருக்கும் அன்னம் போன்றவள். "ஏழு மலையிலுள்ள வயிரமும், ஏழு கடலிலுள்ள முத்தினமும் 'ஏழு புவியிலுள்ள பொன்னும், ஏழு பாதலவுலகினுள்ள போகாத விருளும் நீங்கும்படி ஒளிவிடுகின்ற பாம்பின் முடியிலுள்ள நாகமணியும், இன்னும் ஏழு பூஞ்சோலையினுமுள்ள மலர்களும் புனைவாள்; 'அவ்வாறு புனைந்தால் நாளையே இவள் மேல்பாரம் மிகும்; மிகவும் வருந்துவோம் நாம் இங்கிருந்தால்' என்று கருதி, உடல் நினைக்கும்போதே தூரத்தே போக எண்ணுகின்ற இடை யுடையாள்; மேகம்போன்று புடை விரிந்து கூந்தல் இளைஞருயிரை மறைப்பதற்கு முன் இருகடையும் சென்று உலகத்தை யளந்துவருங் கண்ணுடையவள். தன்னுடைய சேரியிற் சிறுசோறு, சிற்றில், சில்லணி இவைகளை நீக்கிப் பெரியமனை, பெருஞ்சோறு, பேரணி இவைகளை விரும்புவாள். விளையாடும் இடத்தில் பெண்கள் நிற்க, ஒப்பற்ற சோழன் தனக்குக் கொடுத்த மாதர் கூட்டம் வணங்கும்படி வீற்றிருப்பவள்."

பெதும்பைப் பருவத்திற்குரிய பண்பு ஒன்றுங் கூருது விடுத்தார் குலோத்துங்கன் உலாவில், விக்கிரமன் உலாவில் அப்பருவத்திற்குரிய மழலை வார்த்தையைக் கிளிக்குக் கொடுத்துக் குழலோசைபோல இன்பந்தரும் சொற்கள் பேசக் கற்றுக்கொண்டாள் என்பது முதற் பண்புகள் பல விரித்துக் கூறுகின்றார். இராசராசன் உலாவில் அதனினும் சிறப்பாகச் சொற்சுவை பொருட்சுவை தோன்றும்படி பெதும்பைப் பருவத்தை விரித்து வருணித்திருப்பது காண்க. ஓரிடத்தை மட்டும் எடுத்துக் காட்டினேம். உலா முழுதும் ஆய்ந்து காண்கினும் இராசராசன் உலாவே சிறப்புறத் தோன்றும் என்பது திண்ணம். குலோத்துங்கனே, கூத்தர்க்குச் சிறந்த மன்னன் என வரலாறு கூறவும் நூல் இவ்வாறு அமைந்தது அவ்வமையம் உள்ள நிலையே யென உய்த்துணர்க.

## நூலின் முறைவைப்பு

இதுகாறும் கூறிய விளக்கத்தால் மூவருலாவில் விக்கிரமசோழனுலா நடுவாகி மதிக்கத்தக்கது என நன்கு விளங்கும். பாடிய முறையில் முன்வைத்தெண்ணப்படுவது இது. இவ்வுலாவிலுள்ள கண்ணிகள் 342 ஆகும். கண்ணி என்பது கண்போல இரண்டு இணைந்து நிற்பது. முதல் 23 கண்ணிகளும் சோழர் குலந்தோன்றிய காலந்தொட்டு வழிவழியாக ஆண்ட மன்னர்களிற் சிறந்தோர்களை எடுத்துக் கூறுகின்றன. 24 முதல் 27 வரையுள்ளவை முதற் குலோத்துங்கன் சிறப்பும் செயலும் கூறுகின்றன. 28 முதல் 35 வரை விக்கிரமசோழன் பிறப்பும் சிறப்பும் அரசுபுரியும் ஆண்மையும் பிறவும் காணலாம். பின்னர்ப் பள்ளியெழுச்சி, நீராடல், தெய்வ வணக்கம், கொடை, அணி புனைதல், உலாவிற்குப் புறப்படல் 52 கண்ணிவரை கூறுகின்றார். 64 வரை பட்டத்து யானைச் சிறப்புப் பலபடப் புனைந்துரைக்கின்றார். யானைமீதமர்ந்து பவனி வருவதும் உடன் வருவோர் தொகையும் 90 கண்ணி வரை தொடர்ந்து கூறப்படுகின்றன. பவனி காணும் பரத்தையர் குழாம், அவர்கள் கூற்று அதன் பின்னர் வருகின்றன. பேதை (113-133), பெதும்பை (134-162), மங்கை (163-192), மடந்தை (193-227), அரிவை (228-262), தெரிவை (263-305), பேரிளம்பெண் (305-327) ஆகிய ஏழு பருவப்பெண்கள் வனப்பும் பண்பும் செயலும் காதலும் மயக்கும் முறையே காணப்படுகின்றன. பின் பாங்கியர் பலர் ஏங்கிநின்று தந்தலைவியைப் புரக்குமாறு வேண்ட, விக்கிரம சோழன் உலாப் போந்தான் என விளம்பி முடிக்கின்றார்.

## பொருத்தம்

"சீர் தந்த" எனமுதற்சீர் அமைந்திருப்பதை நோக்கின் இந்நூலாசிரியர் காலத்திற்கு முன்னரே பொருத்தம் பார்த்து நூல் இயற்றும் வழக்கம் உண்மை

புலனும். சீர் என்பது மங்கலச் சொல்லாதலின் மங்கலப் பொருத்தம் அமைந்தது. அச்சீர் வகையுளி சேர்தல், வனப்பின்ருய் நிற்றல், பொருள் பலவாத் தோன்றல், பொருளின்மை, ஈறுதிரிதல் ஆகிய குற்றமின்றி நிற்றலிற் சொற் பொருத்தமும் அமைந்துள்ளது. அச்சீரின்கண் எழுத்துக்கள் ஐந்து ஆதலின் எழுத்துப் பொருத்தமும் இயைந்தது. 'வி' என்ற இகரவுயிர்க்கும் 'சீ' என்ற ஈகார உயிர் ஏறி நிற்கும் சொல் வைத்திருப்பதால், தானப்பொருத்தத்திற் பாலப் பொருத்தம் ஆயிற்று. மங்கலச்சொல்லே யடுத்து நிற்கும் எழுத்து குறில். அஃது ஆண்பாலுக்குரியது. அதனுற் பாற் பொருத்தமும் பொருந்திற்று. நஞ்செழுத்து அச்சீரிற் வந்திலது. அதனுல் உண்டிப் பொருத்தமும் உள்ளது. அரசர் குலத்திற்கு மெய்யில் தகரமுதல் ஆறு உரிமையுடையனவாதலின் 'தந்த' என வருணப்பொருத்தமும் வந்தது. பாட்டுடைத் தலைவனின் முதலெழுத்து 'வி' என்பது. அதற்குரிய நாள் உரோகிணி; முதற்சீரில் முன் எழுத்து 'சீ'. அதற்குரிய நாள் இரேவதி. உரோகிணி முதல் எண்ணும்போது மூன்ரு மொன்பதில் ஆரும் நாளாக இரேவதி அமைகிறது. அதனுல் நாட்பொருத்தமும் நன்கமைந்துள்ளது. இச்சீரில் மங்கலச் சொல் நீக்கி மற்றுள்ள எழுத்துக்கள் தேவகதிக்குரிய எழுத்துக்களாதலாற் கதிப்பொருத்தமும் காணலாம். நேர் நேர் நேர் ஆகிய மூன்றசைச்சீர் ஆதலால் அது நற்கணங்களுள் ஒன்ருகிய இயமான கணப்பொருத்தம் ஆயிற்று. எனவே, பத்துப் பொருத்தமும் பார்த்து முதற்சீரமைத்து நூல்பாடினர் எனக் காண்க. அக்காலத்து மன்னர் முதலியோர் பொருத்தமின்றிப் பாடிய நூல்களை யேற்றுப் பரிசு வழங்குதலின்று எனவும், ஏற்பின் தமக்குக் கேடு விளையும் என அஞ்சினர் எனவும் அறியலாம். இக்காலப் புலவர் பலர் பொருத்தமறியாதே நூல் பல புனைவன காண்கின்ருேம்.

## தொடை

இது கலிவெண்பா என்னும் பாவினாலமைந்தது. வெண்டளைபெற்று இரண்டாமடி தனிச்சொற்பெற்று இவ்விரண்டடி ஒரெதுகையாகி முடிவிற் சிந்தடி பெற்று இறுதி 'மலர்' என்ற வாய்பாட்டால் முற்றுப்பெற்றது. மோனை அடிதோறும் மூன்றாஞ் சீரிலாவது நான்காஞ் சீரிலாவது பொருத்தியிருக்கின்றார். எதுகையும் மோனையும் இல்லாத கண்ணிகள் இந்நூலில் எங்கணும் இல்லை. "தெரியாப் **பெருங்கட் சிறுதேறல்**" (231), **மதியும் பகலவனும்** தோற்கும் (245), யாங்கொள்ளும் வண்ண**மெளிதோ வரிதென்ன** (263), **செய்ய கரிய** திருமாலை (316) **தொழுதாளயர்ந்தா டுளங்கினாள் சோர்ந்தாள்** (435), **கொடுத்தன** கொங்கைகளும் **கொண்டன** (444) இவைபோல முரண்டொடையமைந்துள்ள இடம் பல இந்நூலில் உள்ளன. எனவே, மோனை எதுகை முரண் என்பவை தாம் இடம் பெற்றன. இயைபுக்கும் அளபெடைக்கும் இடமில்லை இந்நூலில். ஆய்ந்தறிக.

## அணி

"மறைக்கொழுந்தை வெள்ளி மலைக்கொழுந்தை மோலிப்
பிறைக்கொழுந்தை வைத்தபிரானை"—(83, 84)

"தாயர் வரவந்து தாயர் தொழத் தொழுது
தாயர் மொழிந்தனவே தான்மொழிந்தாள்"—(243, 244)

"கூன வியாழெடுத்தான் பாணன் கொதித்தெழுந்து
வேன லரசனுந்தான் வில்லெடுத்தான்"

"தந்திரி யாழ்ப்பாணன் தைவந்தான் தைவந்தான்"

"நிறைநரம்பு பண்ணி நிலைதெரிந்தான் பாணன்
திறன்மதனு மம்பு தெரிந்தான்"

"பாணனொருபாணி கோத்தான் பலகோத்தான்"—(547-553)

இக்கண்ணிகளில் வந்த சொல்லே பின்னும் வந்திருப்பதால் பின்வருநிலையணி யமைந்துள்ளன. பவனி கண்ட மங்கையர் இயற்கையை 214 முதல்

224 வரையுள்ள அடிகள் இயம்புகின்றன. ஆதலால் தன்மை நவிற்சியணி ஆங்கமைந்துள்ளது காண்க. பட்டத்துயானையின் சிறப்புப்பகரும்போது "வானே முழங்கினும்......தணியும் யமராச தண்டம்" (106-108) எனவும், "ஊறுமந் தனதேயாக......களித்தென வென் றுவக்குங் காற்று" (114-124) எனவும் உலக நடையிறப்ப உயர்வு கூறியிருப்பதால் ஆங்கு உயர்வு நவிற்சியணியுண்மை யறிக. "புல்லாத மன்னர்...... வாங்கு வரி சிலைக்கை வாணனும்" (151-154) என்ற இடத்தில் "பேய் பகைவர் உடம்பை வாங்க, இயமன் உயிரை வாங்க, மகளிர் தத்தங் குழை வாங்க வரிசிலைக்கை வாங்குவாணன்" எனக் காரணமும் காரியமும் ஒருங்கு நிகழ்வதாகக் கூறியுள்ளது ஒருங்குடன்றோன்றும் ஏதுவணியாம். வில் வளைத்த போது பகைவர் இறப்பர். இறந்தபோது அவருடம்பைப் பேய் பற்றும்; இயமன் உயிரைப் பற்றுவான்; அப்பகைவர் மகளிர் அந்நிகழ்ச்சியறிந்து தம்முடைய காதணி மங்கல வணிகளைக் களைந்து கைம்பையாவார். இச்செயல்கள் யாவும் ஒருங்கே நிகழும் எனக் கூறியது பாராட்டற்பாலதன்றோ? உலாவைக்காணு மகளிர் கூட்டத்தை மணற்குன்றத் தன்னம் போன்றும், கொண்டலின் மின்னுக் குழாம் போன்றும், "திரைதொறுந் தோன்றும் திருக் குழாம் போன்றும், வரைதொறுஞ் சேர்மயில்கள் போன்றும்" (190-202) என்றும் உவமை காட்டி யிருப்பது வியக்கத்தக்கதன்றோ? ஈங்கு உவமையணி யமைந்திருப்பதை உணர்க. "கோது விரவாக் கொழும்பாகு, போது புலராப் பொலங்கொம்பு, முயலா லழுங்கா முழுத்திங்கள்...அருந்தத் தெவிட்டா வமுதம்" (525-534) வரையுள்ள அடிகள் விலக் குருவகம் அமைந்துள்ளது காண்க. இத்தெரிவை வெல்லப்பாகுதான். ஆயினும், அவ் வெல்லப்பாகில் கரும்பின் சக்கை விரவும். இத்தெரிவையிடம் அது போன்ற கோது ஒன்றும் விரவாது என விளங்கும்

படி விலக்கி யுருவகம் கூறியிருப்பது காண்க. மழலை தனது கிளிக் களித்து வாய்ந்த குழலினிசை கவர்ந்து கொண்டாள்....பிடி நடைபெற்றுப் பெயர்வாள்" (269-280) என்று பெதும்பைப் பருவப்பெண் சிறப்புப் பேசும்போது தன்பாலுள்ள ஒரு பொருளைக் கொடுத்து அதற்கு மாற்முக மற்ருெரு பொருளினை வாங்கிக்கொண்டாள் அவள் என நயந்தோன்ற உரைத்தது நல்லணியன்ருே? அது பரிவருத்தனையின் பாற்படும்.

"செங்காந் தளங்கை சிவக்குஞ் சிவக்குமென்
றங்காந்து தோள்வளைக ளார்ப்பெடுப்ப......மைக்கோல
வோதியின்மேல் வண்டிரங்க"— (409 - 416)

இவ்வடிகளில் கைசிவக்குமென்று கூறுவது போல் வளையலொலித்தன; இடை வருந்தும் என்று கூறுவது போல் கலாபம்இரங்கின; சிற்றடி வருந்துமென்று கூறுவதுபோற் சிலம்பு புலம்பின; கை வருந்தும், இடை வருந்தும் அடிவருந்தும் என்று கூறுவதுபோல் வண்டுகள் ஒலித்தனவென்று பொருளமைத்திருப்பது கவிஞர் கற்பனைத்திறத்தைக் காட்டுகின்றது. இது தற்குறிப்பேற்றவணியாம். இவ்வணி பலவிடங்களில் பல வேறுபாட்டுடன் வந்திருப்பதை நூலுட் காண்க. "விந்தமே போலப் புதைய நடந்த பொருப்பே" (592) எனவும் "நிருப பன்னகங்கள் வீழ இடிக்கும் தனியசனி யேறே" (585, 586) எனவும், "வண்டு, புடைபோகப் போதும் பொருப்பே" (599, 600) எனவும் உருவகவணி வந்துள்ளது காண்க. இங்ஙனம் பலவகையணிகள் அமைந்து இந்நூலை யுயர்த்திக்காட்டும் உண்மையை உற்று நோக்குங்கள். கவிச்சக்கரவர்த்தி என்ற பெயர்க்கேற்ப, அவர் பாடிய நூல்களும் தனிச்சிறப்புடையன மற்றை நூல்களினும் என்பதை அறிஞர் கண்டு தெளிக.

கூத்தர் கற்பனைத் திறத்திற் சிறந்ததொன்று காட்டுவாம். மடந்தைப்பருவமுடையா ளொருத்தி வந்து பவனி கண்டாள்; காதல் கொண்டாள்; "தொழுதாள் அயர்ந்தாள் துளங்கினாள் சோர்ந்தாள் அழுதா ளொருதமிய ளாயினாள்" (435, 436) என்றார். பின் அவள் உடை நெகிழ்ந்தன; மேகலை நெகிழ்ந்தன; மார்பிற் கட்டிய கச்சுக் கழன்றன; மேலாடை கழன்றன; கண்ணீர்த் துளிகள் முத்துக்கோவை போல வழிந்தன; கண்ணிற் பசலை பூத்ததுபோலக் கொங்கைகளிலும் பசலைபோர்த்தன என்று கூறிக் காதலால் உடல் மெலிந்த மெய்ப்பாடு காட்டவந்த ஆசிரியர், உடையையும் மேகலையையும் போக்கி விட்ட அல்குலைக் கொங்கைகள் கவிழ்ந்து நோக்கித் தம்பா லுள்ள கச்சும் மேலாடையும் அதற்குக் கொடுத்தன என்றும், அக்கொங்கைகளின் செயலைக் கண்ட கண்கள் தம்பா லுள்ள முத்துக்கோவையையும் பட்டாடையையும் கொங்கைகட்குக் கொடுத்துதவின. கொங்கைகளும் அவற்றை ஏற்றுக்கொண்டன என்றும் கற்பிக்கின்றார். "உடுக்கை யிழந்தவன் கை போல" அவைகள் விரைவில் ஒன்றுக்கொன்று உதவி புரிந்தன எனக் கூறுவது எந்நூலினும் காணாத புதிய கற்பனையாகும். ஆருயிர் நண்பர்கள் ஓரிடத்திருந்தால் இவ்வாறு உதவவேண்டும் என்ற உலகியற்கையும் அக்கற்பனையுள் அமைந்து கிடக்கின்றது. இடையி லுடுத்திருந்த உடையும் புனைந்திருந்த மேகலையும் நெகிழ்ந்து அடியிற் கிடந்தன; கொங்கைகளை மறைத்துள்ள கச்சும் மேலாடையும் நெகிழ்ந்திழிந்து இடையை யடைந்தன. கண்களினின்று நீர்த்துளிகள் கோவையாக வழிந்தன கொங்கைமேல். கொங்கைகளும் பசலைநிறமாயின என்பது நாம் ஈங்குக் குறிப்பாக அறியவேண்டிய பொருள். முத்துக்கோவை உவமையாகுபெயராய்க் கண்ணீர்த் துளியையும் பட்டு உவமையாகுபெயராய்ப் பசலை நிறத்தையும் காட்டின எனக் கோடல் வேண்டும். (436-443.)

இனி இந்நூலில் இதனினும் சிறந்த கற்பனை யொன்று எடுத்துக்காட்டவியலாது. இந்நூல் கற்பனைக் களஞ்சியமெனக் கவிஞர் போற்றிப் புகழத்தக்க நூலாம்.

பிற்காலக்கவிஞர் நூல்களைப் போல மடக்கு, யமகம் முதலிய சொல்லணிகள் இந்நூலில் வந்தில. பெதும்பை யொருத்தி கனவு கண்டதைச் சிலேடையணியாகச் செப்புகின்றார். சொற்கள் இரு பொருட்கு இடங்கொடுத்து நிற்கின்றன. செம்மொழிச் சிலேடை எனக்கூறத்தகும். "தளரு மிடையொதுங்கத் தாழுங்குழைத் தாய்......கண்டு மகிழ்ந்தேன் கனவில்" (290-296) என்பது. அதனை உரையிற் கண்டு இருபொருள்கொண்ட முறையையும் விளக்கத்தையும் நோக்கி இன்புறுக. இலக்கணம் இலக்கியங் கற்றுப் பலவகை நூற்பயிற்சி யுடையார்க்கே இதன் பொருள் விளங்கும். ஏனையோர்க்கு இந்நூலின் பொருள் எளிதில் விளங்காது என்பது தேற்றம்.

ஈற்றில் தோழியர் கூற்றில் வந்துள்ள ஒரு தொடர் எடுத்துக் காட்டுகின்றோம் இந்நூலின் அருமை யறிவதற்காக.

"புயல்வளவ!
மன்னிய தொண்டை வளநாடு வாளியும்
பொன்னி வளநாடு பூஞ்சிலையும் - கன்னித்
திருநாடு தேரும் குறையறுப்பச் செய்தல்
தருநாண் மடமகளிர் தம்மை - யொருநாளவ்
வேனற் கரசன் விடுமே பவன்சிலைமிப்
பானற்கண் ணல்லா ருயிர்ப்பரமே - ஆனக்கால்
குன்றே யெனத்தகுகின் கோபுரத்தற் றூங்குமணி
யொன்றே யுலகுக் கொழியுமே"—(672-680)

இதனை யாய்ந்து, ஆசிரியர் கருத்தறிதல் மிகவும் அருமையாயுள்ளது. உரைபாராது செய்யுளை மட்டும் படித்துச் சிந்தித்துப் பார்ப்பின் புலமையுடையார்க்கு இந்நூலின் அருமை பெருமை தோன்றும். படித்த

வுடன் ஆசிரியர் கருத்தினை யறிந்து பொருள் கூறும வல்லமையுடையவர் எவரோ, அவர் தம்மைச் சிறந்த புலவரெனத் தாமே மதித்துக்கொள்ளலாம். எத்தனை தரம் படித்து ஆய்ந்து பொருள் காண்பரோ அத்தனைக்கு அவர் புலமையை அவர் மதித்துக்கொள்ளத் தகும். புலமைக்கு அளவுகோலாகக் கொள்ளலாம் போலும் இத்தொடரை. அத்துணைக் கருத்துக்கள் இத்தொடரில் அமைந்துகிடக்கின்றன என்பது எம் கருத்து.

எம்போன்றூர்க்கு இந்நூல்போன்ற நூற்கருத்துக்களை விளக்குவது எளிதன்று. எனினும்,கருத்துக்கெட்டியவாறு எடுத்து விளக்கி இருக்கின்றோம். நுண்ணிய மதியுடையோர் எண்ணி இதனினும் விரிவுரை காண்பரேல் தமிழ்மொழிப் பெருமை தமிழகத்துச் சிறந்தோங்கும் என்பது ஒருதலை.

## ஆசிரியர் வரலாறு

### பேரும் ஊரும்

**விக்கிரமசோழனுலா** என்னும் இந்நூல் பாடிய ஆசிரியர் பெயர் **ஒட்டக்கூத்தர்** என்பது. கூத்தர் என்பது தில்லையிற் கோயில் கொண்ட சிவபெருமான் திருப்பெயராம். அதனையே அன்னை தந்தையர் இவர்க்கு இட்டு வழங்கினர் எனக் கொள்க. அப் பெயரை ஒட்டியது ஒட்டம் என்ற சொல்லே. ஒட்டம்-பந்தயம். ஒட்டம் வைத்துப் பாடிப் புகழ் பெற்றவராதலின் 'ஒட்டக்கூத்தர்' என வழங்கியது இவர் பெயர். விக்கிரமசோழன், உலாவில் உள்ள ஒரு கண்ணியை ஒட்டிப் பாடுக' வெனக் கேட்க, அவ்வாறே பாடியதால் வந்தது என்பதும், செங்குந்த மரபினர் வெட்டிக் குவித்த எழுபது தலைகளையும் ஒட்டப் பாடியதால் வந்தது என்பதும் பொருத்த மின்று. "ஒட்ட" என்ற செயவெனெச்சத்திற்கு முடிவு கூத்தர் எனக் கொள்ளல் எங்ஙனம் பொருந்தும்? ஒட்டம்—கூத்தர்—ஒட்டக் கூத்தர் என்பதுதான் பொருந்தும். ஒட்டம்—ஒட்டுதல் பொருள் தரும். ஆதலால், ஒட்டுதலைச்செய்த கூத்தன் என விரித்தால் அப்பொருட்கும் பொருந்தும்.

இவர் சோழநாட்டில் 'மலரி' என்ற ஊரிற் செங்குந்தமரபிற் பிறந்தனர். "மலரிவருங் கூத்தன்றன் வாக்கு" (தண்டிய.சூத்.49 மேற்.) என்பதும் கூத்த னூரிலுள்ள கல்வெட்டு ஒன்று (A. R. No. 109&110 & 1927—8) "மலரி கவிச்சக்கரவர்த்தி பெயரன் கவிப் பெருமாள் ஆனந்த வரத கூத்தனென்பான் கலைமக ளுருவை எழுந்தருளுவித்தான் என்பதும், இவர் பிறந்த ஊர் மலரிதான் என்பதற்குத் துணையாகும். செங்குந்தர் மரபு என்பதற்கு ஈட்டியெழுபது பாடிய வரலாறே சான்றாகும். இக்கூத்தனர் நெடுநாள்

கவிபாடும் வன்மையின்றி இருந்தாரெனவும், பின் சரசுவதி தேவியை வழிபட, அவள் மக்கள் வடிவில் வந்து தர்பலம் கொடுக்க வாங்கி யுண்டபின் கவி பாடும் வன்மை பெற்றனரெனவுங் கூறுப.

## புலமையும் தலைமையும்

இவர், விக்கிரமசோழன் அவைக்களப் புலவராக முதலில் இருந்து, பின் அவன் மைந்தன் குலோத் துங்கனுக்குத் தமிழ்க்கல்வி பயிற்றிக் குருவாகவும் அவைக்களப் புலவராகவும் இருந்து, அக்குலோத் துங்கன் மைந்தன் இராசராசனுக்கும் அவைக்களப் புலவராகவும் அமர்ந்திருந்தனர் என அறிகின்றோம். அவைக்களப் புலவர்களுட் சிறப்புவாய்ந்த தலைமைப் புலவராகவும், ஆங்கு வரும் புலவர்க்குத் தக்க பரிசில் உதவுமாறு சோழமன்னவர்க்கு எடுத்துக்கூறும் வன்மையுள்ளவராகவும் வாழ்ந்திருந்தனர். போலிப் புலவரைக் கண்டால் மனம் பொருது தலைதுணித் தலையே தமது பணியாகக் கொண்டனர். மன்ன ருடன்பாடும் பெற்றிருந்தனர் போலும். "வெட்டு தற்கோ கவியொட்டக்கூத்தனில்லை" எனப்பாடியது மெய்ம்மையேயாம். உலகவழக்கிறந்த உயர்ந்த வரு ணனைகளைப் பாடியதால் இவரைக் கௌடப்புலவர் எனக் கவிஞர் புகழ்ந்தனர். கௌடநெறி என்பது ஒருபொருளை அளவிறப்பப் புகழ்வது. விக்கிரமசோழ னுலாவில் பட்டத்து யானையை "அலைத்தோட ஊறு மதம்" 112 வரி முதல், 'என்றுவக்குங்காற்று' 124 அடி வரை புகழ்ந்திருக்கும் புகழ்ச்சிபோன்றவை யாம். இங்ஙனம் பாடுவது இவரதியல்பு என்பதை இவர் பாடிய நூல்களால் உணரலாம். தக்கயாகப் பரணி 29, 37, 85 தாழிசைகளாலும் பூதகணங்களை விரித்துக்கூறும் பகுதிகளாலும் விளங்கும். கவி ராட்சசன், கவிச்சக்கரவர்த்தி, சக்கரவர்த்தி, காளக் கவி, சருவக்ஞ கவி என்பன கூத்தரின் பட்டப்பெயர்

களாம். வடமொழிப் புலமையும் உடையாதலின் இப்பெயர்கள் இயைந்தன வென வழங்கினர்போலும்.

## சமயமும் பண்பும்

கூத்தரெனப் பெயர்பெற்றதற்கேற்பச் சைவசமயத்திற் பற்றுடையவரெனத் தெரிகின்றது. இவர் பாடிய தக்கயாகப்பரணி என்ற நூலில் கடவுள் வாழ்த்தில், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை வாழ்த்தி யிருப்பதும், அவர் கதையைக் கோயில் பாடியதிற் புகுத்தி விளக்கியிருப்பதும், தேவியைப் பலவிடங்களில் துதித்துப் போற்றியிருப்பதும் அதனைத் தெற்றெனவிளக்கும். அன்றியும், இவர் பாடிய உலா மூன்றிலும் பாட்டுடைத்தலைவர் தெய்வ வணக்கஞ் செய்து எழுந்தனரெனக் கூறும்போது "முன்னை மறைக் கொழுந்தை வெள்ளிமலைக் கொழுந்தை மோலிப்பிறைக்கொழுந்தை வைத்தபிரானைக்-கறைக் களத்துச், செக்கர்ப் பனிவிசும்பைத் தெய்வத் தனிச்சுடரை, முக்கட்கனியை முடி வணங்கி" (விக்கிர. வரி 82-86) எனவும் வழிமுதற்செஞ்சடை, வானவன் பொற்றாள் வணங்கி (குலோத். வரி 124, 125) எனவும், பவளச் சடையோன் பணித்தபடியே, தவளத் திரிபுண்டரஞ்சாத்தி......பார்த்திபர்தம் தொல்லைத் திருமரபுக்கெல்லாந் தொழுகுலமாம் தில்லைத் திருநடனஞ் சிந்தித்து (இராசராச. வரி 89-94) எனவும் சிறப்பாகச் சிவபெருமானைப் பாடியிருப்பதும் இதனை வலியுறுத்தும்.

இவர், கலைகளனைத்தையும் உள்ளத்தில் நிலைபெறச் செய்வதற்குரிய தனிச்சிறப்புடைய தெய்வமாகிய கலைமகளை என்றும் வாழ்த்திப் போற்றி வாழ்ந்தனரெனக் காண்கின்றோம். "கலைவாணி நீயுலகிலிருப்பதுவுங் கல்வியுணர் கவிவல்லோரைத் தலையாகக் காப்பதுவு மவர்நாவில் வாழ்வதுஞ்சத்தியமேயன்றோ" (தனிப்பாடற்றி. ஒட். 1) என்று

பாட, அரிந்த தலை யத்தனையும் ஒட்டி உயிர்பெற் றெழுந்தனர் செங்குந்தர் என்ற வரலாற்றினால் கலை மகள் இவர் ஏவிய பணியை இயற்றியதாக அறிகின்றோம். தக்கயாகப் பரணியில் துர்க்கை கலை மகளை நோக்கி, 'ஆளுடைய பிள்ளையார் வரலாற்றைக் கூறுக' எனப் பணித்தனள் என்றும், அதனைக் கூறக் கேட்ட துர்க்கை மனமுவந்து கலைமகளைத் தன்மருங்கு இருத்தினள் என்றும் புனைந்திருப்பதும் இவர் வாணியைப்பேணி மனத்துள் இருத்தியவர் என்பதை நன்கு விளக்கும். அன்றியும், தக்கன் யாகஞ்செய்த வரலாறு கூறும் நூல்கள் யாவும் நாமகள் நாசியை யரிந்தனர் வீரபத்திரர் எனக் கூறி யிருப்பவும் இவர் அதனை மட்டும் கூறாது விடுத்ததும் அதனை வலியுறுத்தும். சோழன் தனக்குப் பரிசிலாக அளித்த அரிசிலாற்றங்கரையடுத்த ஊரிற் கலைமகளுக் குத் திருக்கோயிலமைத்து வழிபட்டு வந்தனர் என்பதும், தக்கயாகப் பரணியில் "ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழியே" என்று வாழ்த்தியிருப்பது அத்தெய்வத்தையே என்றும் நாம் உய்த்துணரலாம். அவ்வூர் கூத்தனூர் என்று இன்றும் வழங்கப் படுகிறது. ஆங்குக் கலைமகள் திருக்கோயிலும் நன்னிலையில் உள்ளது.

புலவரெனப் பொய்க்கோலம் புனைந்து வருவோர் தலைகளை இவர் வெட்டினர் என்ற செயலொன்றே வெறுக்கத்தக்கது. இச்செயலினை இவர் தாமே மேற் கொண்டனரா? சோழமன்னர் பணியால் மேற் கொண்டனரா என்பது புலப்படவில்லை. "கள்வனைக் கோறல் கடுங்கோலன்று" என்று கூறியபடி அக் காலம் வஞ்சித்தொழுகு மதியிலிகளையும் கொல்லு மாறு அந்நாட்டு மன்னன் இக்கவிஞருக்குப் பணித் தனன் போலும். இன்றெனில் இச்செயல் இவர் புரி வதற்குரிமை யின்றே. விக்கிரமசோழன் காலமுதல் அவைக்களப் புலவராய், ஆங்கமர்ந் திருந்ததால் அம்

மன்னர்க்குரிய செயலினையவர் பணியால் மேற்கொண்டு புரிந்தனர் எனவே கோடல் வேண்டும். அரசனாணையின்றிக் கொலைத்தொழிலை மேற்கொண்டு புரிந்து வருதல் ஒருவரால் இயலுமோ? ஆய்ந்தறிக.

விக்கிரமசோழன், கூத்தருக்கு ஒரு காலத்தில் விருதுக் கொடியும் சின்னமும் பரிசிலாக அன்புடன் அளித்தனன். அதனைப் பெற்றபோது "மிகவும் இழிந்த என் தமிழ்க் கவிக்கு இத்துணைச் சிறந்த கொடியும் சின்னமும் வேண்டுமோ? உயர்ந்த தெய்வத்தன்மை வாய்ந்த புலவர்க்கு அளிக்கும் பரிசில் அன்றோ இவை? இவை பெறுதற்குரிய புலவர் இவர் இவரே" என்ற கருத்தமைய "பத்திக் கொண்டன திக்கும்" என்று தொடங்கி, "முத்துப் பந்தரினிற்கும் குருளைக்குஞ்சின வேன்முருகற்கும் பொதியக்கோ முனிவற்குஞ் சடிலக் கொத்தற்கும் பதுமக்கொந் தயனுக்கு மலதிக் கூழைத் தண்டமிழுக் கேன் கொடியுங் காளமுமே" என்று முடித்தனர் இதில் முத்துப் பந்தரினிற்கும் குருளையெனத் திருஞானசம்பந்தரை முன் வைத்திருப்பது அவர் மேற்சிறந்த அன்புடையவர் என்பதை நன்கு விளக்குகின்றது. அடக்கமும் பணிவும் இவர்பால் அமைந்திருந்தனவென இப்பாடலால் நாம் அறிகின்றோம். தம்மை யாதரித்த மன்னர்களாகிய சோழர்களையும், காவிரிப்பூம்பட்டினத்திருந்த பல வண்மையாளரையும், பல்லவராயனென்று பட்டம் பெற்ற நம்பிள்ளையையும் ஒவ்வோரமயத்துப் புகழ்ந்து பாராட்டிக் கவி பாடிச் சிறப்பித்திருப்பதால் இவர் நன்றியறியும் நற்பண்புடையவர் எனக் கூறலாம்.

கூத்தர் பெற்ற பரிசில்கள் பல. சோழமன்னரிலொருவன் அரிசிலாற்றங்கரைக்கண் ஓர் ஊரைப் பரிசாக அளித்தனன். அது கூத்தனூர் எனப் பேர் பெற்று இன்றும் உள்ளது. தமிழ் நாவலர்

சரிதையில் "இது சோழன் வரிசையளித்து விடுத்த போது கூத்தர் கூறிய வகுப்பு" என்ற தலைப்பின் கீழ்

"இடுக்கட் புண்படு விரப்புக் கொண்டுமன்
றிரக்கச் சென்றவின் றெனக்குச் சிங்களம்
திடுக்கிட் டஞ்சும்வெஞ் சினத்துச் செம்பியன்
றிருக்கைப் பங்கயஞ் சிறக்கத் தந்தன
படுக்கக் கம்பளம் பரக்கக் குங்குமம்
பதிக்கக் கங்கணம் பரிக்கக் குஞ்சரம்
கடுக்கக் குண்டலம் கலிக்கச் சங்கினம்
கவிக்கப் பஞ்சரம் கவிக்கத் தொங்கலே"

என்ற கவி வரையப்பட்டுள்ளது. விலையுயர்ந்த கம்பளம், குங்குமம், கங்கணம், குஞ்சரம், குண்டலம், சங்கினம், பஞ்சரம், தொங்கல் இவை பரிசிலாக வழங்கப்பட்டன வென அப்பாடல் உணர்த்து கின்றது. குஞ்சரம்-யானை, குண்டலம்—காதணி, சங்கினம்—வளையல்கள் அல்லது வலம்புரி முதலிய ஊதுகின்ற சங்குகள். பஞ்சரம்—கூடு அல்லது மட்கலம். தொங்கல் – வெண்குடை அல்லது தொடுத்த மாலை. மற்றவை வெளிப்படை.

இராசராச சோழனுலாவைப் பாடி யரங் கேற்றிய போது ஒவ்வொரு கண்ணிக்கு ஓராயிரம் பொன் பரிசில் வழங்கினன் எனத் தெரிகிறது. இதனை, "தெள்ளித்தும், முன்னு யகரிலவன் மூதுலாக் கண்ணிதொறும், பொன்னுயிரஞ் சொரிந்த பூபதி யும்" (சங்கரசோழனுலா) எனவும், "கூடல் நராதிபன் கூத்தனெதிர் கண்ணியோர் கண்ணிக் கொராயிரம்பொ னீந்த வுலாவும்" (தமிழ்விடு தூது) எனவும் பின்வந்த நூல்கள் கூறுவதால் உண்மை யெனத் துணியலாம். தக்கயாகப்பரணியின் இறுதி யில் "ஆதிக்கம் பெருக்குமடந்தை வாழியே" (813) என்று திருமகளைப் பாடியிருப்பது செல்வம் பரிசு

வரிசை பெற்றுச் சோழனவையிற் சிறப்புடன் வாழ்ந்தனர் என்பதைப் புலப்படுத்தும்.

கூத்தர் தமிழ்மொழியில் என்றும் பற்றுக் கொண்டே வாழ்ந்தனர் எனலாம். தமிழ்ப் புலவர் எவரும் தமிழ்ப்பற்றுடையவராகத்தாமே யிருப்பர். வேறு பற்றேது? அவர் வாழ்வே தமிழ்ப்பாப் பாடிப் பரிசில் பெற்று வாழ்வதுதானே! என்று சிலர் வினவலாம். ஆயினும், தமிழ்ப்பற்று என்றும் உள்ளதா? பொருள் பெருகிய பின் அப்பற்று நீங்கிப் பொருட் பற்றுக் கொண்டதா அவர் உள்ளம் என்பதுதான் ஆராய வேண்டுவது. மன்னரைச் சேர்ந்து பெருஞ் செல்வம் பெற்று வாழ்ந்தபோதும் தமிழ்மொழியை மறவாதே போற்றினர் எனக் கூறல் வேண்டும். தக்கயாகப் பரணியில் அகத்திய முனிவரை "ஒரு தமிழ் முனிவரன்" என்றும், பொதியின் மலையை 'தமிழ்க்குன்று' என்றும் தமிழ்ப் பொதியில் என்றும் (539, 489) பாடி யிருப்பதா லும், இராசராசனுலாவில் "செய்ய தமிழ் முழங்கத் தெய்வப்பொதியிலாய்" என்றும், "கோக்குந் தமிழ்க் கொத் தனைத்தும் வாழியே" "வாழி தமிழ்ச் சொற்றெரிந்த நூற்றுறைவாழி தமிழ்க்கொத் தனைத்து மார்க் கமும்வாழி திசைக்கப் புறத்து" ("நாற்கவி") என்றும் பாடியிருப்பதாலும் பற் றுண்மை என்றும் நீங்காதவர் எனவே கோடற்குச் சிறிதும் ஐயமின்று.

ஆசிரியரால் இயற்றப்பட்ட வேறு நூல்கள், அரும்பைத்தொள்ளாயிரம், ஈட்டியெழுபது, காங் கேயன் நாலாயிரக்கோவை, குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப்பரணி என்பன. இவர் ஒவ்வோரமயங்களில் ஒவ்வொரு பொருள்குறித்துப் பாடப்பட்டனவாகத் தமிழ்நாவலர் சரிதையிலும், தனிப்பாடற்றிரட்டிலும் காணப்படும் தனிப் பாடல்கள் பல. தக்கயாகப்பரணி 776 ஆம் தாழிசை

யுரையால் விக்கிரமசோழன் மீது கலிங்கப்போர் வெற்றியைக்குறித்துப் பரணிநூல் ஒன்று இவர் இயற்றியதாகத் தெரிகிறது. அந்நூல் 13ஆம் தாழிசையுரையில் அவ்வுரையாசிரியர் "முத்தின் கனங்குழையை யுங்குமிழை யுங்கதுவி முட்டுங் கருங் கயல்க ளின்கடைய டங்குவன" என்ருர்தாமே என்று சுட்டிக்காட்டியது அப்பரணி நூலில் வந் துள்ள தாழிசை யடியென்றே தோன்றுகிறது. "மோடி முன்றலையை வைப்ப ரேமுடிகுலைந்த குஞ்சியை முடிப்பரே, ஆடி நின்றுகுரு திப்பு துத்திலத மம்முகத்தினி லமைப்பரே" "மண்ணி னுளற வறுத்த தங்கடலை வைத்த பீடிகை வலங் கொள, விண்ணி ணுகியதன் யாக சாலைதொறு மீளவுஞ்சிலர் மிறைப்பரே" (சிலப்.5, வரி 79-88, அடியார்க்......மேற்கோள்) என வந்திருப்பன அப் பரணித் தாழிசைகள் போலும்.

ஒட்டக்கூத்தர் மூவருலாப் பாடியதால் இம் மூவரும் அரசுபுரிந்த காலமே இவர் வாழ்ந்த கால மாகும் எனத் துணியலாம். விக்கிரமசோழன் முடி புனைந்தது கி. பி. 1118 சூன் மாதம் 29ஆம்நாள் என்று தெரிவதாலும், இராசராசசோழன் கி. பி. 1146 ஆம் ஆண்டில் முடிபுனைந்தான் என்று தெரிவ தாலும், அம்மன்னன் கி. பி. 1173 ஆம் ஆண்டுவரை அரசு புரிந்தான் என்று தெரிவதாலும் 1118 முதல் 1173 வரையுள்ள ஆண்டுகளே இவ்வாசிரியர் வாழ்ந்த காலம் எனத் துணிந்து கூறலாம். பிறந்த காலம், இறந்தகாலம் காண்பதற்கு வழியின்று. பன்னிரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதியிலிருந்து பிற்பகுதி வரையும் வாழ்ந்தவரெனக் கொள்க.

———

உ

திருச்சிற்றம்பலம்

# விக்கிரமசோழனுலா

## சோழர் குலம் தோன்றிய வழிவழி மன்னர்

சீர்தந்த தாமரையாள் கேள்வன் றிருவுருவக்
கார்தந்த வுந்திக் கமலத்துப் - பார்தந்த
ஆதிக் கடவுட் டிசைமுகனும் ஆங்கவன்றன்
காதற் குலமைந்தன் காசிபனும் - மேதக்க
மையறு காட்சி மரீசியும் மண்டிலஞ்சேர்
செய்ய தனியாழித் தேரோனும் - மையல்கூர்
சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரின்
மைந்தனை யூர்ந்த மனுவோனும்-பைந்தடத்
தாடு துறையில் அடுபுலியும் புல்வாயுங்
கூடநீ ரூட்டிய கொற்றவனும் - நீடிய
மாக விமானந் தனியூர்ந்த மன்னவனும்
போக புவிபரந்த பூபதியும் - யாகத்துக்
கூற வரிய மனுக்கொணர்ந்து கூற்றுக்குத்
தேற வழக்குரைத்த செம்பியனும்-மாறழிந்
தோடி மறலி யொளிப்பமுழுதுமக்கட்
சாடி வகுத்த தராபதியுங் - கூடார்தந்
தூங்கும் எயிலெறிந்த சோழனும் மேல்கடலில்
வீங்குநீர் கீழ்கடலில் விட்டோனும் - ஆங்குப்
பிலமதனிற் புக்குத்தன் பேரொளியால் நாகர்
குலமகளைக் கைப்பிடித்த கோவும் - உலகறியக்
காக்குஞ் சிறுபுறவுக் காகக் களிகூர்ந்து
தூக்குந் துலைபுக்க தூயோனும் - மேக்குயரக்
கொள்ளுங் குடகக் குவடூ டறுத்திழியத்
தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனும்-தெள்ளருவிச்

சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும்-இன்னருளின்
மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும் - மீதெலாம்
எண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனும் - கண்கொண்ட
கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றங்
காதலாற் பொன்வேய்ந்த காவலனும்-தூதற்காப்
பண்டு பகலொன்றி லீரொன் பதுசுரமுங்
கொண்டு மலைநாடு கொண்டோனும்-தண்டினுற்
கங்கா நதியுங் கடாரமுங் கைக்கொண்டு
கங்கா புரிபுரந்த கற்பகமும் - வங்கத்தை
முற்று முரண் அடக்கி மும்மடிபோய்க் கல்யாணஞ்
செற்ற தனியாண்மைச் சேவகனும் - பற்றலரை
வெப்பத் தடுகளத்து வேழங்க ளாயிரமுங்
கொப்பத்தொருகளிற்றுற் கொண்டோனும்-அப்பழநூல்
பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியால்
ஆடரவப் பாய லமைத்தோனும் - கூடலார்
சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனும்-அங்கவன்பின்
காவல் புரிந்தவனி காத்தோனும் என்றிவர்கள்
பூவலய முற்றும் புரந்ததற்பின் - மேவலர்தஞ்

## விக்கிரமசோழன் பிறப்பும் சிறப்பும்

சேலைத் துரந்து சிலையைத் தடிந்திருகாற்
சாலைக் களமறுத்த தண்டினுன் - மேலைக்
கடல்கொண்டு கொங்கணமுங் கன்னடமுங் கைக்கொண்
டடல்கொண்ட மாராட் டரசை - அடலை
இறக்கி வடவரையே எல்லையாத் தொல்லை
மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி -அறத்திகிரி
வாரிப் புவனம் வலமாகத் தங்களிக்கும்
ஆரிற் பொலிதோள் அபயற்குப் - பார்விளங்கத்
தோன்றிய விக்கிரம சோழன் றொடைத்தும்பை
மூன்று முரசு முகின்முழங்க - நோன்றலைய

மும்மைப் புவனம் புரக்க முடிகவித்துச்
செம்மைத் தனிக்கோல் திசையளப்ப-வெம்மை
விடவுட் படுத்து விழுக்கவிகை யெட்டுக்
கடவுட் களிறுங் கவிப்பச் - சுடர்சேர்
இணைத்தார் மகுடம் இறக்கி அரசர்
துணைத்தாள் அபிடேகஞ் சூடப் - பணைத்தேறு
நீராழி யேழும் நிலவாழி யேழுந்தன்
போராழி யொன்றாற் பொதுநீக்கிச்-சீராழி
மேய திகிரி விரிமே கலையல்குல்
தூய நிலமடந்தை தோள்களினும் - சாயலின்
ஓது முலகங்க ளேழுந் தனித்துடைய
கோதில் குலமங்கை கொங்கையினும்-போதின்
நிறைகின்ற செல்வி நெடுங்கண் களினும்
உறைகின்ற நாளி லொருநாள் - அறைகழற்கால்

## துயில் எழுதல்

தென்னர் திறையளந்த முத்திற் சிலபூண்டு
தென்னர் மலையாரச் சேறணிந்து - தென்னர்
வரவிட்ட தென்றல் அடிவருட வாட்கண்
பொரவிட்ட பேராயம் போற்ற - விரவிட்ட
நித்திலப் பந்தர்க்கீழ் நீணிலாப் பாயன்மேல்
தொத்தலர் மாலைத் துணைத்தோளும்-மைத்தடங்
கண்ணு முலையும் பெரிய களியன்னம்
எண்ணு முலகங்க ளேழுடைய-பெண்ணணங்கு
பெய்த மலரோதிப் பெண்சக்ர வர்த்தியுடன்
எய்திய பள்ளி யினிதெழுந்து - பொய்யாத

## கடவுள் வணக்கம்

பொன்னிப் புதுமஞ் சனமாடிப் பூசுரர்கைக்
கன்னித் தளிரறுகின் காப்பணிந்து - முன்னை
மறைக்கொழுந்தை வெள்ளி மலைக்கொழுந்தைமௌலிப்
பிறைக்கொழுந்தை வைத்த பிரானைக் - கறைக்களத்துச்
செக்கர்ப் பனிவிசும்பைத் தெய்வத் தனிச்சுடரை
முக்கட் கனியை முடிவணங்கி - மிக்குயர்ந்த

## அணிகலன் புனைதல்

தானத் துறைமுடித்துச் சாத்துந் தகைமையன
மானக் கலன்கள் வரவருளித்-தேன்மொய்த்துச்
சூழு மலர்முகத்துச் சொன்மா மகளுடனே
தாழு மகரக் குழைதயங்க - வாழுந்
தடமுலைப் பார்மடந்தை தன்னுடனே தோளிற்
சுடர்மணிக் கேயூரஞ் சூழப் - படருந்
தணிப்பில் பெருங்கீர்த்தித் தைய லுடனே
மணிக்கடகங் கையில் வயங்கப்-பிணிப்பின்
முயங்குந் திருவுடனே முந்நீர் கொடுத்த
வயங்கு மணிமார்பின் மல்க - உயங்கா
வருங்கொற்ற மாக்கு மணங்கி னுடனே
மருங்கிற் றிருவுடையாள் வாய்ப்பத் - திருந்திய
அண்ணற் படிமத் தரும்பே ரணியணிந்து
வண்ணத் தளவில் வனப்பமைத்துக் - கண்ணுதலோன்

## அரண்மனைப் புறம் வருதல்

காமன் சிலைவாங்க வாங்கிய கட்டழகு
தாம முடிவணங்கத் தந்தனைய - காமருபூங்
கோலத் தொடுபெயர்ந்து கோயிற் புறநின்று
காலத் ததிருங் கடாக்களிறு—ஞாலத்துத்

## பட்டத்து யானைச் சிறப்பு

தானே முழங்குவ தன்றித் தனக்கெதிர்
வானே முழங்கினுமவ் வான்றடவி - வானுக்
கணியு மருப்பும் அடற்கையும் இன்மைத்
தணியும் யமராச தண்டந் - தணியாப்
பரிய பெருங்கோ டிணைத்துப் பணைத்தற்
குரிய தொருதானே யாகிக் - கரிய
மலைக்கோ டடைய மடித்திடியக் குத்துங்
கொலைக்கோட்டு வெங்கால கோபம்-அலைத்தோட
ஊறு மதந்தனதே யாக உலகத்து
வேறு மதம்பொரு வேகத்தாற் - கூறுன்றத்

தாங்கிப் பொறையாற்றுத் தத்தம் பிடர்நின்றும்
வாங்கிப் பொதுநீக்கி மண்முழுதும் - ஓங்கிய
கொற்றப் புயமிரண்டாற் கோமா னகளங்கன்
முற்றப் பரித்ததற்பின் முன்புதாம்-உற்ற
வருத்த மறமறந்து மாதிரத்து வேழம்
பருத்த கடாந்திறந்து பாயப் - பெருக்கத்
துவற்று மதுரச் சுவடுபிடித் தோடி
அவற்றி னபரங்கண் டாறி - இவற்றை
அளித்தன னெங்கோமான் ஆதலால் இன்று
களித்தன வென்றுவக்குங் காற்று - நெளித்திழிய
வேற்றுப் புலத்தை மிதித்துக் கொதித்தமரில்
ஏற்றுப் பொருமன்னர் இன்னுயிரைக் - கூற்றுக்
கருத்தும் அயிரா பதநின் றதனை
இருத்தும் பிடிபடியா வேறித் - திருத்தக்க
கொற்றக் கவிகை நிழற்றக் குளிர்ந்திரட்டைக்
கற்றைக் கவரிகளின் காலசைப்ப - ஒற்றை
வலம்புரி யூத வளைக்குல மார்ப்பச்
சிலம்பு முரசஞ் சிலம்பப் - புலம்பெயர்ந்து
வாட்படை கொட்ப மறமன் னவர்நெருங்கச்
சோட்புலிக் கொற்றக் கொடியோங்கச் - சேட்புலத்துத்

## உலாவில் உடன் வருவோர்

தென்னரும் மாளுவருஞ் சிங்களருங் கொங்கணத்து
மன்னருந் தோற்க மலைநாடர் - முன்னங்
குலையப் பொருதொருநாட் கொண்ட பரணி
மலையத் தருந்தொண்டை மானும்-பலர்முடிமே
லார்க்குங் கழற்கா லனகன் றனதவையுட்
பார்க்கு மதிமந்த்ர பாலகரிற் - போர்க்குத்
தொடுக்குங் கமழ்தும்பை தூசிநெடுஞ் சூடக்

கொடுக்கும் புகழ்முனையர் கோனும்-முடுக்கரையுங்
கங்கரையு மாராட் டரையுங் கலிங்கரையுங்
கொங்கரையு மேனைக் குடகரையும் - தங்கோன்
முனியும் பொழுது முரிபுருவத் தோடு
குனியுஞ் சிலைச்சோழ கோனும் - சனபதிதன்
தோளுங் கவசமுஞ் சுற்றமுங் கொற்றப்போர்
வாளும் வலியு மதியமைச்சும் - நாளுமா
மஞ்சைக் கிழித்து வளரும் பெரும்புரிசைக்
கஞ்சைத் திருமறையோன் கண்ணனும் - வெஞ்சமத்துப்
புல்லாத மன்னர் புலாலுடம்பு பேய்வாங்க
ஒல்லாத கூற்ற முயிர்வாங்கப் - புல்லார்வந்
தாங்கு மடமகளிர் தத்தங் குழைவாங்க
வாங்கும் வரிசிலைக்கை வாணனும்-வேங்கையினுங்
கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்தும்
ஓடா விரட்டத்து மொட்டத்தும் - நாடா
தடியெடுத்து வெவ்வே றரசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோனும்-கடியரணச்
செம்பொற் பதணஞ் செறியிஞ்சிச் செஞ்சியர்கோன்
கம்பக் களியானைக் காடவனும் - வெம்பிக்
கலக்கிய வஞ்சக் கலியாணர் போரில்
விலக்கிய வேணாடர் வேந்துங் - தலைத்தருமம்
வாரிக் குமரிமுதல் மந்தா கினியளவும்
பாரித் தவனநந்த பாலனும் - பேரமரின்
முட்டிப் பொருதார் வடமண்ணை மும்மதிலு
மட்டித்த மால்யானை வத்தவனும்-மட்டையெழக்
காதிக் கருநாடர் கட்டரணங் கட்டழித்த
சேதித் திருநாடர் சேவகனும் - பூதலத்து
முட்டிய தெவ்வர் சடைகட்ட மொய்கழல்
கட்டிய காரானைக் காவலனும் - ஒட்டிய

மான வரச ரிரிய வடகலிங்கத்
தானை துணித்த அதிகனு - மீனவர்தங்
கோட்டாறுங் கொல்லமுங் கொண்ட கொடைநுளம்பன்
வாட்டார் மதயானை வல்லவனு - மோட்டரணக்
கொங்கைக் குலைத்துக் குடகக் குவடொடித்த
செங்கைக் களிற்றுத் திகத்தனும் - அங்கத்து
வல்லவனுங் கோசலனும் மாகதனும் மாளுவனும்
வில்லவனுங் கேரளனும் மீனவனும்-பல்லவனும்
என்னும் பெரும்போ ரிகல்வேந்தர் மண்டலிகர்
முன்னு மிருமருங்கு மொய்த்திண்டப்-பன்மணிச்

## பரத்தையர் பார்க்குஞ் சிறப்பு

சோதி வயிரம் அடர்க்குஞ் சுடர்க்குழையார்
வீதி குறுகுதலும் மேலொருநாண்- மாதவத்தோன்
சார்ந்த பொழுதனங்கன் றன்னை யறிவித்த
பூந்துவரை யந்தப் புரம்போன்றும் - ஏந்திப்
பரக்குங் கலையல்குற் பாவையரே யானை
புரக்குந் திருநாடு போன்றும் - வரக்கருதா
ஏனை முனிக்குறும்பு கொல்ல இகல்மாரன்
சேனை திரண்ட திரள்போன்றுங் - கானலங்
கண்டன் மணற்குன்றத் தன்னக் கணம்போன்றுங்
கொண்டலின் மின்னுக் குழாம்போன்றும்-மண்டுந்
திரைதொறுந் தோன்றும் திருக்குழாம் போன்றும்
வரைதொறுஞ் சேர்மயில்கள் போன்றும் - விரைவினராய்
இந்து நுதல்வெயர்ப்ப எங்கணுங் கண்பரப்பிச்
சிந்தை பரப்பித் தெருவெங்கும் -வந்தீண்டி
உத்தி சுடர வொளிமணிச் சூட்டெறிப்பப்
பத்தி வயிரம் பரந்தெறிப்ப - முத்தின்

இணங்கும் அமுத கலசங்கள் ஏந்தி
வணங்கு தலையினராய் வந்து - கணங்கொண்டு
பார்க்கும்கொடுநோக்கு நஞ்சுறைப்பக் கிஞ்சுகவாய்
கூர்க்கும் எயிறுவெறுங் கோள்இழைப்ப-வேர்க்க
வரைகொள் நெடுமாடக் கீழ்நிலையின் மல்கி
உரக வரமகளிர் ஒப்பர் - விரல்கவரும்
வீணையும் யாழுங் குழலும் விசிமுழவும்
பாணி பெயர்ப்பப் பதம்பெயர்த்துச்-சேணுயர்
மஞ்சிவர் வெண்பளிங்கு மாடத் திடைநிலையின்
விஞ்சையர் மாதரெனமிடைவார்-அஞ்சனவேற்
கண்ணிற் சிறிதும் இமையாத காட்சியும்
மண்ணிற் பொருந்தா மலரடியும் - தண்மலர்
வாடா நறுஞ்செவ்வி மாலையுங் கொண்டழகு
வீடா நிலாமுற்ற மேனிலையிற் - கூடி
உருவின் ஒளியின் உணர்வின் உரையிற்
பொருவில் அரமகளிர் போல்வார்-அருகணைந்து
சீரள வில்லாத் திருத்தோ ளயன் படைத்த
பாரள வல்ல பணைப்பென்பர் - பாருமின்
செய்ய வொருதிருவே யாளுஞ் சிறுமைத்தோ
வைய முடையபிரான் மார்பென்பார்-கையிரண்டே
ஆனபோ தந்த முருகவே ளல்லன் இவன்
வேனில்வேள் கண்டூர் எனமெலிவார்-யானெண்ணும்
எண்ணுக் கிசைய வருமே யிவனென்பார்
கண்ணிற் கருணைக் கடலென்பார்-மண்ணளிக்கும்
ஆதி மனுகுலமிவ் வண்ணலான் மேம்படுகை
பூதியே யன்றோ வெனப்பகர்வார் - தாதெடுத்த
கொங்கை பசப்பார்தங் கோல்வளை காப்பார்போற்
செங்கை குவிப்பார் சிலர்செறிய - அங்கொருத்தி

## பேதை

வந்து பிறந்து வளரும் இளந்திங்கள்
கொந்து முகிழாக் கொழுங்கொழுந்து-பைந்தழைத்
தோகைதொடாமஞ்ஞை சூடுண்டு தோற்றவன் மேல்
வாகை புனைய வளர்கரும்பு - கோகிலத்தின்
பிள்ளை இளவன்னப் பேடை பிறந்தணிய
கிள்ளை பவளங் கிளைத்தகிளை - கள்ளந்
தெரியாப் பெருங்கட் சிறுதேறல் தாயர்
பிரியாப் பருவத்துப் பேதை - பரிவோடு
பாவையு மானும் மயிலும் பசுங்கிளியும்
பூவையும் அன்னமும் பின்போதக் - காவலன்
பொன்னிப்புகார்முத்தின் அம்மனையுந்தென்னுகை
நன்னித் திலத்தி னகைக்கழங்கும் - சென்னிதன்
கொற்கைக் குளிர்முத்த வல்சியுஞ் சோறடுகை
கற்கைக்கு வேண்டுவன கைப்பற்றிப் - பொற்கொடியார்
வீதி புகுந்து விளையாடு மெல்லைக்கண்
ஆதி யுகம்வந் தடிக்கொள்ள - மேதினியில்
ஊன்று கலிகடந்த வுத்துங்க துங்கன்றன்
மூன்று முரசு முழங்குதலும்-வான்றுணையாய்த்
தாயர் வரவந்து தாயர் தொழத் தொழுது
தாயர் மொழிந்தனவே தான்மொழிந்தாள் - சேயோன்
படியின் மதியும் பகலவனுந் நோற்கும்
முடியில் ஒருகாலும் மூளா - வடிவின்
மகிழ்ந்த மலராண் மலர்க்கண்ணும் நெஞ்சு
நெகிழ்ந்த திருநோக்கில் நேரா - முகிழ்ந்து
சிரிக்குந் திருப்பவளச் சேயொளியூ டாடா
விரிக்குந் திருநிலவில் வீழா - பரிக்கும்
உலகம் பரவுந் திருப்புருவத் தோடா

திலக முகாம்புயத்திற் சேரா - பலவுந்
திசையை நெருக்குந் திருத்தோளிற் செல்லா
இசையுந் திருமார்பத் தெய்தா - வசையிலாக்
கைம்மலரிற் போகா வடிமலரிற் கண்ணுறா
மெய்ம்மலர்ப் பேரொளியின் மீதூரா - அம்மகள்
கண்ணு மனமுங் கழுநீர்க் குலமுழுதும்
நண்ணுந் தொடையன்மே னாட்செய்ய - உண்ணெகிழா
வம்மின்கள் அன்னைமீர் மாலை அதுவாங்கித்
தம்மின்கள் என்றுரைப்பத் தாயரும் - அம்மே
பெருமானை அஞ்சாதே பெண்ணமுதே யாமே
திருமாலை தாவென்று செல்வேம் - திருமாலை
யாங்கொள்ளும் வண்ணம் எளிதோ அரிதென்னத்
தேங்கொள்ளும் இன்சொற் சிறியாளும் - ஆங்குத்தன்
மார்பத்துக் கண்ணினீர் வாரப் பிறர்கொள்ளும்
ஆர்வத்துக் கன்றே அடியிட்டாள் - சேர
இருத்தி மணற்சோ றிளையோரை யூட்டும்
அருத்தி அறவே அயர்த்தாள் - ஒருத்தி

## பெதும்பை

மழலை தனது கிளிக்களித்து வாய்த்த
குழலின் இசைகவர்ந்து கொண்டாள் - நிழல்விரவு
முன்னர் நகைதனது முல்லை கொளமுத்தின்
பின்னர் நகைகொண்ட பெற்றியாள் - கன்னி
மடநோக்கந் தான்வளர்த்த மானுக்கு விட்டு
விடநோக்க வேலிரண்டு கொண்டாள் - சுடர்நோக்கும்
தானுடைய மெய்ந்நுடக்கந் தன்மாத விக்களித்து
வானுடைய மின்னுடக்கம் வாங்கினாள் - பூநறும்
பாவைதன் பைங்குர வேந்தப் பசுங்கிளியும்
பூவையும் ஏந்தும் பொலிவினாள் - மேவும்

மடநடை அன்னப் பெடைபெறக் கன்னிப்
பிடிநடை பெற்றுப் பெயர்வாள் - சுடர்க்கனகக்
கொத்துக் குயின்ற கொடிப்பவளப் பந்தத்தின்
முத்துப் பொதியுச்சி முச்சியாள் - எத்திறத்தும்
வீரவேள் போல்வாரை வீட்டி விழுத்தவர்மேன்
மாரவேள் கண்சிவப்ப வாய்சிவப்பாள்-நேரொத்த
கோங்க முகையனைய கொங்கையாள் தன்கழுத்தாற்
பூங்கமுகை இப்போது பொற்பழிப்பாள் - பாங்கியருந்
தாயரும் போற்றுமே தானே துயிலெழுந்து
பாயல் புடைபெயர்ந்து பையச்சென் - றியாயே
தளரும் இடையொதுங்கத் தாழுங் குழைத்தாய்
வளரும் ஒருகுமரி வல்லி - கிளருங்
கொழுந்தும் அளவிறந்த கொந்துங் கவினி
எழுந்து கிளைகலிப்ப ஏறித் - தொழுந்தகைய
கொங்குடைய பொன்னடருஞ்சென்னிக்கொழுங்கோங்கின்
பங்குடைய மூரிப் பணையணைந் - தங்குடைய
வண்டு முரல மணநாற வைகுமது
கண்டு மகிழ்ந்தேன் கனவிலெனக் - கொண்டு
வருக வருக மடக்கிள்ளை முத்தந்
தருக தருகவெனத் தாயர் - பெருக
விரும்பினர் புல்லி விரைய முலைவந்
தரும்பின வாகத் தணங்கே - பெரும்புயங்கள்
புல்லி விடாத புதுவதுவை சென்னியுடன்
வல்லி பெறுதி எனவழுத்தும் -எல்லை
அரசன் அபயன் அகளங்கன் எங்கோன்
புரசை மதவரைமேற் போத - முரசந்
தழங்கு மறுகில் தமரோடும் ஓடி
முழங்கு முகின்மாட முன்றிற் - கொழுங்கயற்கட்
பொன்னென எல்லா அழகும் புனைந்தொரு

மின்னென வந்து வெளிப்பட்டு - மன்னருயிர்
உண்டாற் றியவேங்கை வைக்க ஒருதிருக்கைச்
செண்டாற் கிரிதிரித்த சேவகனைத் - தண்டாத
வேகங் கெடக்கலிவாய் வீழ்ந்தரற்று பார்மகளைச்
சோகங் கெடுத்தெடுத்த தோளானை - ஆகத்துக்
கொங்கை பிரியாத வீரூடுங் கோகனக
மங்கை பிரியாத மார்பானை - அங்கமலக்
கையும் மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலைத் - தையலுங்
கண்டகண் வாங்காள் தொழமுகிழ்த்த கைவிடாள்
மண்டு மனமீட்கு மாறறியாள் - பண்டறியாக்
காமங் கலங்கக் கலங்கிக் குழல்சரியத்
தாமஞ் சரியத் தனிநின்றாள் - நாமவேற்
சேரனும் மீனவனுஞ் சேவிப்பச் செம்பியரில்
வீரனும் அவ்வெல்லை விட்டகன்றான் - மாரனுந்
தக்குத் தகாதானை எய்து தரைப்படுத்தப்
புக்குத்தொடைமடக்கிப் போயினான்-மைக்குழல்

## மங்கை

மங்கைப் பருவத் தொருத்தி மலர்பொதுளுங்
கங்கைப் புளினக் கிளி அன்னம் - எங்கோனை
மன்னனை மன்னர் பிரானை வரோதயனைத்
தென்னனை வானவனைச் செம்பியனை-முன்னொருநாட்
கண்ட பெதும்பைப் பருவத்தே தன் கருத்திற்
கொண்ட பரிவு கடைக்கூட்டப் - புண்டரிகச்
செய்ய அடிமுதலாச் செம்பொன் முடியளவும்
மையல் அகல மனத்திழைத்துக் - கையினால்
தீட்டுங் கிழியிற் பகற்கண் டிரவெல்லாங்

காட்டுங் கனவு தரக்கண்டு - நாட்டங்கொண்
டியாதொன்றுங் காணா திருப்பாள் பொருகளிற்றுத்
தாதொன்றுந் தொங்கற் சயதுங்கன் - வீதி
வருகின்றான் என்று மணியணிகள் யாவுந்
தருகென்றாள் வாங்கித் தரித்தாள் - விரிகோதை
சூடினாள் பைம்பொற் றுகிலுடுத்தாள் சந்தனச்சே
றாடினாள் தன்பே ரணியணிந்தாள் - சேடியர்

காட்டும் படிமக் கலத்திற் கமலத்தை
ஓட்டும் வதனத் தொளிமலர்ந்து - கேட்டு
விடைபோ மனங்கள்போல் வேல்விழிகள் தாமும்
படைபோய் வருவனபோற் பக்கங் - கடைபோய்
மறித்து மதர்மதர்த்து வார்கடிப்பு வீக்கி
எறிக்குங் குழைக்காதிற் கேற்றும் - நெறிக்கும்
அளக முதலாக ஐம்பாற் படுத்த
வளர்கருங் கூந்தல் மலிந்துங் - கிளர
அரியன நித்திலத்தின் அம்பொற் றொடித்தோள்
பரியன காம்பிற் பணைத்துந் - தெரியற்

சுவடு படுகளபத் தொய்யில்சூழ் கொங்கைக்
குவடு படவெழுச்சி கொண்டும் - திவடர
முந்துங் கலைஅல்குல் மூரித் தடம்அகன்று
நொந்து மருங்குல் நுடங்கியும் - வந்து
மிடையும் புதுவனப்பு விண்ணோரும் வீழ
அடையுந் தனதுருக்கண் டஞ்சிக் - கொடையனகள்
பண்டறியும் முன்னைப் பருவத் துருவத்துக்
கண்டறியும் அவ்வடிவு காண்கிலேன - பண்டறியும்
முன்னை வடிவும் இழந்தேன் முகநோக்கி
என்னை அறிகலன்யான் என்செய்கேன் - தன்னை
வணங்கி வருவ தறிவன் எனவங்

திணங்கு மகளி ரிடைநின் - றணங்கும்
இறைவன் அகளங்கன் எங்கோன் குமரித்
துறைவன் நிருபகுல துங்கன் - முறைமையாற்
காக்குங் கடல்கடைந்த கைம்மலரும் உந்திமலர்
பூக்கும் உலகளந்த பொற்கழலும் - நோக்குந்
திருக்கொள்ளு மார்பமுந் தெவ்வேந்தர் எல்லாம்
வெருக்கொள்ளு மூரித்தோள் வெற்பும் - உருக்கும்
மகரக் குழைக்காது மாதரார் மாமை
நுகரப் புடைபெயரு நோக்கும் - துகிரொளியை
வெளவிய கோல மணிவாயும் எப்பொழுதுஞ்
செவ்வி யழியாத் திருமுகமும் - எவ்வுருவும்
மாறுபடா வண்ணமவ் வண்ணல் படிவத்து
வேறு படுவனப்பும் மெய்விரும்பித் - தேறும்
பிறையாம் பருவத்துப் பேருவகை ஆம்பல்
நிறையா மதிக்கு நெகிழ்ந்தாங் - கிறைவனைக்
கண்டு மனமும் உயிருங் களிப்பளவிற்
கொண்டு பெயர்ந்தது கொல்யானை - பண்டு
நனவு கிழியிற் பகற்கண்டு நல்ல
கனவு தரஇரவிற் கண்டு - மனமகிழ்வாள்
தீட்ட முடியாத செவ்வி குறிக்கொள்ளும்
நாட்டம் உறங்கா மையைநல்க - மீட்டுப்
பெயர்ந்தாள் தமர்தம் பெருந்தோள் களில்வீழ்ந்
தயர்ந்தாள் அவனிலையீ தப்பால் - சயந்தொலைய

### மடந்தை

வெந்து வடிவிழந்த காமன் விழிச்சிவப்பு
வந்து திரண்டனைய வாயினள் - அந்தமில்
ஓலக் கடலேழு மொன்று யுலகொடுக்குங்
காலக் கடையனைய கட்கடையாள் - ஞாலத்தை

வீட்டி வினைமுடிக்க வெங்கால தூதுவர்போற்
கோட்டி யிருக்குங் குவிமுலையாள் - நாட்ட
வடிவின் மருங்குலாண் மாரனைப்போன் மேலோர்
முடிவி லுணர்வை முடிப்பாள் - கடிதோடிப்
போகா தொழியா திடையென்று போய்முடியல்
ஆகாமை கைவளரும் அல்குலாள் - பாகாய
சொல்லி யொருமடந்தை தோழியைத் தோள்வருந்தப்
புல்லி நிலாமுற்றம் போயேறி - வல்லிநாஞ்
சேடிய ரொப்ப வகுத்துத் திரள்பந்து
கோடியர் கண்டுவப்பக் கொண்டாடி - ஆடினல்
என்மாலை நீகொள்வ தியான்கொள்வ தெங்கோமான்
தன்மாலை வாங்கித் தருகென்று - மின்னனையாள்
வட்டித் தளகமுங் கொங்கையும் வார்தயங்கக்
கட்டிக் கனபந்து கைப்பற்றி - ஒட்டிப்
பொருதிறத்துச் சேடியர்தம் போர்தொலையத் தானே
இருதிறத்துக் கந்துகமும் ஏந்திப் - பெரிதும்
அழுந்து தரளத் தவைதன்னைச் சூழ
விழுந்து மெழுந்து மிடைய - எழுந்துவரி
சிந்த விசிறு திரையி னுரையூடு
வந்த வனச மகளேய்ப்ப - முந்திய
செங்காந்தள் அங்கை சிவக்குஞ் சிவக்குமென்
றங்காந்துதோள்வளைகள் ஆர்ப்பெடுப்பத்-தங்கள்
நுடங்கு கொடிமருங்குல் நொந்தொசிந்த தென்றென்
றடங்கு கலாபம் அரற்றத் - தொடங்கி
அரிந்த குரலினவாய் அஞ்சி றடிக்குப்
பரிந்து சிலம்பு பதைப்ப - விரிந்தெழுசெங்
கைக்கோ விடைக்கோ கமல மலரடிக்கோ
மைக்கோல ஓதியின்மேல் வண்டிரங்க - அக்கோதை

பந்தாடி வென்று பருதி அகளங்கன்
சந்தாடு தோண்மாலை தாவென்று - பைந்துகில்
தானை பிடித்தலைக்கும் போதில் தனிக்குடைக்கீழ்
யானைமேல் வெண்சா மரையிரட்டச் - சேனை
மிடையப் பவளமும் நித்திலமும் மின்ன
அடையப் பணிலங்கள் ஆர்ப்பப் - புடைபெயர
வார்ந்து மகர வயமீன் குலமுழுதும்
பேர்ந்து மறுகும் படிபிறழச் - சேர்ந்து
பதலை முழங்கப் பகடேற்றி விட்ட
மதலைகண் முன்னர் மலிய - விதலையராய்த்
தாழுந் தொழிலிற் கிளைபுரக்கத் தன்னடைந்து
வாழும் பரதர் மருங்கிண்ட - வீழுந்திக்
கன்னியும் நன்மதையுங் கங்கையுஞ் சிந்துவும்
பொன்னியுந் தோயப் புகார்விளங்க - மன்னிய
செங்கோற் றியாக சமுத்திரம் நண்ணுதலுந்
தங்கோ மறுகில் தலைப்பட்டுத் - தங்களில்
ஒட்டிய ஒட்டம் உணராதே தோள்வளையுங்
கட்டிய மேகலையுங் காவாதே - கிட்டித்
தொழுதாள் அயர்ந்தாள் துளங்கினாள் சோர்ந்தாள்
அழுதாள் ஒருதமியள் ஆனாள் - பழுதிலாக்
காக்குந் துகிலும் இலங்கு பொலன்கலையும்
போக்கு நிதம்பம் புனைகென்று - வீக்கு
மணிக்கச்சுந் தம்முடைய வான்றூசுங் கொங்கை
பணிக்கக் கடைக்கண்கள் பாரா - அணிக்கமைந்த
குன்றாத நித்திலக் கோவையும் பொன்னிறத்த
பொன்றாத பட்டும் புனைகென்று - நின்று
கொடுத்தனர் கொங்கைகளுங் கொண்டன தாமும்
அடுத்தனர் தோண்மேல் அயர்ந்தாள் - கடுத்துக்
கவரும் அனங்கனுடன் கைகலந்த தன்றித்

தவறு முதுகிளவித் தாயர் - அவரெங்கும்
கூசினர் சந்திற் பனிநீர் குழைத்திழைத்துப்
பூசினர் ஆலி பொழிந்தொழிந்தார் - வீசினர்
இட்டார் நிலவில் இளந்தென்ற லுங்கொணர்ந்து
சுட்டார் குளிரி தொடுத்தெடுத்தார்-விட்டாரோ
பள்ளம் அதனிற் படரும் பெரும்புனல்போல்
உள்ளம் உயிரை யுடன்கொண்டு — வள்ளல்பின்
ஓதை மறுகில் உடன்போன போக்காலிப்
பேதை நடுவே பிழைத்தொழிந்தாள் - மாதரில்

## அரிவை

வாரி படும்அமுதம் ஒப்பாள் மதுகரஞ்சூழ்
வேரி கமழ்கோதை வேறொருத்தி—மூரித்தேர்த்
தட்டுஞ் சிறுகப் பெருகு மரகதத்திற்
கட்டுங் கனபொற் கலாபாரம் — பட்டுந்
துகிலுங் கரப்பச் சுடர்பரப்பிக் கைபோய்
அகல்கின்ற அல்கு லரிவை - இகலி
ஒருக்கி மருங்குகடிந் தொன்றினைவந் தொன்று
நெருக்கி யமைய நிரம்பித் - தருக்கி
இடங்கொண்டு மின்னுக் கொடியொன் றிரண்டு
குடங்கொண்டு நின்றதெனக் கூறத்-தடங்கொண்
டிணைத்துத் ததும்பி இளையோர்கள் நெஞ்சம்
பிணைத்துத் தடமுகட்டிற் பெய்து-பணைத்துப்
பெருமை யுவமை பிறங்கொலிநீர் ஞாலத்
தருமை படைத்ததனத் தன்னங் - கருமை
எறித்துக் கடைபோய் இருபுடையும் எல்லை
குறித்துக் குழையளவுங் கொண்டு - மறித்து
மதர்த்து வரிபரந்து மைந்தர் மனங்கள்
பதைத்து விழநிறத்திற் பட்டுத் — ததைத்த

கழுநீர் மலரின் கவின் அழித்து மானின்
விழிநீர்மை வாய்த்த விழியாள் - முழுதும்
நெறிந்து கடைகுழன்று நெய்த்திருண்டு நீண்டு
செறிந்து பெருமுருகு தேக்கி - நறுந்துணர்
வார்ந்து கொழுந்தெழுந்த வல்லியாய் மாந்தளிர்
சோர்ந்து மிசையசைந்த சோலையாய்ச் - சேர்ந்து
திருவிருந்த தாமரையாய்ச் சென்றடைந்த வண்டின்
பெருவிருந்து பேணுங் குழலாள் - பொருகளிற்றின்
வந்து மறுகில் ஒருநாள் மனுகுலத்தோன்
றந்த பெரிய தனிமைக்கட் - செந்தனிக்கோற்
கோனே கவர்ந்தெம்மைக் கொண்டனன் வந்தெமக்குத்
தானே தரிற்றருக வென்பனபோற் - பூநேர்
இணைக்கையுந் தோளும் இடுதொடிகள் ஏந்தா
துணைக்கண் துயிற்றத் துயிலா - மணக்கூந்தல்
போது மறந்தும் புனையா பொலங்கச்சு
மீது படத்தரியா வெம்முலைகள் - சோதி
அடுக்குங் கனபொற் கலைபேணா தல்குல்
கொடுக்குந் தெருணெஞ்சு கொள்ளா - தெடுக்குங்
கருப்புச் சிலையனங்கன் கையம்பால் வீழ
நெருப்புக் குருகி நிறைபோய் - இருப்புழிப்
பாடிய பூவைக்கும் யாதும் பரிவின்றி
ஆடிய தோகைக்கும் அன்பின்றிக் - கூடிய
கிள்ளைக்குந் தம்மிற் கிளரும் இளவன்னப்
பிள்ளைக்கு மாற்றுள் பெயர்ந்துபோய்க் - கொள்ளை
பயக்கு மலர்க்குரவப் பந்தர்ப் படர்ப்பை
நயக்கும் இளமரக்கா நண்ணி—வயக்களிற்று
மன்னன் குலப்பொன்னி வைகலும் ஆடுதிரால்
அன்னங்காள் நீரென் றழிவுற்றும் - சென்னி
பெருகும் புகார்அடையப் பெற்றீரான் மற்றைக்

குருகுகாள் என்று குழைந்துங் - கருகிய
கோலக் குயிலினங்கா ணீர்போலுஞ் சோணாட்டுச்
சோலைப் பயில்வீர் எனத்துவண்டும் — பீலிய
பேரியல் மஞ்ஞை பெறுதிராற் கொல்லியும்
நேரியுஞ் சேர்வீர் எனநெகிழ்ந்தும் - நேரியன்
தண்டுழாய் மாலை பலகாலுந் தைவந்து
வண்டுகாள் வாழ்வீர் எனமருண்டும் - தொண்டிக்கோன்
மன்றல் மலையத்து வாளருவி தோய்ந்தன்றே
தென்றல்வருவ தெனத்திகைத்தும்-நின்றயர்கான்
மன்னர்க்கு மன்னன் வளவன் அகளங்கன்
முன்னர்ப் பணில முழங்குதலும்-மின்னிற்போய்ப்
பேணுந் திருமடனும் என்றும் பிரியாத
நாணும் பெருவிருப்பால் நல்கூரக் - காணுங்கால்
ஏய்ப்ப வெதிர்வந் திரவி உருவவொளி
வாய்ப்ப முகபங் கயமலர்ந்தாள்-போய்ப்பெருகு
மீதார் அகல்அல்குல் வீழ்கின்ற மேகலையும்
போதாத வண்ணம் புடைபெயர்ந்தாள் - சோதி
குழைய நடுவொடுக்குங் கொங்கையுந் தோளும்
பழைய படியே பணித்தாள் - பிழையாத
பொன்னித் துறைவன் பொலந்தார் பெறத்தகுவார்
தன்னிற் பிறரின்மை சாதித்தாள்-சென்னிக்குப்
பாராள் முலையாலும் பங்கயத்தாள் தோளாலும்
வாரா விருப்பு வருவித்தாள்-ஒரணங்கு

## தெரிவை

கோது விரவாக் கொழும்பாகு கொய்தளிரின்
போது புலராப் பொலங்கொம்பு - மீது
முயலால் அழுங்கா முழுத்திங்கள் வானிற்
புயலால் அழுங்காப் புதுமின்-இயல்கொண்

டெழுதாத வோவம் எழுசிறையை வண்டு
கொழுதாத கற்பகத்தின் கொந்து - முழுதும்
இருளாக் கலாபத் திளந்தோகை என்றுந்
தெருளாக் களியளிக்குந் தேறல்-பொருளால்
வருந்தக் கிடையாத மாணிக்கம் யார்க்கும்
அருந்தத் தெவிட்டா அமுதந்-திருந்திய
சோலைப் பசுந்தென்றல் தூது வரவந்த
மாலைப் பொழுதின்கண் மண்டபத்து - வேலை
விரிந்த நிலாமுன்றில் வீழ்மகரப் பேழ்வாய்
சொரிந்த மணிக்கற்றை தூங்கப்-பரிந்துழையோர்
பூசிய சாந்தங் கமழப் பொறிவண்டு
மூசிய மௌவல் முருகுயிர்ப்பத் - தேசிகப்
பேரிசை யாழ்ப்பாணன் பேதை விறலியொடுஞ்
சேர இனிதிருந்த செவ்விக்கண் - நேரியுங்
கோழியும் வேங்கையு முப்பணையுங் கோரமும்
பாழி அயிரா பதப்பகடும் - ஆழியான்
சூடிய ஆரமும் ஆணையுஞ் சோணாடும்
காடு திரைத்தெறியுங் காவிரியும்-பாடுகெனக்
கூன லியாழெடுத்தான் பாணன் கொதித்தெழுந்து
வேனில் அரசனுந்தன் வில்லெடுத்தான்-தேனிமிர்
தந்திரி யாழ்ப்பாணன் தைவந்தான் தைவந்தான்
வெந்திறன் மாரனுந்தன் வில்லின்நாண் - முந்த
நிறைநரம்பு பண்ணி நிலைதெரிந்தான் பாணன்
திறன்மதனும் அம்பு தெரிந்தான்-விறலியொடும்
பாணனொருபாணி கோத்தான் பலகோத்தான்
தூணி தொலையச் சுளிந்துவேள் - மாண
இசைத்தன பாண னியாழ்ப்பாணி யெய்து
விசைத்தன வேனிலான் பாணி-விசைத்தெழுந்த
வீணை யிசையாலோ வேனிலான் அம்பாலோ

வாணுதல் வீழா மதிமயங்காச்-சேணுலாம்
வாடை அனைய மலையா நிலந்தனையும்
கோடை இதுவென்றே கூறினாள் - நீடிய
வாடை முனிந்த வனமுலைமேல் விட்டபனி
நீரை இதுவோ நெருப்பென்றாள் - ஊரெலாங்
காக்குந் துடியை அழிக்குங் கணைமாரன்
தாக்கும் பறையென்றே சாற்றினாள்-சேக்கைதொறும்
வாழும் உலகத் தெவரும் மனங்களிப்ப
வீழும் நிலவை வெயிலென்றாள் - கோழிக்கோன்
எங்கோ னகளங்கன் ஏழுலகுங் - காக்கின்ற
செங்கோல் கொடுங்கோல் சிலர்க்கென்றாள் - கங்குல்
புலருந் தனையும் புலம்பினாள் ஆங்குப்
பலரும் பணிந்து பரவக் - குலகிரிசூழ்
ஆழிப் புவனம் அடைய உடையபிரான்
சூழிக் கடாயானை தோன்றுதலும் - யாழின்

### பட்டத்து யானையை நோக்கிப் பரிவு கூறுதல்

இழைக்கு மிசைமுதலா எப்பகைக்கும் ஆற்றா
துழைக்கும் உயிர்தழைப்ப வோடிப்-பிழைத்தனளாய்
முட்டுந் திகிரி கிரியின் முதுமுதுகிற்
கட்டுங் கடவுட் கடாயானை - யெட்டுந்
தரிக்கும் உலகந் தனிதரித்த கோனைப்
பரிக்கும் அயிரா பதமே - செருக்கிப்
பொருந்த நினையாத போர்க்கலிங்க ரோடி
இருந்த தடவரைகள் எல்லாந் - திருந்த
விதையம் பொருதழிந்த விந்தமே போலப்
புதைய நடந்த பொருப்பே - சிதையாத்
திங்கட் குலத்திற்குந் தெய்வப் பொதியிற்கும்
அங்கட் பழங்குமரி யாற்றிற்குந் - தங்கள்
படிக்கும் பொருநிருப பன்னகங்கள் வீழ

இடிக்குந் தனியசனி ஏறே - கடிப்பமைந்த
யாம முரசால் இழந்த நிறைநினது
தாம முரசு தரப்பெற்றேன் - நாம
விடைமணி யோசை விளைத்தசெவிப் புண்ணின்
புடைமணி யோசைப் புலர்ந்தேன் - தடமுலைமேல்
ஊறா மலையக்கால் சுட்டசூ டுன்செவியின்
மாறாப் பெருங்காற்றான் மாற்றினேன் - வேறாகக்
கூசும் பனித்திவலை கொண்டுபோம் என்னுயிர்நீ
வீசு மதத்திவலை யான் மீட்டேன் - மூசிய
காருலாம் ஓதக் கடல்முழங்க வந்ததுயர்
நேரிலா நீமுழங்க நீங்கினேன் - பேரிரவில்
என்மேல் அனங்கன் வரவந்த இன்னலெலாம்
நின்மேல் அனகன்வர நீங்கினேன் - இன்னங்
கடைபோக என்னுயிரைக் காத்தியேல் வண்டு
புடைபோதப் போதும் பொருப்பே - விடைபோய்நீர்
ஆட்டுந் தடங்கலக்கின் மாரற் கயில்வாளி
காட்டுந் தடமே கலக்குவாய் - கேட்டருளாய்
கார்நாணும் நின்கடத்து வண்டொழியக் காமனார்
போர்நாணின் வண்டே புடைத்துதிர்ப்பாய் - பார்நாதன்
செங்கைக் கரும்பொழியத் தின்கைக் கனங்கனார்
வெங்கைக் கரும்பே விரும்புவாய் - எங்கட்
குயிராய் உடலாய் உணர்வாகி உள்ளாய்
அயிரா பதமேநீ யன்றே - பெயராது
நிற்கண்டா யென்றிரந்து நின்றாள் நுதலாக
விற்கொண்ட பேரிளம்பெண் வேறொருத்தி -
[கொற்கையர்கோன்

## பேரிளம்பெண்

மல்லற் புயத்தனகன் மால்யானைக் கைபோலக்
கொல்லத் திரண்ட குறங்கினாள் - எல்லையில்

கோடுங் கொலைகுயின்ற சேடன் குருமணிவேய்ந்
தாடும் படமனைய அல்குலாள் -சேடியாய்த்
தம்மை எடுக்கும் இடைகடிந்த தம்பழிக்குக்
கொம்மை முகஞ்சாய்த்த கொங்கையாள்-செம்மை
நிறையு மழகா னிகரழித்துச் செய்யாள்
உறையு மலர்பறிப்பாள் ஒப்பாள்-நறைகமழு
மாலை பலபுனைந்து மான்மதச்செஞ் சாந்தெழுதி
வேலை தருமுத்தம் மீதணிந்து-சோலையின்
மானும் மயிலும் அனைய மடந்தையருந்
தானு மழகு தரவிருப்பத்-தேனிமிர்
ஊறல் இளம்பாளை உச்சிப் படுகடுந்
தேறல் வழிந்திழிந்த செவ்விக்கண்-வேருக்
வாக்கி மடல்நிறைத்து வண்டும் அதில் நுரையும்
போக்கி ஒருத்தி புகழ்ந்துதர-நோக்கி
வருந்திச் சிறுதுள்ளி வள்ளுகிரால் எற்றி
அருந்தித் தமர்மேல் அயர்ந்தாள்-பொருந்தும்
மயக்கத்து வந்து மனுதுங்க துங்கன்
நயக்கத் திருக்கனவு நல்கு-முயக்கத்து
மிக்க விழைவு மிகுகளிப்பும் அத்துயிலும்
ஒக்க இகல உடனெழுந்து-பக்கத்து
வந்து சுடரும் ஒருபளிக்கு வார்சுவரில்
தந்த தனதுநிழல் தானோக்கிப்-பைந்துகிற்
காசுசூழ் அல்குற் கலையே கலையாகத்
தூசு புடைபெயர்ந்து தோணெகிழ்ந்து-வாசஞ்சேர்
சூடிய மாலை பரிந்து துணைமுலைமேல்
ஆடிய சாந்தின் அணிசிதைந்து-கூடிய
செவ்வாய் விளர்ப்பக் கருங்கண் சிவப்பூர
வெவ்வா னுதலும் வெயரரும்ப-இவ்வாறு

கண்டு மகிழ்ந்த கனவை நனவென்று
கொண்டு பலர்க்குங் குலாவுதலும்-வண்டுவீழ்
வேரிக் கமழ்கோதை வேருகத் தன்மனத்திற்
பூரித்த மெய்யுவகை பொய்யாகப்-பாரித்த
தாமக் கவிகை நிழற்றச் சயதுங்கன்
நாமக் கடாக்களிற்று நண்ணுதலும்-தேமொழியும்
கண்டதுங் கெட்டேன் கனவை நனவாகக்
கொண்டதும் அம்மதுச்செய் கோலமே-பண்டுலகிற்
செய்த தவஞ்சிறிதும் இல்லாத தீவினையேற்
கெய்த வருமே இவனென்று-கைதொழுது
தேறி ஒருகாலுந் தேருப் பெருமையால்
ஏறி இரண்டா வதுமயங்கி-மாறிலாத்
தோழியர் தோள்மேல் அயர்ந்தாளத் தோழியரும்
ஏழையர் யானை யெதிரோடி-ஆழியாய்

### தலைவனை முன்னிலையாக்கிக் கூறல்

மாடப் புகாருக்கும் வஞ்சிக்குங் காஞ்சிக்குங்
கூடற்குங் கோழிக்குங் கோமானே-பாடலர்
சாருந் திகிரி தனையுருட்டி ஒரேழு
பாரும் புரக்கும் பகலவனே-சோர்வின்றிக்
காத்துக் குடையொன்ருல் எட்டுத் திசைகவித்த
வேத்துக் குலகிரியின் மேருவே-போர்த்தொழிலால்
ஏனைக் கலிங்கங்கள் ஏழினையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே-மானப்போர்
இம்பர் எழுபொழில் வட்டத் திகல்வேந்தர்
செம்பொன் மவுலிச் சிகாமணியே-நம்பநின்
பாரிற் படுவன பன்மணியு நின்கடல்
நீரிற் படுவன நித்திலமும்-நேரியநின்
வெற்பில் வயிரமும் வேந்தநின் சோணுட்டுப்
பொற்பின் மலிவன பூந்துகிலும்-நிற்பணியக்

கொண்டா யிவடனது கொங்கைக் கொழுஞ்சுணங்குந்
தண்டா நிறையுந் தளிர்நிறமும்-பண்டைத்
துயிலுங் கவர்ந்ததுநின் தொல்குலத்து வேந்தர்
பயிலுந் திருநூற்படியோ-புயல்வளவ
மன்னிய தொண்டை வளநாடு வாளியும்
பொன்னி வளநாடு பூஞ்சிலையும்-கன்னித்
திருநாடு தேருங் குறையறுப்பச் செய்தால்
தருநாண் மடமகளிர் தம்மை-ஒருநாளவ்
வேனற் கரசன் விடுமே அவன்சினமிப்
பானற்க ணல்லாள் உயிர்ப்பரமே-ஆனக்காற்
குன்றே எனத்தகுநின் கோபுரத்தில் தூங்குமணி
ஒன்றே உலகுக் கொழியுமே-என்றினைய
கூறி வணங்கிடும் இவ்வளவுங் கோதைமேற்
சீறி அனங்கன் சிலைவளைப்ப-மாறழியக்
குத்துங் கடாக்களிற்றுப் போந்தான் கொடைச்சென்னி
உத்துங்க துங்கன் உலா.

கையும் மலரடியும் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே—வையம்
அளந்தாய் அகளங்கா ஆலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளிம் மான்-

——

உ

திருச்சிற்றம்பலம்.

# விளக்க உரை

---

## வரிகள் 1—6: சீர்தந்த தாமரையாள்......தேரோனும்

(சொற்பொருள்) பலவகைச் சிறப்புக்களையும் அளித்த திருமகள் கணவனாகிய அழகிய வடிவமுள்ள மேகம் பெற்ற உந்தித்தாமரையில் உறைந்து பூவுலகத்தைப் படைத்த முதல் தெய்வமாகிய நான்குமுகங்களையுடைய பிரமனும், அவனுடைய விருப்பமான நன்மைந்தனாகிய காசிபனும், மேன்மை பொருந்திய குற்றமற்ற அறிவுடைய மரீசியும், வட்டவடிவமான சிவந்த ஒற்றைச் சக்கரத்தையுடைய தேரில் வருவோன் ஆகிய சூரியனும்.

(விளக்கம்) சீர்தந்த என்பது, விக்கிரமசோழனாகிய பாட்டுடைத் தலைவனுக்குப் பத்துப் பொருத்தங்களும் அமைந்த சீராதலின் முன் வைத்தார். சீர் என்பது மங்கலச்சொல். அதனை முன் வைப்பது மங்கலப்பொருத்தம். சொல், எழுத்து, தானம், பால் உண்டி, வருணம், நாள், கதி, கணம் ஆகிய ஏனைப் பொருத்தங்களையும் ஆய்ந்து காண்க. செல்வச்சிறப்புப் பலவும் மக்கட்குத் தருபவள் திருமகள் ஆதலாற் "சீர்தந்த தாமரையாள்" என்றார். "நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும், பேரும் புகழும் பெருவாழ்வும்-ஊரும், வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந், தருஞ்சிவந்த தாமரையாள் தான்" என்ற பாடலையும் நோக்குக. திருமாலைக் கார் என உருவகஞ் செய்தார் கரியநிற மமைந்திருப்பது குறித்து. கார் தந்த திசைமுகன், பார்தந்த திசைமுகன், ஆதிக்கடவுள் திசைமுகன் எனத் தனித்தனி கூட்டிப் பொருள் கொள்க. திசை நான்கு ஆதலால் நான்கினை யுணர்த்திற்று. திசைபோலு முகமுடையவன் என்க. உந்தி - கொப்பூழ். திருமால் கொப்பூழில் ஒரு தாமரைப்பூ மலர்ந்து அம்மலரிற் பிரமன் தோன்றி உலகத்தை முதலிற் படைத்தனன் என்பது நூல் மரபு. காட்சி - அறிவு. சூரியன் ஒற்றைச்சக்கரமுடைய தேரிற் பச்சைப்புரவி ஏழும் ஈர்க்க அருணனாகிய தேர்ப்பாகன் செலுத்த வருவான்

என்பது மரபு. அதனல் "தனியாழித் தேரோன்" என்றுர். ஆசிரியர் சோழர்குல வரலாறு கூறத் தொடங்கியவர், திருமால் பெற்ற மைந்தன் பிரமன், அவனுடைய மைந்தன் காசிபன், அவனுடைய மகன் மரீசி, அவன்பின் தோன்றியவன் சூரியன் என வழிவழி விளக்கினர் எனக் காண்க. ஆங்கு: அசை. காட்சி - அறிவு. அறிவுள்ள மரீசி எனக் கொள்க. மண்டிலம் - வட்டம்.

## 6—12: மையல்கூர் சிந்தனை ஆவிற்கு....பூபதியும்

(சொ - ள்.) மயக்கம் மிகுந்த கவலையையுடைய பசுவின் பொருட்டு அதன் கவலை நீங்கும்படி சிறந்த தன் தேர்ச்சக்கரத்தைத் தன் மைந்தன்மேற் செலுத்திக் கொன்றவனுகிய மனுச் சோழனும், குளிர்ந்த இடமாகிய யாவரும் நீராடுதற்கேற்ற ஆற்றுத்துறையில், கொல்லும் புலியும் புல்வாயும் கூடி நீருண்ணுமாறு செய்த மன்னவனும், பெரிய வானவூர்தியைத் தனியே நடத்திச் சென்ற அரசனும், போக பூமியாகிய தேவருலகத்தைக் காத்த வேந்தனும்.

(வி - ம்.) மறவோனும் என்பதும் பாடம். அதுவே சிறந்தது. தன் ஒரு மைந்தனைத் தானே தேர்க்காலின்கீழ்க் கிடத்திச் சக்கரத்தையுருட்டிக் கொன்முன். இத்தகைய வீரச் செயல் மற்றை மன்னரிடம் காண்டல் அரிதாதலான், இவனே மனுநீதிகண்ட சோழன். வைவச்சுத மனு என்பவன் வேறு. இவன்காலத்திற்கு முன்னரே மனுநூல் இருந்ததென்பதும், அந் நூலின் வழி அரசுபுரிந்தவன் இவன் என்பதும், "மெய்ம்மனுப், பெற்ற நீதியும் தன்பெயராக்கினுன்" எனவும், "தொன்மனு நூற்றொடை மனுவாற் றுடைப்புண்டது" எனவும், பெரிய புராணம் கூறுவதால் அறியலாம். பைந்தடம்-குளிர்ந்த இடம். தடம் - பொய்கையும் ஆம், ஆயினும், அப்பொருள் சிறப் பின்று என அறிக. பல விலங்குகளையும் கொல்லும் இயல் புடையது புலி என்பது தோன்ற 'அடுபுலி' என்றுர். புல்வாய் - மானினத்தைச் சார்ந்தது. புலிக்குப் பகையானது மான் ஒன்றே. அதனைத்தான் விருப்பமாகக் கொன்று தின்னும் அது. அப்புலியுடன் புல்வாய் நின்று நீருண்டல் காண்பது அரிது. அத்தகைய அரிய செயல் அம்மன்னன் நீதியால் அவன் நாட்டில் நிகழ்ந்தது. அந்நிகழ்ச்சியைக் கண்ட மன்னவன் அவன் என் பது தோன்ற, "புலியும் புல்வாயும்......ஊட்டிய கொற்றவன்" என்றுர். இவன் 'மாந்தாதா' என்ற பெயருடையவன். மாக விமானம் - வானத்திற் செல்லும் ஓர் ஊர்தி. இதனைத் 'தெய்வ விமானம்' எனவும், 'இந்திர விமானம்' எனவும் கூறுவர்.

இவன் பெயர் இன்னதெனத் தெரிந்திலது. "இந்திரவிமானம் ஊர்ந்த சோழன் என்று ஒருவன் பெயர் 'சோழ ராசாக்கள் சரிதம்' என்னும் பழைய நூலிற் காணப்படுகிறது" எனக் கலிங்கத்துப் பரணி உரையில் வை. மு. சடகோபராமானுசாசாரியர் குறிப்பிட்டுள்ளார். போகபுரி என்பதும் பாடம். அதுவும் போகபூமியாகிய தேவருலகத்தையே குறிக்கும். மண்ணுலகத்திற் பிறந்த மாந்தரில் அறம்புரிந்தவரும் போர்க்களத்தில் இறந்தவரும் சுவர்க்க உலகம் புகுவர் எனவும், அவர் அரம்பையருடன் கூடிப் போகம் நுகர்ந்து நரை திரை மூப்புப் பிணியின்றி வாழ்வாரெனவும் நூல்கள் கூறுவதால் போகபுவி அதுவேயாம். அவ்வுலகத்தை ஒருகாலத்துக் காத்த மன்னன் முசுகுந்தனுதலால் அவனைப் "போகபுவி புரந்த பூபதி" என்றூர். குமரக்கடவுள் வரும் அளவும் இவன் இந்திரன் வேண்டுகோளால் தேவருலகத்தைக் காத்திருந்தான் எனவும், இரவும் பகலும் விழித்திருந்து காத்த சோர்வு நீங்குவதற்காக நீண்ட காலம் தூங்கும் வரத்தைத் தேவர்கள்பாற் பெற்றனன் எனவும் பாகவதம் கூறுகிறது. குலோத்துங்கசோழனுலாவில் இவன் "சோராத், துயில்காத் தரமகளிர் சோர்குழைகாத் தும்பர், எயில்காத்த நேமி யிறையோன்" எனப் பாராட்டப்பெறுகிறுன். இங்கு மனு, மாந்தாதா, முசுகுந்தன் என்ற மூவரும் சூரியன் வழிவந்தோர் என்பது கூறப்பட்டது.

## 12—20. மாகத்துக் கூற அரிய.......கைப்பிடித்த கோவும்

(சொ - ள்.) தேவருலகத்திற் சென்று கூறுவதற்கு அரிதாய மந்திரங்களைக் கொண்டுவந்து தெளியும்படி இயமனுக்கு வழக்குரைத்த சோழனும், எமன் பகையை நீங்கிப் புறங்காட்டி ஓடியொளிக்கும்படி கிழவர்களுக்குச் சாடி வகுத்துக்கொடுத்த மன்னவனும், பகைவர்கள் கட்டிய வானத்தில் அசைந்து திரியும் மதிலையழித்த சோழனும், மேல் கடலில்உள்ள நீரைக் கீழ் கடற்கு வரும்படி செய்த வேந்தனும், பாதாள வுலகமாகிய நாகருலகம் புகுந்து தன் பெரும் புகழால் நாகர் கன்னிகையை மணந்த சோழனும்.

(வி - ம்) இயமனுக்கு முன் சென்று வழக்குரைத்தவன் கிள்ளிவளவன். இவன் பெருநற்கிள்ளி பெருங்கிள்ளி என்றும் பெயர் பெற்றவன். "எழக்குரைக்கும் பேழ்வா யிருங்கூற்றுக் கேற்ப, வழக்குரைத்த கிள்ளிவளவன்" எனக் குலோத்துங்க சோழனுலாவினும் வருதல் காண்க, (சங்கர. 5, கலிங்கத். இராசபாரம் 13, இவன் குறிக்கப்படுகின்றுன்.) வழக்கு இன்னதெனத் தோன்றவில்லை. மனு - மந்திரம்,

முதுமக்கட்சாடி வகுத்தவன் சுரகுரு என்ற சோழன் என்பர். நாபாகன் என்று குலோத்துங்கசோழனுலாப் பழைய உரையாசிரியர் கூறுவர். "புவனியின்மே லனைத்துயிரும் வீவ திலேயாக நமன்மேல் வென்றிகொண்டவனும்" என்று கலிங்கத் துப்பரணி ஆசிரியர் கூறுகின்றார். "அணிபெற வெழுதிய வழகிய குரைகவி னுட்செறி மட்சாடி, குடிபுக முடிபுனை சுரகுரு வழி முதல் கொட்டுக சப்பாணி" எனக் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் குறிக்கின்றது. "சித்தமகிழ்ந் தீனமறச் செங்கோ னடாத்த நமன், உத்தமனென் றஞ்ஞா ளுயிர்கொடுபோ காமையி னல், மொய்த்த முதியோர்க்கு முதுமக்கட் சாடிபல, வைத்தகுல தீரனே மன்னுகோ மன்னுகோ" என்பது திருவெண்காட்டுப் புராணம். இதனல், இம்மன்னன் அரசாளுங்காலத்துக் கூற்று வன் வந்து மக்களுயிரைக் கொண்டுபோகாத காரணத்தால் முதுமக்கள் உயிருடன் இருந்தனர் என்றும், அவர்களை மண் ணுற்செய்த தாழியில் வைத்துக் காத்தனர் என்றும், அங்ஙனம் காப்பதற்கு ஆணை தந்தவன் சுரகுருவாகிய சோழனென்றும் நாம் அறியலாம். வீரத்திற்கஞ்சியோ நெறிமுறை கண்டஞ் சியோ கூற்றுவன் அம்மன்னன் நாட்டுமக்கள் உயிரைக் கொண்டு போகாதிருந்தனன் என்பது ஆராய்தற்குரியது.

தூங்கு மெயிலெறிந்த சோழன் யாவன் என அறிதற்குத் தக்க சான்று ஒன்றும் இன்று, "திறல்விளங் கவுணர் தூங்கெயி லெறிந்த, விறன்மிகு முரசின் வெல்போர்ச் சோழன்" (தொல். களவி. சூ. 11, ந. மேற்.) எனக் கூறப்படுவதாலும், புறநா, 39, குலோத். உலா 13, பழமொழி 150, சிலப். காதை. 29, மணிமே. 1, 3 ஆகிய நூல்களினும் இச்செயலே கூறப்படுவதாலும் தூங் கெயிலெறிந்த சோழன் ஒருவன் இருந்தானெனவும், அசைந்து திரிந்த வானத்திலுள்ள அரண் மூன்றையும் அழித்தவன் அவன் எனவும் அறியலாம். இவன் புரிந்த வேறு செயல், இவன் பெயர், காலம் முதலியவை அறிதற்கு வழியின்று.

மேல்கடல் நீர் கீழ்கடற்கு விட்டோன் பெயர் சங்கரண (ஸம்கர்ஷண) சக்கரவர்த்தி எனவும், சமுத்திரஜித் எனவும் கூறுவர். இவன் கப்பல் போக்கு வரவு கருதி நடுவில் இருந்த பூமியை வெட்டி மேல்கடனீரும் கீழ்கடனீரும் ஒன்றுகச் சேரும் படி செய்தான் என்று தெரிகிறது. "புணரி யொன்றினிடை யொன்று புகவிட்ட வவனும்" (கலிங்கத். ௧௧௩) எனக் கூறு கின்றது. அன்றியும், "மேல்கடல் கீழ்கடற்கு விட்டகோன்" (குலோத். உலா. 28) எனவும், "குடகடற்குச் சார்புகுண கடலே யாக்கும், வடகடற்குந் தென்கடற்கு மன்னன்) (இராச ராச. உலா 27, 28) எனவும் ஆசிரியர் கூறுவதாலும் அறியலாம்.

நாகர் குலமகளைக் கைபிடித்த கோ, சூரவாதித்த சோழன் எனவும், அவன் நாகருலகஞ் சென்று நாகர் கன்னியாகிய காந்திமதியை மணந்து, அங்கிருந்து வெற்றிலைக்கொடியைச் சோழ நாட்டிற்குக் கொண்டு வந்தனன்எனவும், இவ்வரலாறு செவ்வந்திப்புராணம், உறையூர்ப்புராணம் இவற்றுட் கூறப்பட்டுள்ளது எனவும், நாகவல்லி எனவடமொழியில் வெற்றிலைக்குப் பெயருள்ளது சான்றும் எனவும் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் கூறியுள்ளார். மணிமேகலை காதை 24, வரி 29 முதல் 59 வரை கூறிய நெடுமுடிக்கிள்ளி வரலாறும், பெரும்பாணாற்றுப்படை 29—37 வரிகளுக்கு நச்சினார்க்கினியர் விளக்கங் கூறிய வரலாறும் காண்க. பொருந்துவதை யாய்ந்துகொள்க. முசுகுந்தனுக்குப் பின் கிள்ளிவளவன், சுரகுரு, தூங்கெயி லெறிந்தவன், சமுத்திரஜித், சூரவாதித்த சோழன் அல்லது நெடுமுடிக்கிள்ளி இவர்கள் அரசுபுரிந்தனர் என்று கொள்க.

## 20—26. உலகறியக் காக்கும்....கரைகண்ட பூபதியும்

(சொ - ள்.) இவ்வுலகத்தார் யாவரும் அறியும்படி தன்னாற் காக்கப்பட்ட சிறிய ஒரு புறவுக்காக மகிழ்ச்சி மிகுந்து நிறுக்குந் தராசில் ஏறி நின்ற மனத்தூய்மையுடையவனான சிபிச்சக்கரவர்த்தியும், மேல் உயரங்கொண்ட குடகுமலையைப் பிளந்து அலைமோதுங் காவிரி இழிந்து வரும்படி செய்த சோழனும், தெளிந்த அருவியையுடைய இமயமலைச் சிகரத்திற் புலிக்கொடியை நாட்டி மேருமலையைத் திரியும்படி செய்து காவிரியாற்றுக்குக் கரைகட்டிய மன்னனும்.

(வி - ம்.) துலைபுக்க தூயோன் சிபி. இவன் வரலாறு பல நூல்களிற் கூறப்பட்டுள்ளது. கலிங்கத். இராசபா. 13, புறநா. 37, 39, 43, 46, சிலப்பதிகாரம் காதை 20 : வரி 52, 23 : 58, 27 ; 166-168; கம்பரா, குலமுறை 7, குலோத்...உலா, 17, இராச...உலா 6 ஆகிய இடங்களிற் காண்க.

பொன்னி தந்தோன் சிவுகன் என்பர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள். இவனைக் காவிரிச்சோழன் என்று சோழ ராச சரித்திரமும், கவேரன் என்று சிலப்பதிகாரமும், காந்தமன் என்று மணிமேகலையும், சித்திரரதன் என்று திருவாலங்காட்டுச் செப்புப் பட்டயமும் கூறுகின்றன. குலோத். உலா 15, இராச உலா 15, கலிங்கத்துப். இராசபா. 15 இவற்றிலும் இவ்வரசன் கூறப்படுகின்றான்.

பொன்னிக் கரைகண்ட பூபதி கரிகாலன் என்பர். "தொக்க கலியின் மூவாயிரத்துத் தொண்ணூற்றின், மிக்க கரிகால வேந்த

னுந்தான்-பக்கம், அலைக்கும் புகழ்ப்பொன்னி யாறுகரை கண்டான், மலைக்கும் புயத்தானும் வந்து" (சோழமண்டல. மேற்) கரிக்காலக்கரை (திருச்செந்துறைச்சாசனம்) இவை கரிகாலன் கரை கண்டவன் என்பதைக் காட்டும். குலோத். உலா 18. இராசரா...உலா, 17 காண்க. இவனே வடவரைமேற் புலிக் கொடி நாட்டியவன் எனவும் அம்மலையைச் செண்டு கொண்டடித்துத் திருப்பினன் எனவும் தெரிகிறது. "செண்டுகொண்டு கரிகால னொருகாலி னிமயச் சிமைய மால்வரை திரித்தருளி" (கலிங்கத். 178) எனவும், வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன் (சிலப். 29) எனவும் வந்துள்ள இடம் அறிக. நெடுமுடிக் கிள்ளியின் பின் சிபி, சிவுகன், கரிகாலன் இவர்கள் கூறப்பட்டனர்.

## 26—32. இன்னருளின் மேதக்க......காவலனும்

(பொ - ள்.) இனிய கருணையுடன் மேன்மை பொருந்தி, பொய்கையார் பாடிய (களவழி நாற்பது) நூலை ஏற்றுக் கொண்டு (கணைக்காலிரும்பொறை) சேரனைக் கால் விலங்கு நீக்கிய (சிறைவிடுத்த) மன்னனும், தன் உடம்பின்மேல் எல்லாவிடத்தும் மதிக்கத்தக்க தொண்ணூற்றாறு புண் கொண்ட வெற்றியுடைய வேந்தனும், (பார்ப்பவர்) கண்களைக் கவர்ந்து கொள்ளும் குற்றமில்லாத தேன்போன்ற சிவபெருமான் நடிக்கும் சிறந்த மன்றத்துக்குத் தன் விருப்பத்தால் பொற்றகடு வேய்ந்த புரவலனும்.

(வி - ம்.) சேரன் கணைக்காலிரும்பொறையைச் சிறை நீக்கி விடுத்தவன் கோச்செங்கோட் சோழன் எனப்படுவான். இவன் கழுமலம் என்னும் ஊரில் சேரமான் கணைக்காலிரும் பொறையோடு போர்புரிந்து வென்று அவனைச் சிறைப்படுத்தினன். இதனை யறிந்து அச்சேரமான் அவைக்களப் புலவராகிய பொய்கையார் களவழி நாற்பது என்னும் நூல் பாடி அரங்கேற்றினர். அதனைக் கேட்ட கோச்செங்கணான் மனமகிழ்ந்து பொறையனைச் சிறைவீடு செய்தனன் என்பது வரலாறு.

"அணங்கு படுத்தும் பொறையனைப் பொய்கைக்குப் பண்டு, கொடுத்துக் களவழிப் பாக்கொண்டோன்" (குலோத். உலா 38) எனவும், "நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு, வில்லவன் காற்றளையை விட்டகோன்" (இராசரா. உலா 35) எனவும் கூறுவர் ஆசிரியர். சோழன் செங்கணானும் சேரன் கணைக்காலிரும்பொறையும் தமது திருப்பெயர் பொறித்துப் பொருதுழிச் சேரமான் கணைக்காலிரும்பொறையைப்பற்றிச்

சோழன் செங்கணுன் சிறைவைத்துழிக் களம் பாடிப் பொய்கை யார் வீடு கொண்டமையான் என்க'' (களவழி நாற்பது. முன் னுரை) என்றதனுலும், புறநானூற்றின் 74 ஆம் அடிக் குறிப் பாலும் இவன் வரலாறு புலப்படுகிறது.

எண்கொண்ட புண் தொண்ணூற்றின்மேலு மிருமூன்று புண் எனக் கூட்டுக. மதிக்கத்தக்க புண் அவை தொண்ணூற் ருறு உடம்பின்மேல் இருந்தன என்று கொள்க. மதிக்கத்தக்க புண் - விழுப்புண். "விழுப்புண் படாத" என்ற குறட்குப் பரிமேலழகர் "முகத்தினும் மார்பினும் பட்ட புண் விழுப் புண்" எனக் கூறியது காண்க. அவ்வாறு முன்புறம் பட்ட புண்கள் தொண்ணூற்ருறு கொண்டவன் எனவே சிறந்த வெற்றி வீரன் என்பது கூருமலே விளங்கும். இச்சிறப்புப் பெற்ற விசயாலயன் என்று கூறுவர். அவனே பல போர்களில் எதிர்த்து நின்று பகைவர்களை யடக்கி வீரவாழக்கை வாழ்ந்த வன். பழைய வுரைக்குறிப்பு இவன் இராசாதேவன் என்று குறிக்கிறது. இவன் பெயர்பெற்ற வீரன். "சீறுஞ் செருவிற் றிருமார்பிற் றெண்ணூறும், ஆறும்படு தழும்பி னுகத்தான்" (குலோத். உலா, 21) எனவும், தொழும்புடைய வாகத்துத் தொண்ணூறு மாறும், தழும்புடைய சண்டப்ர சண்டன்'' (இராச. உலா, 19) எனவும் கூறுகின்ருர் இவர்.

தேறல் - தேன். "குனிக்குந் திருமன்றம்'' என்ற குறிப்பி னுல் தேறல் உவமையாகு பெயராய்ச் சிவபெருமானை யுணர்த் திற்று. அடியார் மும்மலப் பிணியை நீக்குவதால் தேன் எனக் கூறினர். ''கண்ட கண்கள் மற்றென்றினைக் காணுவே'' என்று கூறியதுபோல, சிவனைக் கண்ட கண்கள் வேறு பொருளைக் காண விரும்பா ஆதலின் கண்கொண்ட தேறல் என்ருர். கண் கொண்ட மன்றம் எனக் கூட்டினும் பொருந்தும். சிற்றம்பலம் பொன்வேய்ந்த சோழன் முதற் பராந்தகன். நம்பியாண்டார். திருத்தொண்டர் திருவந்தாதியில் "சிற்றம்பலம் முகடு, கொங் கிற் கனக மணிந்தவா தித்தன் குலமுதலோர்'' (65) என்று கூறுவதால் ஆதித்தன் எனவும் கொள்ளலாம். கரிகாலனுக்குப் பின் செங்கணுனும் விசயாலயனும், முதற்பராந்தகனும் அல் லது ஆதித்தனும் கூறப்பட்டனர்.

## 32—40. தூதற்காப் பண்டு... ...கொண்டோனும்

(சொ - ள்.) (தான் ஏவிய) தூதனை இழிவாகக் கூறிய காரணத்தால் முற்காலத்தில் (போர்க்குப் புறப்பட்டு) ஒருநாட் பகலிலே பதினெட்டுப் பாலைவனங்களையும் கடந்து (சேர

னுடைய) மலைநாட்டை வென்று கைப்பற்றியவனும், தன் சேனைகளை ஏவிக் கங்கை யாற்றையும் கடாரம் என்னும் நாட்டையும் கைப்பற்றி வந்து அரியணைமேல் அமர்ந்த சோழ னும் வங்க நாடு முழுவதையும் பகையின்றி யொடுக்கி மூன்று முறை போர்க்குச் சென்று கல்யாணபுரத்தை யழித்த ஒப்பற்ற ஆண்மையுடைய வீரனும், பகைவரைக் கோபத்தாற் போர்க் களத்திற் சென்று தன் பட்டத்து யானை யொன்றினுல் கொப் பம் என்ற இடத்தில் ஆயிரம் யானைகளையும் வென்று கொண்ட வனும்.

(வி - ம்.) மலைநாடு கொண்டோன் முதல் இராசராசன். இவன் அனுப்பிய தூதனைச் சேரமன்னன் மேலாடையைக் களையும்படி கூறிச் சிறைசெய்தான். அதுகேட்டு ஒருநாட் பக லில் பதினெட்டுப் பாலைவனங்களைக் கடந்து சேரனை வென்று மலைநாட்டைக் கைப்பற்றித் தூதனையும் மீட்டுவந்தான் என்பது வரலாறு. (குலோத். உலா 24) இராசராச. உலா : 21 ; இவ்வர லாறு காண்க. சுரம்—குறும்பு எனவும் பொருள் கொள்ளலாம்.

கங்கையும் கடாரமுங் கொண்ட செம்பியன், இராசேந்திர சோழன் ஆவன். இவன் கங்கைகொண்ட சோழன் எனவும் கூறப்படுவன். கல்யாணி செற்ற தனியாண்மைச் சேவகன். இராசாதிராசன். வங்கத்தை முற்றும்-காந்தளூர்ச்சாலை என் னும் இடத்திருந்த கப்பற்படை முழுவதையும் வங்கதேச முழு வதையும் என்றும் பொருள் கூறலாம். கல்யாணி - கல்யாணம் என்ற நகர். அது சாளுக்கிய அரசர்க்குரிய தலைநகரம். அந் நகரத்தை யழித்துச் சாளுக்கியரை வென்று கைப்பற்றிய வீரத்தைக் "கல்யாணி செற்ற தனியாண்மை" என்றார். "காந்த ளூர்ச்சாலை கலமறுத்தருளி" என்று கீர்த்தியகவலிற் குறிக்கப் படுகின்றது.

வெப்பம் - கோபம். பற்றலரை வெப்பத்து அடுகளத்துக் கொப்பத்து ஒருகளிற்றால் வேழங்கள் ஆயிரமுங்கொண்டோன் எனக் கூட்டுக. கொப்பம் என்பது ஓர் ஊர். இது கிருஷ்ணு நதிக்கரையில் உள்ள ஒரு தீர்த்தம் என்றும், 'கித்ராபூர்' என்று இக்காலம் பேர் வழங்கும் ஊராயிருக்கலாம் என்றும் ஆராய்ச்சி யாளர் கூறுவர். யானையாயிரம் கொப்பத்தில் வென்றவன் இராசேந்திரன் II ஆவன். பராந்தகனுக்குப் பின் முதல் இராச ராசனும் இராசேந்திரசோழனும் இராசாதிராசனும் II இரா சேந்திரசோழனும் முறையே கூறப்பட்டனர் என அறிக.

**40—46.** அப்பழநூல் பாடரவத்.........புரந்ததற்பின்

(சொ - ள்.) அந்தப் பழைமையான நூல்கள் பாடப்படும் ஒலி நிறைந்த அழகிய அரங்கம் என்ற திருநகரில் வீற்றிருக்கும் திருமாலுக்கும் பலவகைப்பட்ட மணிகளால் பாம்புப்படுக்கையமைத்துத் தந்தவனும், தான் ஏற்றுக்கொள்ளும் பரணி நூலின் பொருட்டுப் போர்செய்து கூடல் சங்கமம் என்னும் இடத்தில் அளவற்ற யானைகளை வெட்டிக் கொன்றவனும், அவனுக்குப் பின் அரசுபுரிந்து இவ்வுலகத்தைக் காத்தவனும் என்ற இவர்கள் இப்பூமி வட்டத்தை முழுவதும் அரசுபுரிந்தபின்.

(வி - ம்.) பாடு அரவம் - அடியார்கள் பழைமையான நூல்களைப் பாடித் துதிக்கின்ற ஒலி. அவ்வொலியையுடைய தென்னரங்கம் என அத்தலத்தின் சிறப்புக் கூறினர். பன்மணி என்றது நவமணிகளை. அவற்றைப் பதித்துப் பாயலமைத்தனன் எனக் காண்க. ஆடரவம் என்பதில் ஆடு என்பது படத்தையுடைய பெரும்பாம்பு என்பதை யுணர்த்திநின்றது. தென்னரங்கத்தில் திருமாலுக்குப் பாயலமைத்த சோழன் - இராசமகேந்திரன் ஆவன். இவன் பெயர்பெற்ற (இராசமகேந்திரன் திருவீதி) திருவீதி ஒன்றும் இன்றும் உள்ளது.

கொள்ளுந் தனிப்பரணி என்பது கொண்ட தனிப்பரணி என்னும் பொருளில் வந்துள்ளது. இதனால் பரணி என்ற நூல் பாடி அரங்கேற்றப்பட்டது எனவும், அதனை ஏற்றுக்கொண்டவன் இவன் எனவும் தெரிகிறது. போரில் ஆயிரம் யானையை வெட்டிக் கொன்ற வீரன்மீது பாடும் நூல் பரணி ஆதலால் அதுகுறித்து இவன் கூடலசங்கமம் என்னும் இடத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட எண்ணிறந்த யானைகளைத் துணித்தான் என்னுங் கருத்துத்தோன்ற, "கொள்ளுந் தனிப்பரணிக்கு...... துணித்தோனும்" என்றார். இவன் பெயர் வீரராசேந்திரன் பரணிகொண்ட வரலாறு "பாடவரிய பரணி பகடொன்றின் கூடலசங்கமத்துக் கொண்டகோன்" (இராசராச. உலா 25) என்று கூறுவதாலும் வலியுறுகின்றது. பரணி நூல் இருப்பதாகத் தெரிந்திலது. அழிந்ததுபோலும்.

அவனுக்குப்பின் அவனி காத்தோன் அதிராசேந்திரன் எனத் தெரிகிறது. இவன் ஆட்சி நீட்சியின்மையாலும் அதில் அருஞ்செயல் ஒன்றும் புரிந்திலனாதலாலும் இவனைப் புகழாது "அவனி காத்தோனும்" என்ற அளவில் நிறுத்தினர் ஆசிரியர் எனக் காண்க.

## 46—55: மேவலர்தம் சோலைத்......விக்கிரமசோழன்

(சொ - ள்.) பகைவர் (பாண்டியர் சேரர்) உடைய மீன் கொடியைத் தொலைத்து, விற்கொடியையும் நீக்கி இரண்டு முறை சென்று காந்தளூர்ச்சாலைக் கலமறுத்து வென்ற சேனையுடையவனும், மேல்கடலைத் தனக்கு உரிமையாக்கிக்கொண்டு கொங்கண நாடும் கன்னட நாடும் கைக்கொண்டு வலிமை பொருந்திய மராட்டியர் அரசனைக் கொன்று (அவன் நாட்டையும் பற்றி) இமயமலையே தன் (அரசுக்குரிய) எல்லையாகக் கண்டு முன்னர் (தன் நாட்டிலுள்ள) கொடிய வறுமையையும் சுங்கத்தையும் நீக்கி அறத்தை வளர்க்கும் ஆணைச் சக்கரம் கடல் சூழ்ந்த பூமியை வலமாகச் சுற்றிவரக் காப்பாற்றிய ஆத்திமாலையாற் பொலிந்த புயத்தையுடைய அபயனுக்கு உலகமெல்லாம் விளங்கும்படி தோன்றிய அரசன் ஆகிய விக்கிரம சோழன்.

(வி - ம்.) அபயன் - முதற்குலோத்துங்கன். அவன் மகன் விக்கிரமசோழன். முதற்குலோத்துங்கன் சிறப்புக்கூறி அத்தகைய சிறப்புடைய அபயற்குத் தோன்றிய கோன் விக்கிரம சோழன் எனச் சிறப்பித்தார். சேல் - மீன். சிலை - வில். இவை முறையே பாண்டியன் சேரன் இவர்கட்கு உரிய கொடிகள். இக்கொடிகளை நீக்கினன் எனவே சேரர் பாண்டியரைத் தனக்கு அடங்கி அரசுபுரியச் செய்தனன் என்பது தோன்றிற்று. காந்தளூர்ச்சாலைக் கலமறுத்தது, மேலைக்கடல் கொண்டது, கொங்கணம் கன்னடம்கொண்டது, மாராட்டரசைக் கொன்றது, வடவரையை எல்லையாக்கியது, மிறக்கலியும் சுங்கமும் மாற்றியது. அறத்திகிரி வலமாக அரசுபுரிந்தது ஆகிய செயல்களனைத்தும் முதற்குலோத்துங்கன் புரிந்தவை எனக் காண்க. காந்தளூர்ச்சாலை என்பது திருவனந்தபுரத்தைச்சார்ந்த ஒரு துறைமுகம். "காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி" என்ற மெய்க்கீர்த்தியும் இதனை வலியுறுத்தும். "பஞ்சவர் ஐவரும் பொருத போர்க்களத்தஞ்சி வெரிநளித்தோடி" எனவும், "மீனவர் நிலைகெட வல்லவர் குலைதர" எனவும், அக்கீர்த்தி யகவலின் வருவதால், சேரர் பாண்டியரைச் செருக்கொழிய அடக்கினன் என்பதும் உறுதியாம். "விட்ட தண்டினின் மீனவ ரைவரும், கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலும்நீ" எனவும், "போரின் மேற்றண்டெடுக்கப் புறக்கிடுஞ், சேரர்வார்த்தை செவிப்பட்ட தில்லையே" எனவும், "வேலை கொண்டு விழிஞ மழித்ததுஞ் சாலை கொண்டதுந் தண்டுகொண்டே யன்றோ" எனவும் கலிங்கத். 381-383 தாழிசைகளாலும் அறியலாம். எங்கராயன் என்னும்

படைத் தலைவன் கலிங்கமன்னனுக்கு முதற்குலோத்துங்கன் வீரத்தை யெடுத்துக் கூறும் கூற்று இவை. கொங்கணம் வட கன்னடம். இது கொண்கானம் எனச் சங்க நூல்களிற் காணப் படுகிறது. சுங்கந்தவிர்த்த குலோத்துங்க சோழதேவன் என்ப தும் இவன் பெயர். சுற்றி வருவதை வலமாக வருதல் என்பர். இவ்வாறு கூறுவது மரபு. "வலமுறை வருதலு முண்டென்று" (புறநா. 31) எனவும், "எழுபார்வலம்வந்த மனுகுல் சோழனே" (வி. பா. 17 ஆம் போர்ச். 66) எனவும் வருவன காண்க. அப யற்குத் தோன்றிய கோன் எனவும், "பார்விளங்கத் தோன்றிய கோன்" எனவும் கூட்டுக. இவன் தோன்றியதால் பாரில் பசி யும் பிணியும் நீங்கி வசியும் வளனும் பெருகி மக்கள் யாவரும் விளங்கினர் என்பது கருத்து. விக்கிரமசோழன் என்பவன் பாட் டுடைத் தலைவன். இனி வருவது அவன் சிறப்பு என அறிக.

## 55—62: தோடைத்தும்பை......அபிடேகஞ்சூட

(சொ - ள்.) தும்பை மாலை சூடிய முரசு மூன்று மேகம் போல முழங்கவும், வலிய இடத்தையுடைய மூன்று உலகங் களையும் புரப்பதற்காக முடியைக் கவித்து ஒப்பற்ற செங்கோல் சென்று எட்டுத்திசையையும் அளந்துவரவும், சிறப்புற்ற குடை யானது எட்டுத்திசைத் தெய்வயானைகளையும் உள்ளே விடுத்து உட்படும்படி கவிந்து நிழல்செய்யவும், ஒளிபொருந்திய இரண்டு மாலைகளையும் முடியையும் எடுத்துவிட்டு வேற்றரசர் யாவரும் இரண்டு பாதங்களையும் தமக்கு முடிகளாகச் சூடவும்.

(வி - ம்.) தொடைத்தும்பை என்பதைத் தும்பைத்தொடை யென மாற்றுக. போர்க்குச்செல்வோர் சூடுவது தும்பைமாலை. முரசுக்கு மாலை சூட்டுவது இயல்பு. போர் முரசுக்குரிய தும்பை மாலையை மூன்று முரசுக்கும் புனைவர் எனவும் தெரிகிறது. படை, கொடை, மணம் குறித்து முழங்குவதால் 'மூன்றுமுரசு' என்றார். மணமுரசினை விடுத்து நீதிமுரசு கூட்டி மூன்றென்றுங் கூறுவர் சிலர். 'மும்மைப் புவனம்' என்பது தமிழ் நாட்டின் மூன்று பகுதியை யுணர்த்தும். பெருமைக்காக முடிகவித்தா னலன் புரப்பதற்கறிகுறியாக முடிகவித்தான் என்பதுதோன்ற, 'புவனம் புரக்க முடிகவித்து' என்றார். அவன் செங்கோல் செல்லாத விடமில்லை இவ்வுலகத்தில் என்ற கருத்துதோன்ற, 'திசையளப்ப' என்றார். விழுக்கவிகை எட்டுக்கடவுட் களிறு தம்மைவிட உட்படுத்து கவிப்ப எனக்கூட்டுக. சிறந்த வெண் குடையானது எட்டுத்திசை யானைகளுக்கு அப்பாலும் சென்று நிழல் செய்தது. யானைகளையும் உட்படுத்தியது. அவற்றிற் கும் இக்குடையே காவலாக நின்றது என்றார். மக்கட்குக்

காவலாக நிழல் செய்ததும் அன்றித் திசையானைகட்குக் காவலாகவும் இருந்தது என்பது கருத்து. அரசர் இயற்கை மாலையும் அடையாளப் பூமாலையும் அணிவார் என்பது தோன்ற இணைத்தார் என்றார். மணத்திற்காகப் புனைவது இயற்கைமாலை. தன்னைப் பிறர் இன்னுன் என அறிவதற்காகப் புனைவது அடையாளப் பூமாலை. சிற்றரசர் பேரரசரைக் காணச் செல்லும்போது முடியையும் மாலையையும் எடுத்துவைத்து விட்டுச் செல்வது முறைபோலும். அதுகுறித்து, "தார்மகுடமிறங்கி" என்றார். இணைதார் என்பது இணைத்தார் எனச் செய்யுள் நோக்கி விரிந்து நின்றது எனக் கொண்டு, 'இணைந்த தாரையுடைய முடியை' எனக் கொள்ளினும் பொருந்தும்; முடிமேற் றார் புனைவது இயற்கையாதலின். அபிடேகம் - கிரீடம். முடி. வேற்றரசர் தம் முடியை இறக்கிவந்து துணைத்தாள்களை முடியாகத் தமது தலையிற் சூடினர் என்று நயம்படக் கூறினர்.

## 62—70: பணைத்து ஏறு நீராழி......நாளில் ஒருநாள்

(சொ - ள்.) பெருகி மேலெழுகின்ற நீர் நிறைந்த ஏழு கடல்களும் நிலத்தில்உள்ள ஏழுதீவுகளும் தன்னுடைய போர்க்குரிய சக்கரத்தால் வென்று (யாவர்க்கும் பூமி) பொதுவென்று சொல்வதை நீக்கி (தனக்கே யுரியதாக்கி) சிறந்த புறக்கடலும் சக்கரவாளகிரியும் மேகலையும் அல்குலுமாகக் கொண்ட பூமாது தன்னிரண்டு தோளினும், சொல்லும் அழகுடைய ஏழுலகங்களும் தனியாகக்கொண்ட குற்றமில்லாத தன் பட்டத்துத் தேவியின் கொங்கையினும், மலரில் வாழும் செல்வியாகிய திருமகள் நீண்ட கண்களினும் தங்கியிருக்க அரசுபுரியும் நாள்களில் ஒருநாள்.

(வி - ம்.) முழங்க (56), அளப்ப (58), கவிப்ப (60), சூட (62) என்ற செயவெனெச்சங்களைப் பொதுநீக்கி என்ற வினையெச்சத்துடன் கூட்டி உறைகின்ற பெயரெச்சத்துடன் அதனைக் கூட்டி முடிவு செய்க. கடல்நீர் ஒருகாலத்திற் பெருகி மேலெழுந்து வரும் இயல்புகுறித்து 'பணைத்து ஏறு நீராழி' என்றார். நிலவாழி என்பது நிலத்திலுள்ள மண்டலம் எனப் பொருள்படும். இது வட்டம் வட்டமாகச் சூழ்ந்திருக்கும் தீவுகளைக்குறித்தது. இறலி, குசை, கிரவுஞ்சம், சம்பு, புட்கரம், கமுகு, தெங்கு என்பனபெயர். மற்றையரசர்கட்கும் உரிமையுடையது இப்பூமி என்று நினைக்க இடமின்றித் தனக்கே யுரிமையுடையதாகக்கொண்டு அரசிபுரிந்தான் என்றகருத்து வெளிப்படப் பொதுநீக்கி என்றார். நிலமடந்தைக்குப் புறக்கடல் மேகலையாகவும்,

சக்கரவாளமலை அல்குலாகவும் கூறப்பட்டது மிகவும் பொருத்த மான உருவகம், சக்கரவாளத்தைச் சூழ்ந்திருப்பது புறக்கட லாதலால். வேந்தர்கள் பூமியைத் தாங்குவது தோளில் எனக் கூறு மரபுபற்றி, 'நிலமடந்தை தோள்களினும்' என்றார். 'உலகங்களேழுந் தனித்துடைய கோதில் குலமங்கை' என்றது விக்கிரம சோழன் பட்டத்துத் தேவியை. இந்நூலில் 78, 80 கண்ணிகளில் 'உலகமேழுடைய பெண்ணணங்கு, பெண்சக்கர வர்த்தி' என்று குறிப்பதும் அத்தேவியையே சுட்டும். எனவே தேவியின் பெயர் 'ஏழுலகுடையாள்' என இருத்தல்வேண்டும். முக்கோக்கிழானடிகள் பட்டத்துத்தேவி என்றும், இவ்வுலாப் பாடுங்காலத்தில் அவள் மறைந்து இரண்டாம் மனைவியாகிய தியாகபதாகையே இருக்கவேண்டும் அக்காலத்தில் என்றும், அவளையே இப்பெயராற் கூறினர் என்றும் டாக்டர் உ. வே. சாமி நாதையர் அவர்கள் குறிப்பு வரைந்துள்ளார். ஆய்ந்து உண்மை காண்க. பூமாது, தேவியின் கொங்கையினும் தங்கினள் எனக் கொள்க. மன்னனும் மன்னன் தேவியும் ஒருங்கிருந்து அரசு புரிவதைக்குறித்தது அது. திருமகளும் அவ்விருவர்கண்களினும் தங்கினள் எனக் கொள்க. "எங்கோன் கண்ணிற் குடியாய்க் கலந்திருந்தாள்" எனப் பிறரும் கூறுதல் காண்க. 56 முதல் 70 கண்ணிகள் வரை விக்கிரமசோழன் அரசாட்சிச் சிறப்புக் கூறினர். அங்ஙனம் அரசுபுரியும் நாளில் ஒருநாள் "கடாக் களிற்றுப் போந்தான் கொடைச்சென்னி உத்துங்க துங்க னுலா" (648) என வினை முடிவு செய்க. இனி உலா வருஞ் சிறப்புக் கூறப்படும்.

## 70—80: அறைகழற்கால் தென்னர்......யினிதெழுந்து

(சொ - ள்.) ஒலிக்கின்ற வீரக்கழல் புனைந்த பாண்டியர் திறையாகத் தனக்கு அளந்து தந்த முத்துக்களிற் சிலவற்றைப் பூண்டு, அப்பாண்டியர்க்குரிய பொதியமலை தந்த சந்தனக் குழம்பையும் பூசி, அவர் மலையிலிருந்து வரவிட்ட தென்றற் காற்றானது பாதங்களை வருடவும், வாள்போன்ற கண்களைப் போர் செய்யும்படி விட்டிருக்கும் பெருமையுடைய மகளிர் கூட்டம் அருகிருந்து போற்றவும், கலந்த முத்துப்பந்தரின்கீழ் நீளமான வெண்ணிலாப்போன்ற பாயலின்மீது, பூங்கொத்துக் கள் மலர்ந்த மாலையணிந்த இரு தோள்களும், மையணிந்த அகன்ற விழிகளும் கொங்கையும் பருத்திருக்கின்ற செருக் குடைய அன்னப்பறவைபோன்ற மதிக்கப்படும் உலகங்கள் ஏழுடைய பெண்ணணங்கு ஆகிய மலர்பெய்த கூந்தலையுடைய பெண் சக்கரவர்த்தியுடன் கூடித் துயின்ற துயினீங்கி இனிமை யாக எழுந்து.

(வி - ம்.) தென்னர்-தென்னாடுடையவர். இவர் பாண்டியர். அவர் நாட்டின் மிகுதியாகக் கிடைக்கும் பொருள் முத்து ஆதலால் அவற்றை யளந்து திறையாகத் தருவர் என்பது தோன்ற, "திறையளந்த முத்து" என்றார். சந்தனமும் அவர் மலையினின்று வரும் பொருள். முத்தும் சந்தனமும் பாண்டியர்க்குரிய பொருள் என்பதை, "பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து" எனவும், "தன்கடற் பிறந்த முத்தினாரமும், முனை திறை கொடுக்கும் துப்பிற் றன்மலைத், தெறலரு மரபிற்கடவுட் பேணிக், குறவர் தந்த சந்தி னாரமும், இருபே ராரமும் எழில் பெற வணியும்" (அகநா. 13) எனவும், "கோவா மலையாரம் கோத்த கடலாரம், தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே" (சிலப். 17, உள்வரி வாழ்த்து)எனவும் கூறியவை விளக்கும். தென்றல் தெற்குத் திசையிலிருந்து வருவதால் "தென்னர் வரவிட்ட தென்றல்" என்றார். மன்னனும் மன்னன் தேவியும் இருக்கும் இடத்துநிற்கும் மகளிர் ஒவ்வொருவரும் தம்மை எப்போது எவ்வினை செய்ய அழைப்பாரோ என எண்ணிக் கண்கள் இமையாது நோக்கியிருப்பது இயற்கையாதலால் "வாட்கண் பொரவிட்ட பேராயம்" என்றார். வெள்ளைத் துகில் பாயலின்மேல் விரித்திருப்பதால் 'நிலாப்பாயல்' என்றார். நிலாப்போன்ற பாயல் என விரிக்க. தோளும் கண்ணும் அல்குலும் கொங்கையும் பருத்திருத்தல் மங்கையர்க்குரிய இலக்கணமாதலாற் 'பெரிய களியன்னம்' என்றார். "அகலல்குல் தோள் கண்ணென மூவழிப் பெருகி" (கலித். 108)எனவும், "பெயருளி முகிழெனப் பெருத்தநின் னிளமுலை" (கலித். 56) எனவும் வருவன காண்க. பூண்டு: அணிந்து, வருட, போற்ற, பாயலின் மேல், பெண் சக்கரவர்த்தியுடன் (துயின்ற) துயில் எனக் கூட்டுக. முத்துமாலை புனைவதும், சந்தனம் பூசுவதும், தென்றல் வருமாறு செய்வதும் காமவின்ப நலம் கருதிய செயல் எனக் காண்க.

## 80—86; போய்யாத போன்னித்......முடிவணங்கி

(சொ - ள்.) எக்காலத்தும் நீர்வற்றாத காவிரியாற்று நீரின் மூழ்கி மறையோர் கரத்தாலளித்த இளமையான தளிர்த்த அறுகம்புற் காப்பை யணிந்து பழமையான வேதங்களின் கொழுந்தும், வெள்ளிமலைக் கொழுந்தும் சடையிற் பிறைக் கொழுந்தை வைத்த பெருமானும், நீலகண்டமுடைய குளிர்ந்த செவ்வானமும் தெய்வத்தின் ஒப்பற்ற ஒளியும் மூன்று கண்களை யுடைய கனியும் ஆகிய சிவபெருமானைத் தலையால் வணங்கி.

(வி - ம்.) வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி மலைத்தலைய கடற்காவிரி (பட்டினப். 5) எனவும், 'தவா நீர்க் காவிரிப் பாவை' (மணிமே. 3, 55) எனவும் காவிரியைச் சிறப்பித்ததுபோல இவரும் "பொய்யாத பொன்னி" என்றார். மழை பெய்யாத காலத்திலும் நீர் வற்றாமல் ஓடும் என்பது கருத்து. திருமஞ்சனம் ஆடி-சிறந்த நீரிற் குளித்து. அறுகம்புல் மங்கலப் பொருள், காப்புப்பொருள். இக்காலத்தும் பிள்ளையார் பிடித்து வைத்து அதன்மேல் அறுகம்புல் அழுத்திவைப்பதைக் காணலாம். பூசுரர் - மறையோர். அவர் கரத்தால் அறுகம்புற் காப்பணியப் பெற்றனர் எனக் கொள்க. இன்னகாலத்தில் தோன்றியது என அறியப்படாததால் 'முன்னை மறைக்கொழுந்து' என்றார். வெள்ளிமலை - கைலைமலை. அதன் உச்சியிற் சிவன் உறைவதாக நூல்கள் கூறுவதால் 'வெள்ளிமலைக் கொழுந்து' என்றார். மோலி - சடைமுடி. கறை - நஞ்சு. களம் - கழுத்து. நஞ்சின் கறுப்புத் தோன்றுவதால் 'கறைக்களம்' என்றார். விசும்பு - வானம். பனி - குளிர்ச்சி. செக்கர் - சிவப்பு. சிவந்த குளிர்ந்த வானம் என்க. கறைக்களத்தையுடைய......சிவந்த குளிர்ந்த வானம் எனவே குறிப்பாற் சிவபெருமானை யுணர்த்தியது. சுடர் - ஒளி. தனி - ஒப்பில்லாதது. தெய்வத்தன்மையுடைய ஒப்பில்லாத ஒளி எனவே இறைவனை யுணர்த்தியது. "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி" இறைவன் நிற்பதால் விசும்பு என்றும் சுடர் என்றும் கூறினர். கனி மக்கட்கு இனிய சுவைப்பொருளாய் இன்பத்தைத் தரும். அதுபோல இறைவன் இன்பத்தை யளிப்பதுகுறித்துக் 'கனி' என்றார். சிவன் என்பது தோன்ற 'முக்கட்கனி' என்றார். வணங்கும் உறுப்புக்களுட்டலை சிறந்தது தலையாதலால் 'முடிவணங்கி' என்றார். "தலையே நீ வணங்காய்" என்ற நாவுக்கரசர் திருமொழியும் உணர்க. உலகத்திற் பிறந்த மக்கள் அனைவரும் துயில் நீங்கி யெழுந்தவுடன் நீராடி உடலைத் தூய்மை செய்து பின்னர் உள்ளந் தூய்மையாவதற்கு இறைவனை வணங்க வேண்டும். இதுவே காலைக்கடன் என நூல்கள் கூறுவதால் இம்மன்னனும் அக்கடனாற்றினன் எனக் கொள்க.

## 86—100: மிக்குயர்ந்த தானத்துறை......வனப்பமைந்து

(சொ - ள்.) மிகவும் உயர்ந்த தானத்தின் வகைகளைச் செய்து முடித்து அணிந்துகொள்ளுந் தகுதியுடைய பெருமையான அணிகலங்கள் ஏவலரைக் கொண்டுவரப் பணித்து (அவற்றில்) வண்டுகள் மொய்த்துச் சுற்றுந் தாமரை மலர் போன்ற முகத்தில் கலைமகளுடனே தாழ்ந்த மகரக்குழை

விளங்கவும், வாழ்கின்ற பருத்த கொங்கைகளையுடைய பூமியாகிய மங்கையுடன் புயத்தில் ஒளியுடைய மணிகள் பதித்த வாகுவலயம் சூழ்ந்து வயங்கவும், பரந்த குறைவில்லாத பெருமையான புகழ் மடந்தையுடனே மணிகள் பதித்த கடகம் கரத்தில் விளங்கவும், ஆசையால் கூடியிருக்கும் திருமகளுடனே திருப்பாற்கடல் முன் கொடுத்த விளங்கு மணியாகிய கவுத்துவம் மார்பில் தங்கவும், வருந்தாமல் அரிய வெற்றியை யளிக்கும் வீரமங்கையாகிய துர்க்கையோடு இடையிற் சிறந்த உடைவாள் பொருந்தவும் (புனைந்து) பொருத்தமான பெருமையுடைய தன் வடிவத்தில் அருமை பெருமையுடைய பிற அணிகளையும் அணிந்து அளவில்லாத பல நிறங்களால் அழகு பொருந்துவித்து.

o

(வி - ம்) தானத்துறை என்றது கொடையின் பிரிவுகளைக் குறித்தது. அன்னம், ஆடை, பொன், பூமி, பசு முதலியவற்றை உயர்ந்தோர்க்குக் கொடுப்பது தானம். இவை முறையே அன்னதானம், வஸ்திரதானம், சொர்னதானம், பூதானம், கோதானம் என வடமொழியிற் கூறப்படும். நீராடிக் கடவுட்பூசை முடிந்தபின் ஏழைகட்கு அன்ன மாடை முதலியன வழங்கினான் என அறிக. பின்னர்ப் பலவகையணி புனைந்து அலங்கரித்தல் கூறுகின்றார். மன்னர்க்குத்தக்க அணி மன்னர் புனைய வேண்டும். வணிகர்க்குத் தக்கவணி வணிகர் புனைய வேண்டும்; வீரர்க்குத் தக்கவணி வீரர் புனைய வேண்டும்; ஏழைக்குத் தக்கவணி ஏழையணிய வேண்டும்; செல்வர்க்குத் தக்கவணி செல்வர் புனைய வேண்டும். மாறி யணிந்தால் இழித்துரைக்கப்படுவர். இஃது இயற்கை யாதலால் "சாத்துந் தகைமையன மானக் கலன்கள்" என்றார். கலைமகள் உறையும் இடம் நாக்கு. சொல் நாவினின்று பிறப்பதால். அது முகத்தில் உள்ளது. மகரக்குழையும் முகத்தை யடுத்துத் தொங்குவது. அதுகுறித்துச் "சொன்மா மகளுடனே...குழைதயங்க" என்றார். நிலமடந்தை வாழும் இடம் தோள். தோள் வலிமையாற் பூமியைக் காப்பதால், அதனால் தோள் அணியாகிய வாகுவலயம் "அவளுடன் சூழ" என்றார். புகழ்மகள் வீற்றிருக்கும் இடம் கைகள். ஈகைக்குக் கருவியாவது கை. ஈகையாற் பிறப்பது புகழ். "ஈத லிசைபட வாழ்தல்" என்றும், "உரைப்பா ருரைப்பவை யெல்லா, மிரப்பார்க்கொன் றீவார்மே னிற்கும் புகழ்" என்றும் வள்ளுவர் கூறிய வாய்மொழியும் நோக்குக. அதனால் "கீர்த்தித் தையலுடனே மணிக் கடகம் கையில் வயங்க" என்றார். திருமகள் திருமால் மார்பில் வாழ்வது போலவே மன்னர்கள் மார்பிலும் வாழ்வதாகக் கூறுவது நூல் மரபு. காக்குந் தொழிலால் மன்னரும் திருமாலும் ஒப்பாவார். "திருவுடை மன்னரைக் காணிற் திருமாலைக்

கண்டேனே'' யென்னும் வாக்கும் நோக்குக. திருமால் மார்பிற் கௌத்துவ மணியும் அமைந்திருக்கும். இவ்விரண்டும் இம் மன்னன் மார்பிலும் வயங்கின என்பார், "திருவுடனே மணி மார்பின் மல்க'' என்றூர். கொற்றம் ஆக்கும் அணங்கு - கொற்றவை எனப் பெயருடையவள். அவளே துர்க்கை. அவள் அமர்ந்திருக்கும் இடம் மருங்கு. அவ்விடத்தில் உடைவாள் செருகப்பட்டிருப்பதால் அது வீரத்திற்குரிய இடமாயிற்று. கொற்றவ்வையுடனே உடைவாள் கூடியிருந்தது எனக் கொள்க. தயங்க (90), சூழ (92), வயங்க (94), மல்க (96), வாய்ப்ப (98) என்ற எச்சங்களுக்கு உம்மை கூட்டிப் புணர்ந்து என்ற எச்சம் வருவித்து முடிக்க. அணிந்து (99) என்ற எச்சத்தை அதனுடன் சேர்க்க. அரும்பேரணி என்பது பிறவணிகளைக் குறித்ததாகக் கொள்க. அணிந்து வனப்பமைந்து, (100) கோயிற் புறநின்று (103) எனக் கூட்டுக.

## 100—103. கண்ணுதலோன்...கோயிற் புறநின்று

(சொ - ள்.) நெற்றியிற் கண்ணுடையவரான சிவபெருமான் (தன்மேற் போர் புரிய) மன்மதன் வில்லை வளைக்க (அதனல் சினந் தெரித்து) முன் வாங்கிய அவன் கட்டழகை (இப்போது தன்னை) மாலையணிந்த முடியால் வணங்கியது குறித்துத் தந்தது போலத் தோன்றும் விரும்பத்தக்க அழகிய வடிவத்தோடும் அவணின்றும் பெயர்ந்து அரண்மனைப் புறத்தே சென்று நின்று.

(வி - ம்.) பலவகையான அணிகலன்கள் அணிந்து புறப்பட்டபோது காமனைப்போலக் கட்டழகுடையுவனுகத் தோன்றினுன். சிவபெருமானை வணங்கினன். உடனே பேரழகுடையவனுகத் தோன்றினுன். அத்தோற்றம், தன்மேற் பகைகொண்டு வந்த காமன் கட்டழகை வாங்கி வைத்திருந்து தன்னைப் பணிந்த அன்பனுகிய விக்கிரம சோழனுக்குச் சிவபெருமான் கொடுத்தனன் போலும் எனக் கருதுமாறு விளங்கியது என்பது கருத்து. இது தற்குறிப்பேற்றம். இனிப் பட்டத்து யானையின் சிறப்புக் கூறுகின்றூர்.

## 104—112. காலத் ததிரும்...வெங்கால கோபம்

(சொ - ள்.) தனக்குரிய காலத்திற் (போர்க்காலங்களில்) பிளிறுகின்ற மதம் பொருந்திய யானை இவ்வுலகத்தில் தானே முழங்குவதல்லாமல் தனக்கெதிராக வானமே முழங்கினுலும் அவ்வானத்தைத் தடவி அதற்குப் பட்டமும் கொம்பும் வலிய

துதிக்கையும் இல்லையெனக் கண்டு சினந்தணியும் இயல்புடைய எமராசதண்டம் போன்றது அது நீங்காத பெரிய போர்புரியும் கொம்புகளிரண்டும் வளர்ந்து பருப்பதற்கு அருமையான தானே ஒரு முதலாகி நின்று கருமையான மலைச்சிகரங்களெல்லாம் இடிந்து மடியும்படி குத்துகின்ற கொலை செய்யுங் கொம்புகளை யுடைய கொடிய காலனது கோபம் போன்றது அது.

(வி - ம்.) போர்க்காலத்தில் பகைவர் அஞ்சுமாறு முழங் கும் என்பது தோன்ற 'காலத்தீதிரும்' என்றார். வேற்றுயானை யைக் கண்டால் வெகுளி தோன்றும். அதனைக் கொல்ல முய லும். அத்தகைய மதமயக்கங்கொண்டது என்ற கருத்து விளங்க வான் முழங்கினும் அவ்வானைத் தடவிப் பார்த்து யானைக் குரிய அணி, மருப்பு, துதிக்கை இல்லாமையை யறிந்து சினந் தணியும் என்றார். உலகவழக்கிறந்த உயர்வு நவிற்சியணி. வான் - மேகம். வானில் இருப்பதால் அப் பெயர் பெற்றது. எமனாகிய மன்னன் தண்டனை எவ்வாறு மாற்றப்படாதோ அது போல இவ்வானையின் தண்டனையும் எவராலும் மாற்றப் படாது. கொல்லக்கருதி வந்தால் கொன்றே விடும் என்பது.

இரண்டு கொம்புகளும் வளர்ந்து பருப்பதற்கு இடமாகின் றது இந்த யானையாகிய மலை என்பது தோன்ற, 'ஒருதானே யாகி' என்றார். மற்றை மலைக்கோடனைத்தும் இடியக் குத்துங் கொலைக்கோட்டையுடையது இது. காலன் கோபம் போன்றது என்பதற்குக் கூறிய கருத்தையே இதற்கும் பொருத்துக.

## 112—124. அலைத்தோட்ட ஊறு ....என்றுவக்குங் காற்று

(சொ - ள்.) (எல்லாப் பொருள்களையும்) இழுத்து ஓடும் படி ஊறுகின்ற மதம் இவ்வுலகத்தில் தன் மதமேயாகவென்று கருதி வேற்று யானையின் மதநாற்றத்தைப் பொறுக்காத கோபத் தால் திக்கு யானைகள் எட்டும் தமக்குரிய கூறுபொருந்தும்படி (பூமி பாரத்தைத்) தாங்கிப் பொறுக்கமுடியாமல் வருந்துகின்ற அவற்றின் பிடரியினின்றும் அப்பாரத்தை வாங்கி மற்ற மன் னர்க்கும் பொது என்பதை யொழித்து (தனக்கே யுரியதாக்கி) இம்மண்ணுலக முழுவதையும் உயர்ந்த வெற்றிபொருந்திய இருபுயத்தால் மன்னனாகிய அகளங்கன் சேரத்தாங்கிய பின்னர் (அவ் யானைகள்) முன்பு தாம் பட்ட வருத்தமனைத்தையும் அறவே மறந்து பருத்த வாய் மதம் வரும்வழி திறந்து பரவ, அம்மதப் பெருக்கத்திற்றோன்றிய இனிய நாற்றத்தினைக் குறித்து அவ்வழியே யோடி அவற்றின் பின்புறத்தைக் கண்டு

கோபந்தணிந்து இவைகளை எம்மன்னன் ஆகிய சோழன் காப் பாற்றினன் ஆதலால் இவைகள் இப்போது செருக்கடைந்துள் ளன வென்று கண்டு மகிழும் காற்றுப்போன்ற யானை அது.

(வி - ம்.) பக்கத்திலுள்ள பொருள்களை யெல்லாம் அலைத் தோடும்படி மதநீர் ஒழுக்கும் யானை என்பது தோன்ற, 'அலைத் தோட ஊறும் மதம்' என்றார். தன்பால் ஊறுமத நாற்றத்தை யன்றி வேறுமத நாற்றம் தோன்றினல் அந்நாற்றம் வந்த வழியே சென்று அவ் யானையைக் கொன்றுவரும் கோபக்குறிப் புடையது இவ் யானை என்பது தோன்ற, 'வேறுமதம் பொரு வேகத்தால்' என்றார். எட்டு யானைக்கும் ஒவ்வொன்றுக்கும் உரிய பங்குப்படி பூமிபாரந்தாங்கின என்ற குறிப்புத்தோன்ற, "கூறெண்றத் தாங்கி"[3] என்றும், அவ்வாறு தாங்கியும் பொறுக்க முடியாப் பாரமாயிருந்தது என்றும், அப்பாரத்தை அவற்றின் பிடரியினின்று வாங்கினன் என்றும், வாங்கித் தன் கொற்றப் புயமிரண்டில் ஏந்தித் தாங்கினன் என்றும், தாங்கியபின்புதான் அவைகள் வருத்தந்தீர்ந்து பருத்த மதம் பொழிந்தன என்றும் தோன்ற, 'மாதிரத்து வேழம் பருத்து கடாந்திறந்து பாய' என் றார். திசை யானைகள் மதம் பொழிய அந்நாற்றத்தையறிந்து அதன் வழியே சென்று அவற்றின் பின் புறங்கண்டு சினந் தணிந்து, நம் மன்னன் விக்கிரமசோழனல் காப்பாற்றப்பட்டுக் களித்திருக்கின்றன பாவம்! இவற்றோடு போர்புரியலாகாது என்று கருதி மீண்டுவரும் என யானையைச் சிறப்பித்தார். வேற்று யானை மதநாற்றத்தைக் கண்டால் பொறுக்காமல் சினங்கொள்வது மதயானையின் இயல்பு என்பதை "பாத்த யானையிற் பதங்களிற் படுமத நாறக், காத்தவங்குச நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப், பூத்த வேழிலைம் பாலையைப் பொடிப் பொடியாகக், காத்தி ரங்களாற்றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு" (கம்ப. வரைக். 6) என்று கூறுவதாலும் அறியலாம். வேற்று யானையைக் காணினும் பொருது என்பதை "நிழல்சுளி களிநல்யானை" (நைட. கலிதோன், 11) என்று கூறுவதால் அறிக. கடாக்களிறு (104) யமராசதண்டம் (108), வெங்கால கோபம் (112), உவக்குங் காற்று (124) ஆகிய அயிராபதம் (128) எனக் கூட்டுக. அயிராபதம் என்பது அரசன் பட்டத்து யானையின் பெயர். அயிராபதம் இந்திரன் யானையின் பெயரிட்டு அழைப்பது மரபுபோலும். அயிராவணம் சிவபெருமான் கயிலையில் இருக்கும் யானை. இதன் பெயரும் இட்டிருப்பதாகத் தெரிகிறது. சிந்தாமணியில் "அயிராவணத்தொடுஞ் சூளுறு மையன்" (2126) என வருவது காண்க.

## 124—128 : நெளித்திழிய...பிடிபடியா வேறி

(சொ - ள்.) பகைவர் நாட்டை நெளியும்படி செய்து அவை இழிவடையச் சினந்து மிதித்துப் போர்க்களத்தில் எதிர்த்துப் போராடும் மன்னருயிரைக் கூற்றுவனுக்கு உணவாகச் செய்கின்ற அயிராபதம் நின்றதன் மேல் பிடரியில் அருகில் நின்ற பெண் யானையைப் படியாக மிதித்து ஏறி அமர்ந்து.

(வி - ள்.) கொதித்து - சினந்து. கொதித்து வேற்றுப் புலத்தை நெளித்து இழிய மிதித்து எனக் கூட்டிப் பொருள் கொள்க. பகைவர் நாட்டையழித்து அவருயிரைக் கூற்றுக் கருத்தும் அயிராபதம் என அதன் வீரம் கூறினர். அரசன் கோயிற்புறத்தே வந்து நின்று அங்கு நின்ற அயிராபதத்தின் எருத்தமேல் ஏறினன் எனக் கொள்க.

## 128—134 : திருத்தக்க கோற்றக்...கோடியோங்க

(சொ - ள்.) செல்வத்திற்குத் தகுந்த வெற்றியைக் காட்டும் வெண்குடை நிழலைச் செய்யவும், குளிர்ச்சியாக இரு புறத்தும் திரட்சியாகிய வெண்சாமரையானது இளங்காற்று வீசவும், ஒரு வலம்புரிச்சங்கு முதலில் ஊதப் பின் மற்றுள்ள பல சங்குகள் முழங்கவும், ஒலிக்கின்ற மூன்று முரசங்களும் முழங்கவும், இடத்தைவிட்டுப் பெயர்ந்து வாளாயுதங்கள் சுழலவும், அவற்றைக் கண்டு வீரமன்னர்கள் நெருங்கவும், கொல்லும் புலியாகிய வெற்றிக்கொடி யுயர்ந்து தோன்றவும்.

(வி - ள்.) திரு - அரசு ஆகிய செல்வம். அதற்குரிய குடை எனக் கொள்க. தகுதிக்கேற்ற உடை நடை உரை முதலியவை யமைந்திருப்பதுதான் சிறப்புத் தரும். ஆதலால் அரசுக்குத்தக்க குடை என்பது கருத்து. அரசர்க்கு இருபுறத்திலும் கவரி வீசினர் என்பது தோன்ற 'இரட்டைக்கவரி' என்றார். வலம்புரி என்பது வலப்புறமாக வளைந்திருக்கும் முறுக்கு உடைய உயர்ந்த சங்கு. மன்னர் புறப்பட்டவுடன் வலம்புரி ஊதிப் பின்னர் இடம்புரி முதலிய பல சங்கும் ஊதுவது மரபு எனவறிக. வாட்படை வீரர்கள் யாவரும் வாளையுயர்த்திப் பிடித்துச் சுழற்றி மன்னர்க்குப் புறத்தே சூழ்ந்து காவலாக வந்தனர் என்பது தோன்ற 'வாட்படை கொட்ப' என்றார். கோள்-கொள்ளுதல்; தீமையும் ஆம். பிற விலங்குகளையடித்து உணவாக்கிக்கொள்ளும் புலி எனக் கொள்க. தீமை விளைக்கும் புலி எனினும் பொருந்தும். நிழற்ற, காலசைப்ப, சிலம்ப, ஆர்ப்ப, கொட்ப, நடுங்க, ஓங்க என்ற செயவென்னெச்சங்களை இவ்வுலா நூலின்

இறுதியிலுள்ள "போந்தான் உத்துங்க துங்கன் உலா" என்பத ஞேடு கூட்டி முடிவு செய்க. இனி வரும் எச்சங்கட்கும் இதுவே முடிவு எனக் கொள்க.

## 134—150: சேட்புலத்துத்......மறையோன் கண்ணனும்

(சொ - ள்.) சேய்மைநாட்டில் அரசுபுரியும் பாண்டியரும், மாளுவமன்னரும், சிங்களவேந்தரும், கொங்கணநாட்டு மன்ன ரும் தோற்கும்படி மலைநாடு முற்காலத்தில் ஒருநாளில் அழியும் படி போர் புரிந்து பரணி நூலைப் புனையும்படி வெற்றியைத் தந்த கருணுகரத் தொண்டைமானும், பல மன்னர் முடிமேலும் பட்டு ஒலிக்கும் வீரக்கழல் கட்டிய பாதத்தையுடைய விக்கிரம சோழன் அவையுளிருக்கும் அறிவுடைய அமைச்சர்களிற் சிறந்த போர்க்குப் புனைகின்ற மணக்கும் தும்பை மாலையை உடையுடன் அணியும்படி கொடுக்கும் புகழ்பெற்ற முனையர் கோன் என்பவனும், கன்னடரையும், கங்கரையும் மராட்டி யரையும் கலிங்கரையும் கொங்கரையும் மற்றும் குடகு நாட்டர சரையும் தங்கள்மன்னன் (விக்கிரமன்) கோபித்தபோது வளைந்த புருவத்துடனே வளைகின்ற வில்லையும் உடைய சோழகோனும் மன்ன (விக்கிரமன்)னுக்குத் தோளும் கவசமும் சுற்றுத்தாரும் வெற்றி தரும் போருக்குரிய வாளாயுதமும், வலிமையும் அறிவுள்ள அமைச்சனும் ஒவ்வொரு நாளும் ஆகி (இருந்து செயலாற்றுகின்ற) மேகத்தைப் பிளந்து மேலுயர்ந்து நிற்கும் சோலைகளையும் மதில்களையும் கொண்ட கஞ்சைப்பதியில் வாழும் சிறந்த மறையோன் ஆகிய கண்ணன் என்பவனும்.

(வி - ம்.) கொங்கணம் - கொங்கானம். இவர்களை யெல் லாம் வென்ற படைத்தலைவன் கருணுகரத் தொண்டைமான். முதற்குலோத்துங்கன் பரணி நூல் புனைந்து கொள்வதற்கு இவன் கலிங்கப்போர் வென்றமை காரணமாம். "கடற் கலிங்க மெறிந்து சயத் தம்பநாட்டிக், கடகரியும் குவிதனமுங் கவர்ந்து தெய்வச் சுடர்ப்படைவா ளபயனடி யருளினேடுஞ் சூடினன் வண்டையர்கோன் ஹெண்டைமானே" (கலிங். 47) என்று பரணி கூறுவதாலும் அறியலாம். இவ்விக்கிரமசோழன் காலத்திலும் இவன் இருந்தானெனத் தெரிகிறது. இவன் பாண்டிமண்டலம், ஈழமண்டலம், சேரமண்டலம், மாளுவநாடு இவற்றையெல்லாம் விக்கிரமசோழனுட்சியிலும் வென்ரு னெனவும் அறியலாம். அனகன்-பாவமில்லாதவன். இது விக்கி ரமசோழனை யுணர்த்தியது. மன்னர் பலர் வந்து பாதத்தில் வணங்கும்போது அவர் முடிமேற் பட்டுக் கழல் ஒலிப்பதால் 'முடிமேல் ஆர்க்குங் கழற்கால்' என்ருர். மதிமந்திர பாலகர்

அமைச்சர். அமைச்சர்களிற் சிறந்தவன் முனையர்கோன் போலும். அரசன் போர்க்குப் புறப்படுவதற்குத் தும்பை மாலையும் போர்க்குரிய உடையும் கொடுக்கும் புகழ்பெற்றவன் என அவனைச் சிறப்பித்தனர். சோழகோன் என்பவன் படைத் தலைவன் எனத் தெரிகிறது. முடுக்கர் முதலானவரை முனியும் போது சோழகோனுடைய புருவமும் வில்லும் வளையும் என்றார். இதனால் அரசன் சினங்கொள்ளும்போது சினங்கொண்டு வில்லையும் வளைத்துப் போர்க்குப் புறப்படுவான் என அவன் வீரமும் ஊக்கமுங் காட்டினாராயிற்று. சேனபதி-மனிதர்க்குத் தலைவன் - இது இங்கு விக்கிரமசோழனை யுணர்த்தியது. கஞ்சை-கஞ்சா நகரம், கஞ்சாறு என முன் வழங்கியதுபோலும். மானக் கஞ்சாற நாயனர் பிறந்த ஊராகும் இது. அதில் ஒரு மறை யோன் கண்ணன் என்ற பெயர் பெற்றவன் இருந்தான் என்று தெரிகிறது. அம்மறையோன் ஒவ்வொரு நாளும் உற்ற சமயத் துதவிபுரிபவனாதலால் "தோளும் கவசமும் சுற்றமும்...வாளும் வலியும் மதியமைச்சு நாளுமாய்" என அவனைச் சிறப்பித்தனர் என அறிக. இன்னும் பின் வருவோரை எல்லாம் கூட்டி "முன்னும் இருமருங்கும் மொய்த்து ஈண்ட" என்பதனோடு முடிக்க.

### 150—180: வெஞ்சமத்துப் புல்லாத......மொய்த்தீண்ட

(சொ - ள்.) கொடிய போர்க்களத்தில் பகை மன்னருடம்பைப் பேய் எடுத்துக்கொள்ளவும் பொருந்தாத இயமனுயிரைக் கவரவும், தழுவும் ஆவலுடைய இளமையான மகளிர் (இறந்த மன்னர் மனைவியர்) தங்கள் தங்களுடைய காதணிகளைக் களையவும் வளைகின்ற கட்டமைந்த வில்லைக்கைப்பிடித்தவாணன் என்பவனும், பகைவருடைய வேங்கிநாட்டினும் விழிஞத்திலும் கொல்லத்தினும் கொங்குநாட்டினும் புறக்கிடாத இரட்டபாடியினும் ஒட்டரநாட்டினும் உள்ள வெவ்வேறு மன்னர் அவற்றை நாடாமல் அடியெடுத்துவைத்துப் பின்னிட்டோடும்படி வென்று வீரக்கொடி கட்டிய கலிங்கர்கோன் என்பவனும், காவல் கொண்ட மதிலையுடைய சிவந்த பொன்னாலாகிய மேடைகள் நெருங்கிய கோட்டை சுற்றிய செஞ்சியர்கோனாகிய தூணிற் கட்டப்படுஞ் செருக்குடைய யானையைக்கொண்ட காடவன் என்பவனும், வருந்தும்படி மக்கள் மனத்தைக் கலக்கிய வஞ்சகமாகிய வறுமையைப் பூமியிலிருந்து போகும்படி விலக்கிய வேணாட்டுவேந்தனும், முதன்மையான அறங்களைக்கடல் அடுத்த தென்குமரி முதற் கங்கைநதி வரையும் செய்து பரப்பியவன் ஆகிய அனந்தபாலனும், பெரிய போரில் பகைவரது வட மண்ணைக் கடக்கத்து மூன்று மதிலும் முட்டித் தாக்கி

இடித்த மால்யானையுடைய வத்தவனும், உடற்குறையெழுந் தாடும்படி கொன்று, கருநாடர் உறுதியான கோட்டையைக் குலைத்த சிறந்த சேதிநாட்டு வீரனும், பூமியிற் போர் செய்த பகைவர் ஆற்ருது சடை கட்டி (பரதேசியென்று கூறி) யோடும் படி வீரக்கழல் கட்டிய காரானைக் காவலன் என்பவனும், நெருங்கிப் போர்புரிந்த பெருமைபெற்ற அரசர்கள் தோற் ரேடும்படி வடக்கின்கணுள்ள கலிங்க நாட்டில் சேனைகளை யெல்லாம் பிளந்து கொன்ற அதிகன் என்பவனும், பாண்டி யர்களது கோட்டாறும் கொல்லமும் வென்று கைக்கொண்ட வாளாயுதந் தாங்கிய முன்னணிப் படையும் மதயானையும் கொடையும் உடைய நுளம்பன் என்ற வல்லவனும், உயர்ந்த மதிலுடைய கொங்கு நாட்டைக் கெடுத்துக் குடகுநாட்டு மலைகள் எல்லாவற்றையும் இடித்துப் போர்செய்யும் நீண்ட துதிக்கையுடைய யானையைக்கொண்ட திகத்தன் என்பவனும், அங்க நாட்டினையுடைய வல்லவனும், கோசலநாட்டவனும், மாளுவநாட்டவனும், மகதநாட்டவனும், சேரனும், கேரள நாட்டவனும், பாண்டியனும் பல்லவநாட்டுமன்னவனும் என்று கூறப்பட்ட பெருமையாற் பேர்பெற்ற வலிமையுடைய மன்னர்களும் மற்றைய மண்டலத்து மன்னர்களும் முன்புறத் திலும் வலப்புறம் இடப்புறம் ஆகிய இருபக்கங்களிலும் சூழ்ந்து நெருங்கி வர.

(வி - ம்,) உடம்பைப் பேய்வாங்க கூற்றம் உயிர்வாங்க மகளிர் தத்தங்குழைவாங்க வரிசிலை வாங்கு கைவாணன் என வாணனது வில்வீரத்தைச் சிறப்பித்தனர். வாணன் வில்வளைத் தால் உடனே பகைமன்னர் உடம்பு படுகளத்திற் பேய்க்குண வாகும். உயிரை யமன் கவர்வான். மனைவியர் காதணியைக் களைவர் என்பது கருத்து. குழை - காதணி. காதணி களைதல் கணவ ரிறந்தபின் மங்கையர் செய்யும் வினைபோலும். மங்கல நாண்களைதல் போலக் காதணியையும் களைவர் என்று தெரி கிறது. "மாற்றரசர் மணிமுடியும் திறலுந்தேசு மற்றவர்தங் காதலிமார் குழையுந் தந்தை, காற்றளையு முடன்கழல வந்து தோன்றி" பெரிய திருமொழி (4:4 1) என்பதும் இதனை வலியு றுத்தும். இவன் பெயர் வாணகோவரையன் எனவும் வழங்கும்.

கலிங்கர்கோன் என்பவன் நரலோக வீரன் எனவும் கூறப் படுவான். அரும்பைகிழான் பொன்னம்பலக் கூத்தன் என்ப தும் அவன் பெயராம். இவன் செய்த திருப்பணி, வீரச்செயல் சிதம்பரம் திருவதிகையிலுள்ள சாசனத் தமிழ்ப்பாடல்களால் விளங்கும். இவன் முதற்குலோத்துங்கனுக்குத் தலைமை யமைச்சனுகவும் இருந்து பட்டமும் புகழும் பெற்றவன் எனத்

தெரிகிறது. காடவன் என்பவன் செஞ்சியர்கோன் என்பதனுற் செஞ்சிநாட்டுச் சிற்றரசன் போலும். தொண்டைமண்டல சதகம் 63 ஆவது பாட்டால் புகழேந்திப்புலவர் செஞ்சியர் கோன் ஒருவன்மீது கலம்பகம் பாடியதாகத் தெரிகிறது. ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் சமகாலத்தவர் ஆதலின் அவராற் பாடப்பெற்ற செஞ்சியர்கோன் காடவனே இவன் எனக் கொள்வதற்கும் இடமுண்டு.

வேணுடு - திருவாங்கூர் நாட்டின் தென்பகுதியிலுள்ளது. வேணுடர் வேந்து என்பவனைப்பற்றி ஒன்றும் குறிப்புத் தெரிந்திலது.

அனந்தபாலன் என்பவன் சேனுதிபதி. பேராவூர்நாட்டு இளக்காரிக்கொடையான் சங்கர னம்பலங்கோயில் கொண்டான் என்ற பட்டப் பெயருடையவன் என்றும் திருவாவடுதுறையில் அறச்சாலைப் புறமாகச் சில நிலங்கள் இவனுல் விடப்பட்டுள்ளன என்றும் கல்வெட்டுக்களால் தெரிகிறது. பொருதார்-பகைவர். வடமண்ணை என்பது வடக்கேயுள்ள ஓர் ஊர். மான்யகேதம் எனக் கூறுவர். வத்தவன் - வத்தவநாட்டரசன். சேதித் திருநாடர் சேவகன் என்பது மலையமானை யுணர்த்தும். சேதிநாடு திருக்கோவலூரைத் தலைநகரமாகக்கொண்டது. அது மலைநாடு என்றும் பெயர் பெற்றது. திருக்கோவலூரையாண்ட மலையமானுக்கும் சோழமன்னர்கட்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதை "சேரமான் மாந்தரஞ் சேரலிரும் பொறையும், சோழன் இராசசூயம் வேட்ட பெரு நற்கிள்ளியும் பொருத வழிச் சோழர்க்குத் துப்பாகிய தேர்வண் மலையனை" (புறநா. 125) என வருந் தொடரால் அறியலாம். "தெவ்வர் சடைகட்ட" என்றது, போர்க்களத்தில் நில்லாமல் தப்பியோடுவோர் சடைமுடித்துக் காவியுடையுடுத்து நீறுபூசித் துறவிபோற் கோலங்கொண்டு போதல் இயல்பு என்பதைக் காட்டியது. "சடையினருடையினர் சாம்பற் பூச்சினர், பீடிகைப் பீலிப் பெருநோன்பாளர் பாடுபாணியர் பல்லியத்தோளினர், ஆடு கூத்த ராகியெங்கணும், ஏந்துவா ளொழியத் தாந்துறை போகிய, விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தர" (சிலப். 26-225) என வருவதும் காண்க. கலிங்கத்துப்பரணியில் அமணரெனவும் கங்கையாடப் போந்த மறையோர் எனவும், சாக்கியர் எனவும் பாணரெனவும் கோலங்கொண்டு பிழைத்தவ ரநேகர் என வருவதும் (போர்பா-63-66) காண்க.

தொண்டைமானும் (138) என்பது முதல் பல்லவனும் (178) என்பது வரையுள்ள அரசரும் அமைச்சரும் படைத்தலைவர்களும் முன்பக்கமும் இருபுறமும் சூழ்ந்து வந்தனர் என்று தெரிகிறது.

## 180—194. பன்மணிச் சோதி.......வந்தீண்டி

(சொ - ள்.) பலவகையான (ஒன்பது வகையான) மணிகள் கலந்திருக்கும் ஒளியால் ஒளிமிக்க வயிரத்தையும் அடக்கும் பேரொளியுடைய வளையலையணிந்த மங்கையர் (பரத்தையர்) தெருவிற் புகுந்தவுடன், முன்னொருநாள் பெரிய முனிவன் (நாரதன்) சேர்ந்தபோது காமன் தன்னை யறிவித்த(போது) அழகிய துவரைநகர் அந்தப்புரத்தைப்போலவும், உயர்ந்து பரந்த துகிலுடுத்த அல்குலுடைய மாதர்களே தம்மாணையாற் காக்கும் சிறந்த நாட்டினைப்போன்றும், பகையாகிய மன்மதன் (தன்வழி) வருவதற்கு நினையாத மற்றை முனிவர்களாகிய பகைவர்களைக் கொல்வதற்கு அவன் சேனை திரண்டெழுந்த தோற்றம் போன்றும், தாழைகளையுடைய கடற்கரையிலுள்ள மணற்குன்றின்மேலமர்ந்திருக்கும் அன்னப்புட் கூட்டம்போன்றும், மேகத்திற்றோன்றும் மின்னற்கூட்டம்போன்றும், நெருங்கிய கடலலைகள்தோறும் தோன்றிய திருமகள் கூட்டம்போன்றும், மலைகடோறுஞ் சேர்ந்த மயிற்கூட்டம்போன்றும், விரைவாக வந்து (அத்தெருவின்கண்ணுள்ள மங்கையர் யாவரும்) தங்கள் பிறைபோன்ற நெற்றி வெயர்க்க எவ்விடங்களிலும் தங்கண்களைப் பரப்பி நோக்கித் தெருவெங்கும் வந்து நெருங்கி நின்றனர்.

(வி - ம்.) விக்கிரமசோழன் உலாக்காணப் பரத்தையர் யாவரும் வந்து நெருங்கிநின்றனர் என்பது. மாதவத்தோன் என்பது கதைக்குறிப்பால் நாரதனை யுணர்த்தியது. வாணாசுரன் மகள் உஷையைக் கண்ணன் பேரன் அநிருத்தன் களவிற் புணர்ந்து வந்தான். வாணாசுரன் இதனை யறிந்து கண்டு பிடித்து விலங்கிட்டுச் சிறை வைத்தான். நாரதர் கண்ணனுக்கு இச்செய்தியைக் கூறினர். உடனே கண்ணன் சென்று போர் புரிந்து தன் பேரனை உஷையுடன் மீட்டு வந்தான். இச்செய்தியையும் நாரதர் முன்வந்து கூறினர். கூறியபோது துவாரகையில் அந்தப்புரத்திருந்த கண்ணன் மனைவியரும் பதினாறாயிரம் காதற்கிழத்தியரும் வந்து கண்ணனைக் காண்பதற்கு நின்றனர். அப்போது துவாரகையில் மங்கையரேயன்றி ஆடவர் ஒருவருமிலர். கண்ணனுடன் போர்க்குச் சென்றிருந்தனர். இவ்வரலாற்றைக் கருத்திற்கொண்டு மங்கையர் நிறைந்த வீதி ''பூந்துவரை யந்தப் புரம்போன்றும்'' இருந்தது என்றார். ''அனங்கன்'' என்ற பாடத்திற்கு, அனங்கன் - மன்மதன் கூறாகிய (அமிசமாகிய) பிரத்தியும்நன் என்று கொள்க. மாதர் தம் மாணையாற் புரக்குநாட்டில் ஆடவர் எவரும் அணுகார் என்ற கருத்தினால் 'புரக்குந் திருநாடு போன்றும்' என்றார்.

காமன் படை வீரர்கள் கன்னியர் ஆதலால் அவர்கள் திரண்ட காட்சி, முனிக்குறும்பைக் கொல்ல மதன் விடுத்த சேனைபோல விருந்தது என்றார். மேன்மாடங்களில் இருந்த மின்னார் மணற் குன்றின்மேல் அன்னப்பறவை இருந்ததுபோலத் தோன்றினர். அவர்கள் கூந்தல் மேகம்போலவும், உருவின் ஒளி மின்னல் போலவும் தோன்றுவதால் "கொண்டலின் மின்னுக் குழாம் போன்றும்" என்றார். மாடங்கள் மலைபோல உயர்ந்துதோன்று வதால், அங்குள்ள மங்கையர் மயில்போலத் தோன்றினர் என்றார். கண்ணும் மனமும் உலாக் காட்சியைக் காணத் துடித்தன. அதனால் விரைவினராய், நுதல் வெயர்ப்ப, சிந்தை பரப்பி, கண்பரப்பி எங்குஞ் செறிந்துநின்றனர் எனக்கொள்க,

## 195—198: உத்திசுடர.....கணங்கோண்டு

(சொ-ள்.) தெய்வவுத்தி என்னும் அணி ஒளிவிடவும், ஒளி பொருந்த உச்சிச் சூளாமணி வெயில் வீசவும் வரிசையாகிய வயிரமணிகள் வயங்கவும், முத்துமாலைகளுடன் இணைந்த அமுதக்குடம் போன்ற கொங்கைகளைத் தாங்கி வணங்கிய தலையுடையவராக வந்து கூட்டமாகக் கூடினர்.

(வி-ம்.) தெய்வவுத்தி - தலைக்கோலம். சீதேவி என்றும் இதனைக் கூறுவர். திருவும் பிறையும் சேர்த்தணியும் ஓர் அணி "தெய்வவுத்தியொடு வலம்புரி வயின்வைத்து" (திருமுருகாற். வரி. 23) என்பதும் அதன் உரையையுங் காண்க. மணிச்சூட்டு என்பது சூட்டுமணி. சூட்டுமணி - உச்சியில் அணியும் ஒரு மணி. இதனைச் சூடாமணி, சூளாமணி என்பர் வடமொழிப் புலவர். அமுதகலசம் - பூரற்குடம் எனவும் பொருள் தரும். இங்கு உவமையாகு பெயராய்க் கொங்கையை யுணர்த்தியது. மேனோக்காது கீழ் நோக்கியே வந்தனர் என்பார் 'வணங்கு தலையினராய் வந்து' என்றார்.

## 199—202 :—பார்க்கும்......உரகவரமகளிர் ஒப்பார்

(சொ-ள்.) (அம்மங்கையரிற் சிலர்) பார்க்குங் கொடிய பார்வையால் நஞ்சுத்துளி சிந்தவும், முருக்கம்பூவை யொத்த சிவந்த வாயிலுள்ள கூரிய பற்கள் வறிதே தீமையைச் செய்யவும் வெயர்வை யொழுகும்படி மலைபோன்ற உயர்ந்த மாடத்தின் கீழ் அடித்தளத்தில் தங்கியிருந்ததனால் அவர்கள் நாகருலகத்து மகளிர்போலத் தோன்றினர் என்க.

(வி-ம்.) பார்வை நஞ்சுபோலப் பார்ப்பவரை மயக்குவ தாலும் பற்களும் காமமயக்கமாகிய தீமையை விளைப்பதாலும்

நிழ்த்தலத்தில் நிற்பதாலும் சில மகளிர் நாககன்னியர்போன்றார் என்றார். நாகருலகம் - பாம்புறையும் உலகம். அது பாதலம் எனவும் கூறப்படும்.

## 202—206: விரல்கவரும்......மாதரேன மிடைவார்

(சொ - ள்.) கைவிரல்களாற் பற்றி வாசிக்கும் வீணையும், யாழும், குழலும் வாராற் கட்டப்பட்ட மத்தளமும் (ஆகிய இசைக்கருவிகள் ஒலிக்க) தாளத்தைப் பெயர்த்துக் காட்டும் படி தங்கள் பதத்தைப் பெயர்த்து நடித்து மிகவும் உயர்ந்த மேகங்கள் படியும் வெள்ளிய பளிங்குமாடத்திடை நிலையில் இருந்து விஞ்சையர் மாதர்போல் நெருங்கினர்.

(வி - ம்.) வீணை வேறு; யாழ் வேறு. யாழினையே வீணை யெனப் பொருள் கொள்ளும் இடமும் உண்டு. விரல் கவரும் என்ற அடையை வீணை, யாழ், குழல், முழவு என்ற நான்கிற்கும் கூட்டுக, குழல் வாயினாலூதுங் கருவி எனினும் விரலின்றி இசை விகற்பந் தோன்றாதாதலின் விரலாற் பற்றப்படுதல் அதற்கும் பொருந்தும். இடைநிலையில் ஆடலும் பாடலும் நிகழ்த்தியவர்களும் பவனிவரக் கண்டு அங்கு நின்றே பார்த்தனர். அங்ஙனம் பார்த்தவ ரனைவரும் விஞ்சையருலக மகளிர் போன்றனர் என்பது கருத்து.

## 206—212: அஞ்சனக் கண்........அரமகளிர் போல்வார்

(சொ - ள்.) மைபணிந்த கண்கள் சிறிதும் இமையாத தோற்றமும், மண்ணிற் பொருந்தாத மலர்போன்ற பாதமும், குளிர்ந்த வாடாத நல்ல அன்றலர்ந்த பூமாலையும் கொண்டு அழகு குறையாத நிலாமுற்றத்து மேனிலையிற் கூடி (நின்றவர் பலர்) வடிவத்தாலும் மேனியொளியாலும் அறிவாலும் மொழியாலும் ஒப்பற்ற அரம்பையரைப் போலத் தோன்றினர்.

(வி - ம்.) தேவருலகத்துவாழ் மகளிர். அரமகளிர், அரம்பையர் எனப்படுவார். அரமகளிர் கண் இமையாது, அடி மண்ணிற் படியாது, அவர்கள் பூமாலையும் வாடாது இம்மங்கையரும் பவனி கண்டு கண்ணிமையாது நின்றனர்; மண்ணிற் பாதம் படியாது மேனிலையினின்றனர். புதிதாக மாலை புனைந்திருந்தமையால் அது வாடாதிருந்தது. உருவினும் ஒளியினும் அறிவினும் மொழியினும் அவரைப்போலவே தோன்றினர் எனக் கொள்க.

## 212—224: அருகணைந்து......சிலர் செறிய

(சொ - ள்.) (இவ்வாறு கூடிய மாதரனைவரும்) அருகில் நெருங்கி நின்று 'விக்கிரமசோழனைப் பாருங்கள்; அளவில்லாத புகழ்பெற்ற சிறந்த அவனது தோள் பிரமன் படைத்த பூமியின் அளவுமல்ல; அதனினும் நீளம் அகலமுடையது என்று கூறுவர் சிலர். சிவந்த நிறமுடைய திருமகள் ஒருத்தியே தங்கும் சிறுமையையுடையதோ இவ்வுலகத்தையாளும் அரசன் மார்பு என்றுஞ் சிலர் கூறினர். இவனுக்குக் கையிரண்டேயுள்ளன ஆதலால் முருகன் அல்லன் இவன்; வேனற் காலத்தைத் தனக்குரியதாக்கிய மன்மதனே இவன்; பாருங்கள்! என்று கூறிச் சிலர் வருந்துவர். நான் எண்ணும் எண்ணத்திற்கு இவன் உடன்பட்டு என்பால் வருவானோ என்பார் சிலர். இவன் கண்களாற் கருணைக்கடல்போலத் தோன்றுகின்றான் என்பார் சிலர். பூமியைப் புரக்கும் ஆதி மனுகுலம் இவ்வரசனால் முழுவது மேன்மையடையும்; பாதிமட்டும் அடையும் என்பது அல்ல என்பார் சிலர்; மகரந்தம்போன்ற தேமற் படர்ந்த கொங்கைகளிற் பசலைநிறம் தோன்றியவர் சிலர்; தம் வளையல் கழன்று விழுவதைத் தடுப்பார் போலச் சிவந்த கைகளைக் குவித்து நிற்பவர் சிலர் ஆகி நெருங்க.

(வி - ம்.) காமமயக்கத்தாற் கன்னியர் பலர் தத்தங்கருத்திற் றோன்றியவாறு கூறிய கூற்றும் இவை. தோளைக்கண்டவர் பூமியின் நீளம் அகலம் அறிய இயலாமைபோல இதன் நீளமும் அகலமும் அறியவியலாது என்று மயங்கினர். எம்போன்ற மங்கையர் பலரும் அணைதற்குத்தக்க மார்புதான். இது திருமகள் ஆகிய ஒரு மகளையே யணையும் சிறுமையுடையதன்று என்ற கருத்தாற் "சிறுமைத்தோ" என்றார். பன்னிரண்டு கையிருந்தால் முருகவேள் இவனென்றே கூறலாம். இரண்டு கையிருப்பதால் மன்மதனே வந்து பிறந்தனன் எனக் கூறுவது தான் பொருத்தம் என்றார். நான் எண்ணும் எண் என்பது, என்மேற் காதலாகி யென்பால் வரவேண்டும்; இவனைக் கலந்து, இன்பம் துய்க்கவேண்டும் என்ற எண்ணம். இத்துணைப் பெருமையுடன் பவனி வரும் இவன் என் இழிவான எண்ணத்திற்கு எவ்வாறு இசைந்து வரவியலும்? வாரான் என மனத்துட் கொண்டார் சிலர். மனுகுல முழுவது மேம்படும் என்ற கருத்தாற் "பாதியே யன்று" என்றார். தாது என்பது உவமையாகு பெயராய்த் தேமலையுணர்த்தியது. வளையல் கழன்று கீழே வீழ்வது பிறர்க்குத் தோன்றாதிருப்ப மேலே தம் கையையுயர்த்திக் குவித்து வணங்கினர் என்பது கருத்து. மேம்படுகை-உயர்தல்.

இனிமேற் பேதை முதலிய ஏழ்பருவப் பெண்கள் செயல் கூறுவான்றொடங்கி முதலிற் பேதை செயல் கூறுகிறார் :

## 224—232. அங்கோருத்தி......பருவத்துப் பேதை

(சொ - ள்.) அவண் ஒருத்தி புவியில்வந்து பிறந்து வளர்கின்ற பிறைபோல்வாள்; பூங்கொத்து அரும்பாத செழித்த கொழுந்து போல்வாள்; பசிய இலைபோன்ற தோகை முளைக்காத மயில் போல்வாள்; (சிவந்த நெற்றிக் கண்ணால் எரிக்கப்பட்டுத் தோற்றவன் ஆகிய பின்மதன்) இனிமேல் வெற்றி மாலை சூடுவதற்காக வளர்க்கும் கரும்பு போல்வாள். குயிற் குஞ்சு போல்வாள். இளமையாய அன்னப்பெடை போல்வாள்; பிறந்து அணிமையுடைய பசுங்கிளி போல்வாள்; பவளக் கொடியிற் கிளைத்துத் தோன்றிய இளங்கொம்பு போல்வாள்; களவு தோன்றாத பெரிய கண்களையுடைய சிறு தேன்றுளி போல்வாள்; தாய்மாரைப் பிரிந்து தனியே செல்லும் இயல்பில்லாத பேதைப் பருவமுடையாள்.

(வி - ம்.) அங்கு - அவ்விடம். இஃது உலாவரும் தெருவில் ஓரிடம் என்பதை யுணர்த்தியது. ஒருத்தி பேதை எனக் கூட்டுக. பிறை நாளுக்கு நாள் வளர்வதுபோல இவளும் வளரும் பருவமுடையவள் என்பது தோன்ற "வளருமிளந்திங்கள்" என்றார். கொழுந்து, மஞ்ஞை, குயில், அன்னப்பெடை, பவளக் கொம்பு, சிறிய தேன் என்பவை பருவத்தையும் உருவத்தையும் காட்டும் உவமையாகு பெயர்கள் எனக்கொள்க. நெற்றிக்கண்ணெருப்பால் எரிந்து பின் ஒருவருக்குந் தோன்றா வுருவமுடையவனாய் இருக்கும் காமன், தன்னையெரித்த சிவனை வெல்வதற்குத் தான் முன் கொண்டுசென்ற கரும்புவில் வன்மையுடையதன்று என்று கருதிப் புதிதாக வளர்க்கும் கரும்பு இப்பேதை எனக் கற்பித்தார். இவள் வளர்ந்து மங்கைப் பருவமடைந்தால் சிவபெருமானையும் மயக்குவள். காமன் சிவனையும் வென்று வாகை புனைவன் என்பது கருத்து.

## 232—244. பரிவோடு பாவையும்......தான் மொழிந்தாள்

(சொ - ள்.) அப்பேதை அன்புடன் (தன் விளையாட்டுப் பொருள்கள் ஆகிய) பாவையும் மான்கன்றும், மயிலும், பசுங்கிளியும், நாகணவாயும் அன்னமும் தனக்குப் பின் வருவித்துச் சோழனுக்குரிய காவிரியினும் காவிரிப்பூம்பட்டினத்தினும் கிடைத்த முத்தாற் செய்யப்பட்ட அம்மனையும், அழகிய நாகபட்டினத்துள்ள நல்ல முத்தாற் செய்யப்பட்ட ஒளிபொருந்திய கழங்கும், சோழனுடைய கொற்கைத் துறையிற்பட்ட

குளிர்ந்த முத்துக்களாகிய அரிசியும், சிறு சோறு சமைப்பதைக் கற்பதற்கு வேண்டும் பொருள்களெல்லாம் கையில் எடுத்துக் கொண்டு அப்பரத்தையர் தெருவில் விளையாடும்போது, பூமியில் முதல் யுகம் வந்து காலூன்றுமாறு இக்கலியுகத்தில் ஊன்றிய (பசி பிணி முதலிய) துன்பங்களை நீக்கிய மன்னர் உயர்ந்தவருக்குள் உயர்ந்தோனாகிய விக்கிரமசோழன் (உலா வருவதைக் குறித்து) மூன்று முரசு மேகம்போல முழங்க (உடனே அதனை யறிந்து) தனக்குப் பெருந்துணையாயிருந்த தாயர் வரத் தானும் பின் வந்து தாயர் வணங்கத் தானும் வணங்கித் தாயர் கூறிய சொற்களையே தானும் மொழிந்து நின்றாள்.

(வி - ம்.) பாவை - மரத்தாலும் தோலாலும் செய்யப்படும் பதுமைகள். களிமண்ணாலும் பாவை செய்து விளையாடுவர். இதனை வண்டற்பாவை என்பர். "இது வென்பாவை பாவை" (ஐங். 375) என்பதும் காண்க.

அம்மனை, அம்மானை யெனவும், கழங்கு கழற்சிக்காய் எனவும் கூறப்படும். காவிரியாற்றில் வந்த முத்தம் அப்பட்டினத்தில் கிடைக்கும் என்ற கருத்தினால் 'பொன்னிப் புகார் முத்தம்' என்றார். பலவகை முத்தங்கள் விளையாடலுக்கு வைத்திருந்தனர் என்பது தோன்ற "நாகை நன்னித்திலம். கொற்கைக் குளிர் முத்தம்" என்றார். வல்சி - அரிசி. முத்து வெண்மையாதலால் அதனை யரிசியாகக் கொள்வது இயல்பு. மருதம், நெய்தல்வாழ் சிறுமியர்க்கு முத்துக்கள் எளிமையாகக் கிடைக்கும் என்பது கருத்து. நாட்டின் செல்வச் சிறப்பு இதனால் விளங்கும். மணலை வளைத்துச் சிற்றில் அமைத்துக் கற்களைப் பொறுக்கி அடுப்பாக வைத்துப் பவளக்கொடியை விறகாக அடுக்கி மாணிக்கத்தை நெருப்பாகச் சேர்த்துக் குடம்போன்ற சங்கினைப் பானையாகவும் தேனை உலைநீராகவும் தேன்நீர் வார்த்தரித்த முத்துக்களை அரிசியாகவும் கொண்டு சிறுசோறு சமைப்பர் எனக் குமரகுருபரர் (மீனாட். தாலப்.2) கூறியிருப்பது காண்க. கலி என்பது துன்பம் வறுமை இவற்றை யுணர்த்தும். கலியுகம் வந்து மக்கட்குத் துன்பத்தை விளைத்தது. அத்துன்பத்தை நீக்கி இன்பத்தை யாக்கினன் விக்கிரமசோழன். அதனால் இவன் அரசு புரியும் காலம் முதல் யுகம் வந்து காலூன்றிய காலமாகவும், கலியுகம் ஊன்றிய காலைப் பெயர்த்து நீங்கிய காலமாகவும் தோன்றியது எனக்கொள்க. தாய்மார் ஐவராதலின் "தாயர்" எனப் பன்மையாற் கூறினர். "உய்வகை பாராட்டுந்தா யூட்டுந் தாய் முலைத்தாய் கைத்தாய் செய்வகையறிந்து போற்றுஞ் செவிலித்தாயைவர்தாயர்" என்பது தெரிக. பேதையாதலால் தாய்மார் செயல்களையே தானுஞ் செய்தாள் என்க.

**224—258. சேயோன்......தோடையன் மேனாட்செய்ய**

(சொ - ள்.) அப்பேதையின் கண்ணு மனமும் முருகன் போன்ற அச்சோழனுடைய ஒப்பில்லாத சந்திரனும் சூரியனும் தோற்கும்படி ஒளிவீசும் முடியின்மே லொருமுறையாவது சேராமல், உருவத்தைக் கண்டு மகிழ்ந்து திருமகள் குவளை மலர் போன்ற கண்ணும் மனமும் உருகுவதற்குக் காரணமான சிறந்த பார்வையிலும் சேராமல், வாய் மலராது சிரிக்கின்ற சிறந்த பவளம்போன்ற வாயின் சிவப்பொளியூடு கலவாது பரவுகின்ற புன்சிரிப்பாகிய நிலவினும் சாராமல், காக்கும் உலகமெல்லாம் போற்றும் சிறந்த புருவத்திலும் செல்லாமல், பொட்டணிந்த முகமாகிய தாமரை மலரிலும் சாராமல், பல திசையையும் நெருக்கும் அழகிய தோளினும் செல்லாமல், பொருந்தச் சிறந்த மார்பிலும் சாராமல், குற்றமில்லாத கைத் தாமரையிலும் போகாமல், அடித் தாமரையையும் பொருந்தாமல், வடிவத்தில் விரிந்த பெரிய ஒளியினும் பொருந்தாமல் (அம்மன்னன் அணிந் திருந்த) செங்கழுநீர் என்ற ஒருவகைப் பூக்கள் முழுவதும் பொருந்திய மாலையின்மேல் முதலிற் செல்லத் தொடங்கின.

(வி - ம்.) சேயோன் - முருகன். இது சோழனையுணர்த் தியது. உவமையாகு பெயர். முடி - கிரீடம். ஒன்பதுவகை மணிகளும் பதித்து ஒளி விளங்கு முடியென்பது தோன்ற "மதியும் பகலவனும் தோற்கும் முடி" என்றார். இவன் பார்வை யால் திருமகள் கண்ணும் மனமும் நெகிழ்ந்து இவனைச் சேர்ந்து வாழ்கின்றனள் என்ற குறிப்புத் தோன்ற "நெகிழ்ந்த திரு நோக்கு" என்றார். திருப்பவளம் என்பது வாயையுணர்த்தியது. வாயின் சேயொளி யூடாடாமல் பரவும் சிரிப்பின் ஒளி எனவே புன்சிரிப்பு என்பது பொருள். கைம்மலர், அடிமலர் என்ற குறிப்பால் மலர், தாமரை மலரைக் குறித்தது. மனஞ்சென்ற பின்பு கண் செல்லும்; கண் சென்ற பின்னும் மனஞ்செல்வ துண்டு. இரண்டும் ஒருங்கே செல்வதுமுண்டு. ஆதலாற் "கண்ணு மனமும்" என இயைத்துக் கூறினர். நாட்செய்தல் என்பது ஒரு நல்லநாட்பார்த்து முதலில் ஒரு தொழில் தொடங்கு தலைக் குறிக்கும். இவள் கண்ணுமனமும் இந்நாளில் செங்கழு நீர் மாலையின் மேற்செல்லத் தொடங்கின என்பார் "நாட் செய்ய" என்றார். சோழனது முடி, விழி, புன்சிரிப்பு, புருவம், முகம், தோள், மார்பு, கை, பாதம், வடிவம் ஆகிய சிறந்தவை களை விரும்பாமல் அவன் புனைந்திருந்த செங்கழுநீர் மாலையையே விரும்பினள் என்பது கூறப்பட்டது. மூளா, நேரா என்பன போல வருபவற்றை இங்கு இறுதி குறைந்த எதிர்மறை வினை யெச்சமாக்கிப் பொருள் கொள்க. முற்றுவினையாகக்கொண்டு

முற்றெச்சமாய் நின்றனவெனவுங் கொள்ளலாம். ஊடாடா என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இது நிலவு என்ற பெயர் கொண்டது.

## 258—268. உண்ணெகிழா......யறவே யயர்த்தாள்

(சொ - ள்.) (அப்பேதை) மனமுருகி "தாய்மார்களே! இங்கு வாருங்கள்; (நம்மன்னன் சோழன் மார்பில் அணிந்திருக்கும்) இக்கழுநீர் மாலையை வாங்கி எனக்குத் தாருங்கள்" என்று கூற, அத்தாய்மாரும், "அம்மா! நம்மரசனைக் கண்டு பயப்படாதே, பெண்ணமுதமே! நாங்கள் 'அந்தச் சிறந்த மாலையைத் தருக' என்று கூறிச் செல்லுவோம். அம்மாலையை நாம் வாங்கிக் கொள்ளும்வகை எளிதன்று; அருமையானது" என்று மறுத்துக் கூறத் தேன் போன்ற இனிமையான மொழி பேசும் அப்பேதையும் தன் மார்பிற் கண்ணீர் வடியப் பிற மாதர்கொள்ளும் காதல் தானுங் கொள்வதற்கு அப்பொழுதே தொடங்கினுள். இளமைப் பருவமுடையவரைத் தன்னருகில் கூட இருக்கும்படி செய்து மணற்சோற்றை யூட்டி விளையாடும் ஆசை முழுவதையும் மறந்தாள்.

(வி - ம்.) நெகிழா - நெகிழ்ந்து. செய்யா என்ற வாய்பாட்டெச்சம். வம்மின்கள், தம்மின்கள், வா. தா. என்னும் பகுதிகள் குறைந்து வ. த. என நின்று மின் விகுதியேற்றன. கள் என்பது விகுதிமேல் விகுதியாய் வந்தது. அன்னைமார் - அன்னைமீர் என விளியாயிற்று. "மாலையை இப்பேதைக்குத் தா; என்று சொல்லிவிட்டுப் போவோம். மாலையை வாங்கித் தருவதென்பது இயலாத செயல்; அருமையான செயல். நீ இங்கு நிற்பதிற் பயனில்லை" என்பது தோன்ற, 'எளிசோ அரிது' என்ருர். பிறர் 'கொள்ளும் ஆர்வம் என்பது தன்னை யொழிந்த மற்றைப் பருவமங்கையர் கொள்ளும் ஆவல் (காமம்) என்பதை யுணர்த்தியது. கண்ணீர் ஒழுகியது காதல் கொள்ளத் தொடங்கினள். அதனுல் விளையாடலை மறந்தாள் என்பது கருத்து.

## 268—286. ஒருத்தி மழலை.......போற்பழிப்பாள்

(செ - ள்.) (பெதும்பைப் பருவப்பெண்) ஒருத்தி தன் மழலை மொழிகளைக் கிளிக்குக் கொடுத்து வேய்ங்குழலினிசையைக் கவர்ந்துகொண்டவள்; ஒளி கலந்த தனது முற்பருவத்திருந்த பற்களைத் தான் வளர்த்த முல்லை வாங்கிக்கொள்ளப்

பின்னர் முத்துக்களிடத்திருந்து பெற்றுக்கொண்ட பற்களை யுடையவள். அழியாத இளமையான பார்வையைத் தான் வளர்த்த மானுக்குக் கொடுத்துக் கண்களிரண்டிலும் நஞ்சு நோக்கங்கொண்டவள். ஒளிவிளங்கும் தன்னுடைய உடம்பின் சாயலைத் தான் வளர்த்த குருக்கத்திக்குக் கொடுத்து, வானி லிருந்த மின்னின் சாயலைத் தனக்கு வாங்கிக்கொண்டவள். (தான் விளையாடிய) அழகிய நல்ல பாவைகளைப் பசிய குரா மரங்கள் எடுத்து ஏந்திக்கொள்ளப் பச்சைக்கிளியையும் நாகண வாய்ப் புள்ளையும் தானேந்தியிருக்குந் தோற்றமுடையவள். பொருந்திய தனது இளமையான நடையை அன்னப்பறவை பெற்றுக்கொள்ளக் கொடுத்துவிட்டு இளமையான பெண் யானை நடையை வாங்கி நடப்பவள். ஒளிவிடும் தங்கத்தகட் டிலே பதித்த பவளக்கொடி சுற்றிய கட்டின்மேல் முத்துப் பொதிந்துள்ள உச்சிக்கொண்டை யுடையவள், எத்தன்மை யாலும் வீரமுள்ள முருகன் போன்றவரைக் கொன்று சிறந்த முனிவர்கண்மேன் மன்மதன் சினந்து கண் சிவப்படையும்படி வாய் சிவந்திருப்பவள். ஒன்றுக்கொன்று நேராக ஒத்திருக் கும் இரண்டு கோங்கரும்புபோன்ற கொங்கையுடையவள். தன் கழுத்தின் அழகைக் காட்டி அழகிய கமுகமரத்தின் அழகைக் கெடுப்பவள்.

(வி - ம்.) பெதும்பைப் பருவத்தின் சிறப்புக் குறிப்பாகக் கூறப்படுகின்றது. முதலிற் பேதைப் பருவத்தில் திருந்தாத மழலைச்சொற் பேசினுள். அது கிளியின் மொழிபோலத் திருத்த மில்லாமல் இருந்தது. இப்போது கேட்டவர்க் கின்பந்தரும் வேயங்குழலிசை போன்ற சொற்கள் பேசுகின்ருள் என்பது கருத்து. இவள் பற்கள் முன்னர் முல்லையரும்பு போலத் தெரிந்தன. இப்போது முத்துப்போல ஒளி வீசுகின்றன. முன் மான்போல மருண்ட நோக்கம் உடையவளாயிருந்தாள். இப்போது கண்டவர் மயங்கத்தக்க நஞ்சு போன்ற பார்வை யுடையவளாயினள். முன் குருக்கத்திக் கொடிபோல மேனி துவண்டது. இப்போது மின்னலைப்போல மேனி யொளி வீசுகிறது. முன் பாவைகள் வைத்து விளையாடினள். இப்போது பூவையுங் கிளியு முன் கையிலேந்தியிருக்கின்ருள். முன் அன்னம் போல நடை நடந்தாள்; இப்போது பிடிபோல் நடக்கின்ருள் எனப் பருவ வேறுபாடு கூறினர் எனக் காண்க. இவள் வாய் சிவந்தது காமன் இளைஞர்மேற் போர் புரிந்து கொள்வதற்கும் முனிவரைச் சினந்து கண் சிவப்புக்கொள்வதற்கும் ஏதுவா யிற்று என்பது கருத்து. பேதைப் பருவங்கடந்து பெதும்பைப் பருவமடைந்தவள் இவள் என்க.

## 286—296 பாங்கியரும்......மகிழ்ந்தேன் கனவிலேன

(சொ - ள்.) (அப் பெதும்பை) தாயரும் பாங்கியரும் எழுப்பிய பின் எழாமல் தானே துயில் நீங்கி யெழுந்து படுக்கையைவிட்டுப் பெயர்ந்துசென்று தளரும் இடையசைய நின்று (தாயை நோக்கி) "அன்னையே! தாழ்ந்த தளிர்களையுடையதாய் வளர்ந்த ஓர் இளம்பூங்கொடி நிறைந்த கொழுந்தும் அளவில்லாத பூங்கொத்துக்களும் அரும்பி அழகு பெற்று மேலெழுந்து தன் கிளைகள் தழைக்கும்படியேறி வணங்கத்தக்க பூந்தாதாகிய பொன் நெருங்கிய உச்சியுடைய செழித்த கோங்கமரத்தின் ஒருபுறமாகிய வலிய கொம்பினைப் பற்றி அங்குத் தங்கிய வண்டுகள் ஒலிக்கவும் மணம் வீசவும் இணைந்து இருப்பது கண்டு மகிழ்வுற்றேன் இன்றிரவு நான் கண்ட கனவில்" என்று கூறினள். அவ்வாறு கூற.

(வி - ம்.) தளர்ந்த இடையசையத் தாழ்ந்த காதணிகளையுடையதாக வளர்ந்த ஒரு கன்னியாகிய பூங்கொடி, நிறைந்த கொழுந்தும் பூங்கொத்துக்களும் புனைந்து அழகுபெற்றுச் சுற்றம் மகிழ வெளியேறிச் சென்று யாவரும் வணங்கத்தக்க மணம் பொருந்திய அழகு செறிந்த சோழனாகிய செழுமையான கோங்கமரத்தின் கூறாகிய வலிய கோளாகிய கொம்பைச் சார்ந்து சங்குமுழங்க மணவினை தோன்றத் தங்குவது கண்டேன் என மற்றும் ஒரு பொருள் கொள்க. குமரியை வல்லியாகவும் சோழனைக் கோங்கு மரமாகவும், அவன் தோளினை அம்மரக் கொம்பாகவும் உருவகஞ் செய்திருப்பதாகக் கொள்க. குழை - காதணி. கலிப்ப - மகிழ. குமரி - கன்னி. சென்னி - சோழன். பொன் அடரும் - அழகு செறிந்த; பொற்பணிகள் நிறைந்த. பணை - கொம்பு; இஃது உவமையாகுபெயராய்த் தோளையுணர்த்தியது என்றும் கொள்ளலாம். வண்டு - சங்கு. மணம் - மணவினை. நாற - தோன்ற. இப்பொருட்கு இச்சொற்களை இவ்வாறு பொருள் கொள்க. ஓர் இளங்கொடி கோங்கமரத்தின் கொம்பேறிப் படர்ந்து மணம் பொருந்தித் தங்கியது கண்டேன் என்றும் ஒரு பெண்ணாகிய கொடிசோழனாகிய கோங்கமரத்தின் தோளாகிய கொம்பை யணைந்து மணம்புரிந்து தங்கியிருப்பது கண்டேன் என்றும் இருபொருள்படுமாறு ஆசிரியர் இயைத்திருப்பது காண்க. இது செம்மொழிச் சிலேடையணி.

## 296—302. கொண்டு வருக......வழுத்தும் எல்லே

(சொ - ள்.) (கூறக்கேட்ட தாயர்) அவளைத் தழுவிக் கொண்டு வருக வருக இளங்கிளிபோல்வாய்! முத்தம் தருக

தருக என்று தாய்மார் மிகவும் விரும்பியவராய்ப் பின்னும் விரைந்து தழுவி 'தெய்வப்பெண்போல்வாய்! உன் மார்பின் முலைகள் தோன்றின; அவைகள் சோழன் பெருந்தோளிணையைத் தழுவிப் பின்பு விடாமலிருப்பதற்கேற்ற புதுமணம் அச் சோழனுடன் புரிந்து வாழ்வாய் பூங்கொடி போல்வாய்' என்று வாழ்த்தினர். அவ்வாறு வாழ்த்தும் அமையத்தில்,

(வி - ம்.) தாயர், மகள் குறிப்பாகச் சோழன் கனவில் வந்தணைந்தது கண்டனள் போலும் எனக்கருதி நீ கனவுகண்டபடியே சோழனை மணப்பாய் என்று வாழ்த்தினர் எனக்கொள்க. 'வருக, வருக! தருக, தருக! என்ற அடுக்குமொழி அவர்கள் உளமகிழ்ச்சியைக் காட்டின. அணங்கு - தெய்வப்பெண். இஃது ஆகுபெயர். ஆகத்து முலைவந்து அரும்பின எனக்கூட்டுக. நீயும் மணப்பருவத்தையடைந்தாய் என்பதை அரும்பின எனக் குறிப்பால் மொழிந்தனர் தாயர் எனக் கொள்க.

## 303—320. அரசன் அபயன் அகளங்கன்... தனிநின்றாள்

(சொ - ள்.) அரசன் அபயன் அகளங்கன் எனப் பேர் பெற்ற எம் சோழமன்னன் கழுத்தின் மணிக்கயிறு கட்டிய மதயானையின்மீது உலாவரக் கண்டு முரசு முழங்குந் தெருவிற் சுற்றத்தோடு கூடி ஓடி மேகமுழங்கிப் படிந்திருக்கும் உயர்ந்த மாளிகையின் முற்றத்திற் செழித்த கெண்டைமீன் போன்ற விழியுடைய திருமகள் போலவும், அழகு முழுவதும் நிறைந்த ஒரு மின்னல் போலவும் தோன்றிப் பகையரசருயிரை உண்ட புலிக்கொடியை நாட்டுவது குறித்து ஒப்பற்ற திருக்கரத்துச் செண்டால் இமயமலையைத் திரித்த வீரனை, நீங்காத வேகங் கெடுமாறு கலியின் வாய் வீழ்ந்து அலறிய பூமாதின் துன்பந் தவிர்த்து அவளையணைத்த தோளுடையவனை, தன் மார்பிற் கொங்கையை விட்டுப் பிரியாத வீற்றுத் தெய்வத்துடன் தாமரைப்பூவில்வாழ் மங்கையாகிய திருமகள் பிரியாமல்வாழும் மார்புடையவனை, அழகிய கையும் பூப்போன்ற பாதமும்விழியும் கோவைக் கனிபோன்ற வாயும் சிவந்த, வடிவங்கரிய திருமால் போன்றவனை இப்பெதும்பைப் பருவமுடையவளும் பார்த்துப் பார்த்தகண் வாங்காமலும், வணங்கக் குவித்த கரங்களை யெடாமலும் சென்ற மனத்தைத் திருப்பவறியாதவளாகி முன் அறியாத காமநோய் பற்றி மனத்தைக் கலக்க அதனால் கலங்கிக் கூந்தல் சோர்ந்து விழவும், பூமாலைகளும் நழுவவும் தனியாய் நின்றாள்.

(வி - ம்.) அபயன் - அஞ்சாதவன்; அச்சத்தை நீக்குவோன். அகளங்கன்-களங்கமில்லாதவன், களங்கத்தை நீக்கியவன். சோழ

மன்னர்களை இப்பெயரால் அழைப்பது மரபுபோலும். புரசை - யானைக் கழுத்தணி கயிறு. வரை-மலை. கயிறும் மதமும் உடைய மலை என்ற குறிப்பால் "புரசை மதவரை' என்பது யானையை யுணர்த்தியது. தமர் - சுற்றம்; இங்குப் பாங்கியரைக்குறித்தது. தாயரையும் குறிக்கும். முகின்மாடம்-முகிலைத் தாங்கிய மாடம். மாடத்தின் உயர்வு காட்டியது. மாடத்தின் உள்ளிருந்து தம ரோடும் ஓடிவந்து முன்றிலிற் பொன்னென, மின்னென வெளிப் பட்டுத் திருமாலைக்கண்டு கலங்கித் தனிநின்றாள் எனக்கூட்டுக. உண்டாற்றிய - உண்ட. பொறுத்தாற்றும் ஒறுத்தாற்றும் என் பனபோல ஒருசொன்னீர்மைத்தாய் நின்றது. ஆற்றிய எனப் பிரித்து, தாங்கிய எனவுங் கொள்ளலாம். உண்ண அதனால் தான் தாங்கிய என வருவிக்க. செண்டு - ஒருவகை யாயுதம். செண்டாயுதன் என்று சாத்தனுக்குப் பெயர் இருப்பதும் காண்க. கரிகாலன் என்பவன் விக்கிரமசோழனுடைய முன் னோர்களில் ஒருவன். அவன் செயலை இவனுக்கேற்றினர். செண்டாற் கிரிதிரித்தசெயல் பல இலக்கியங்களில் வந்துள்ளன. "கச்சிவளைக்கைச்சி காமக்கோட்டங் காவல், மெச்சியினிதிருக்கு மெய்ச்சாத்தன் - கைச்செண்டு, கம்பக்களிற்றுக் கரிகாற் பெரு வளத்தான், செம்பொற் கிரிதிரித்த செண்டு" (சிலப். 5, 95-98 உரை மேற்கோள்). "செண்டு கொண்டு கரிகால னொருகாலி னிமயச் சிமய மால்வரை திரித்தருளி" (கலிங். இராச. 1) "இலங்குவேற் கரிகாற் பெருவளத்தோன் வன்றிறற் புலியிமய வரைமேல் வைக்க ஏகுவோன்" (பெரிய. திருக்குறிப்புத். 85). பார் மகள் - பூமியாகிய பெண். கலிவாய் வீழ்ந்து தண்டா வேகங்கெட அரற்றும் சோகம் எனக் கொள்க. கலி - வறுமை, துன்பம் பசி, பிணி முதலிய துன்பம் நீக்கிப் புவி புரந்தவன் என்பது கருத்து. வீறு - வீற்றுத் தெய்வம். இது திருமகள் முலைமேல் உறைவது. "திருமுலைமேற் றேன்றும் வீற்றுத் தெய்வம்" (சிலப். 2, 69 உரை மேற்கோள்), "தம்மேல் உறை யும் வீற்றுத் தெய்வம் இருப்பிடமாக இருக்கப்பட்டுச் சுணங்கு பரந்தன" (சீவக சிந். 171. நச். உரை). "அகிற், சேறணிந்த முலைத் திருமங்கைதன் வீறணிந்தவன் மேனியின் மீண்டவே" (கம்ப. ஆற்றுப். 2). இவை இதனை வலியுறுத்தும். திருமால் மார்பில் திருமகள் இருப்பதுபோல மன்னர்கள் மார்பிலும் திரு மகள் இருப்பதாகக்கூறுவது இலக்கிய மரபு. "திருவுடை மன்ன ரைக் காணில் திருமாலைக்கண்டேனே யென்னும்" என்ற ஆழ் வார் பாடலும் அதனையுணர்த்தும். செந்தாமரைப் பூப்போல கண், கை, கால், உந்தி, வாய் ஆகிய உறுப்புக்கள் திருமாலுக்கு அமைந்திருக்கும் எனவும், கரிய திருமேனியுடையவர் எனவும் இலக்கியங்கள் கூறுவதால் 'கையும்......செய்ய கரிய திருமாலை'

என்றார். "கண்ணும், திருவடியும் கையும் கனிவாயும் செய்ய கரியவனை" (சிலப். 17' படர்க்கைப் பரவல் 2) என வருவதும் காண்க. காம மயக்கத்தால் மெய்ம்மறந்து கண் பார்த்தபடியே கை குவித்தபடியே தனியே நின்றனள் எனக் கொள்க.

## 320—324. நாமவேற்.......தொடை மடக்கிப் போயினான்

(சொ - ள்.) அச்சந்தரும் வேலாயுதத்தையுடைய சேர வரசனும் பாண்டிய மன்னனும் வணங்க வரும் சோழரிற் சிறந்த வீரனாகிய விக்கிரமசோழனும் அவ்வெல்லையைக் கடந்தான். மன்மதனும் தகுதியுடையவளாகித் தகாதவளாகிய அப்பெதும்பையைப் பூமியிலே கிடக்கும்படி செய்யக் கருதிப் பின் அவ்வாறு செய்யாமல் தன் அம்புகளை மடக்கி வைத்துச் சென்றான்.

(வி - ம்.) அவ்வெல்லை என்பது அப்பெதும்பை நின்ற விடத்தைக் குறித்தது. தக்குத் தாகாதாள் என்றது காமவுணர்ச்சி யுடையவளாதலால் மதன், போர் புரிவதற்குத் தகுதியுடைய வள் என்றும், பெதும்பைப் பருவமாதலால் தகுதியில்லாதவள் என்றும் கருதி முதலிற் கொன்றுவிடத் தொடங்கிப் பின் அது செய்யலாகாதென்று தொடை மடக்கினான் என்பது கருத்து.

## 324—335. மைக்குழல் மங்கைப்........காணாதிருப்பாள்

(சொ - ள்.) கரிய கூந்தலையுடைய மங்கைப் பருவப்பெண் ணொருத்தி, அவள் பூக்கள் நிறைந்த கங்கைக்கரை மணற் குன்றில் உள்ள செருக்குற்ற அன்னம்போன்றவள். எம் தலை வனை, மன்னவனை, மன்னர்கட்குத் தலைவனை, வரத்திலுதித்த வனை, பாண்டியனைச் சேரனைச் சோழனைப் பெதும்பைப் பரு வத்தில் முன்னொருநாட் கண்டு தன் மனத்திற்கொண்ட காதல் முடிவு போக்க அதனால் அச்சோழ மன்னனது செந்தாமரை மலர் போன்ற பாத முதலாகத் தங்க முடிபுனைந்த உச்சிவரையி லும் தன் மயக்கம் நீங்கும்படி மனத்தாற் குறித்தெழுதிப் பின் படத்தில் எழுதிப் பகல் முழுவதும் பார்த்து இரவு முழுவதும் கனவு அவனைக் கொண்டு வந்து தரக் கண்டு பின் விருப்பமுற்று வேறொரு பொருளையும் காணாமல் இருந்தாள்.

(வி - ம்.) கங்கையுள் இருக்கும் அன்னம் மிகவும் தூய்மை யுடையதாய் இருக்கும் என்பது கருதி, "கங்கைப் புளினக் களி யன்னம்" என்றார். "மேவிப்பூங் கங்கையுள் விளைந்தவன்னமே" (சீவக சிந். 1017) என்பது இக்கருத்தினை வலியுறுத்தும்.

பாண்டியனே என்றது பாண்டிநாட்டை வென்றடிப்படுத்தவன் என்பது கருதி. சேரனே என்றதும் அக்கருத்தினுல்தான். சோழனே என்றதுசோழ நாடாளும் மன்னன் என்பது கருதி. எங்கோனே......செம்பியனே என்ற பெயர்கள் யாவும் விக்கிரம சோழனையே யுணர்த்தி நின்றன. ஓவியம் வரைவோர், முதலில் உருவத்தை உள்ளத்தில் எழுதி வைத்தது போலக் குறித்துக் கொண்டால்தான் எழுதமுடியும் என்பது கருதி, "மனத் திழைத்துக் கையினுற் றீட்டுங்கிழி என்ருர். நனவிற் கண்ட பொருள் கனவிற்காணுதற்கு வருவது எளிது என்ற கருத் தினுல் 'இரவெல்லாம் கண்டு' என்ருர். உள்ளத்தில் முதலில் உருவெழுதிப் பின் கிழி எழுதி இரவு கனவிற் கண்டு அவ் வுருவத்தையே நாடிக் காதல் கொண்டு இருந்ததால் 'யாதொன் றுங் காணுதிருப்பாள்' என்ருர்.

335—340. பொருகளிற்றில்......பேரணி யணிந்தாள்

(சொ - ள்.) (அவ்வாறு இருந்தவள்) போர்புரியும் யானை யின்மேல் மகரந்தம் நிறைந்த பூமாலை புனைந்த வெற்றியில் உயர்ந்தவன் (விக்கிரம சோழன்) பவனி வருகின்ருன் என்று கேட்டு மணிகள் பதித்த பலவகை யணிகலன்களையுங் கொண்டு வருகவென்று அவற்றை வாங்கி யணிந்தாள். விரிந்த மலர்மாலை சூடினள்: பசிய பொன்னுடை யுடுத்தனள்; சந்தனக்குழம்பு பூசினுள்; தனக்குரிய பேரணியையும் அணிந்தாள்.

(வி - ம்.) அவன்மீது காதல் கொண்டு எப்போது காண் போம் என்ற ஏக்கத்தில் இருந்தவளாதலால் உடனே புறப்பட் டாள். தன்னைக் கண்டு அம்மன்னன் காதல்கொண்டாலன்றோ தான் கருதிய எண்ணம் கைகூடும் என்றெண்ணி அணிகலன் முழுவதும் அணிந்து தன்னை யழகுபடுத்தினுள் என்பார், "மணி யணிகள் யாவும்......தரித்தாள்" என்ருர்.

340—354. சேடியர் காட்டும்.......நுடங்கியும் வந்து

(சொ - ள்.) பாங்கிமார் காட்டிய கண்ணுடியுள் செந்தாம ரைப் பூவையும் தாழ்த்துகின்ற தனது முகத்தின் ஒளி விழி பரப் பிக் கண்டு விடை கேட்டுச் செல்லும் காமன்போல் வேல் விழிகள் தாமும் போர்க்குச் சென்று வருவது போலப் பக்கத்தி லும் கடையிலும் சென்று, மடங்கிச் செருக்குற்று நீண்ட குதம்பை தரித்து ஒளிவீசும் குழையணிந்த காதிற்கு எதிர் சென்றும், சுருண்ட அளக முதலாகக் கூறும் ஐந்து பகுதியாகப் பகுப்பதற்கு வளருங் கரிய கூந்தல் நெருங்கியும், ஒளிமிகுந்த

அருமையான முத்துக்கள் பதித்த அழகிய பொன்னுற் செய்த தோள்வளை யணிந்த புயங்கள் பருத்தனவாய் மூங்கிலைப்போல் திரண்டும், மாலைகளின் சுவடு பதிந்த சந்தனக் குழம்பால் எழுதப்பட்ட கோலங்கள் சூழ்ந்த கொங்கைகள், மலையும் குறைவுபடும்படி உயர்ந்தும், விளங்கும்படி முன்தோன்றிய துகிலொடு சேர்ந்த அல்குலாகிய பெருமையுடைய இடம் பரந்தும், இடை மெலிந்து அசைந்தும் வந்தனள். (பவனி காண).

(வி - ம்.) வதனத்து ஒளி - முகத்திலுள்ள கண். மலர்ந்து- திறந்து. கண் விழித்துப் பார்த்து என்க. கண்ணுடியுள் தன் வடிவழகு முழுவதையும் பார்த்துப் பின் புறப்பட்டாள் என்க.

ஏற்று, மலிந்து, பணைத்து. எழுச்சிகொண்டு. அகன்று, நுடங்கி என்ற செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களைச் செயவென்னெச்சமாக மாற்றி உம்மையைப்பின் கூட்டிப் பொருள் காண்க. விழி செவிகட்கு எதிர் செல்லவும், கூந்தல் நெருங்கவும், தோள் பருக்கவும், கொங்கைகள் எழுச்சிகொள்ளவும், அல்குல் அகலவும், இடை நுடங்கவும் வந்தாள் என்க. அவள் தோற்றம் மிகவும் அழகாக இருந்தது என்பது கருத்து.

## 355—362. மிடையும் புதுவனப்பு...நின்று அணங்கும்

(சொ - ள்.) நெருங்கிய தனது புதிய எழிலினையும் வானவரும் காதலுறும் தனது வடிவழகினையும் கண்டு பயந்து கொடையிற் சிறந்த சோழன் முற்காலத்தில் முந்திய பருவத்தில் அறிந்த அவ்வுருவை யான் காண்கிலேன், முன் சோழன் அறிந்த வடிவத்தையும் இழந்தேன்; என் முகத்தை நோக்கி என் வடிவத்தை யானே யறியாமலிருக்கின்றேன்; என்ன செய்வேன்! (சோழன் எப்படி என்னையறிவான்) சோழனை வணங்கி மேல் வருவதை யான் அறிவேன் என்று நினைத்து வந்து தன்னுேடு இணங்கிய மகளிரிடை நின்றனள் அவ்வணங்கும்.

(வி - ம்.) சோழன் தன்னை முன் கண்ட உருவமாயிருந்தால் அவனறிந்து கண்டு காதல் கொள்ளவுங் கூடும். என் வடிவம் புது வனப்புடையதாய்த் தோன்றுகின்றதே? ஒரு நாளும் அறியாத புதுவடிவத்தைப் பார்ப்பனே அவன்? பார்த்த வடிவமாயிருந்தாற் கூர்ந்து நோக்கிக் காதல் கொள்வான் என்று நினைத்தாள். அதனுல் 'தன்னுருக்கண்டஞ்சி' என்ருர். நானே என் வடிவத்தை யறிகிலேன் என்றுல், சோழன் எவ்வாறு அறிவான்? முன்னை வடிவிழந்தேனே என்செய்வேன் என்று வருந்தினுள். வருந்தி ஒருவாறு தேறித்துணிந்து வந்தாள்

என்பார், 'வருவ தறிவனென வந்து' என்றார். இணங்கு மகளிர் - நண்புடைய பெண்கள். இடை அணங்கும் நின்று எனக் கூட்டுக.

## 363—378. இறைவனகளங்கன்......கோல் யானை

(சொ - ள்.) முதல்வன், அகளங்கன், எங்கோன், குமரித் துறையுடையவன், அரசர் குலத்துள் உயர்ந்தவன் (விக்கிரம சோழன்) முறையாகக் காக்கின்ற திருப்பாற்கடலைக் கடைந்த கைத்தாமரை மலரும், கொப்பூழ் மலரில் உண்டாகிய உலகை முழுவதையும் அளந்த பொன்னடியும், திருமகள் நோக்கி யிட மாகக்கொள்ளும் மார்பும், பகையரசரெல்லாருங் கண்டு அச்சங் கொள்ளும் வலியமைந்த தோளாகிய மலையும், கண்ட மாதர் மனத்தை யுருகச் செய்யும் மகரக்குண்டலம் புனைந்த செவியும், மகளிர் மாந்தளிர் மேனியின் வனப்பை யுண்பதற்கு இமைத்துப் பார்க்கின்ற நோக்கமும், பவளத்தின் ஒளியைக் கவர்ந்த சிவந்த நிறமான அழகிய வாயும், எக்காலத்திலும் அழகு கெடாத சிறந்த முகமும், எவ்வடிவத்தினும் வேறுபடாத வண்ணமும், அவ்வடிவத்தில் வேறுபட்ட உறுப்புக்களின் வனப்பும்' உண்மை யுடன் விரும்பித் தெளிந்த பிறையாகிய பருவத்து மதியைக் கண்டு பெருமகிழ்ச்சியுற்ற அல்லிமலர், நிறைமதியைக் கண்டு மலர்ந்தது போல அச் சோழனைக் கண்டு கண்ணும் மனமும் களித்து நிற்கும்பொழுது கொல்லும் மதயானையானது அவனைத் தாங்கிக் கொண்டு அவ்வெல்லையை விட்டுப்பெயர்ந்து சென்றது.

(வி - ம்.) 'குமரித்துறையுடையவன்' என்றது, 'பாண்டிய நாட்டை வென்றவன்' என்னும் பொருள்பட நின்றது. திருமாலேயாவன் என்னும் கருத்தினால் ''கடல்கடைந்த கைம் மலரும்'' என்றார். உந்திமலர் பூக்கும் உலகு. உலகளந்த பொற் கழல், திருக்கொள்ளும் மார்பம் என்பவையும், அக்கருத்தினையே காட்டுகின்றன. திருமாலுந்தியில் ஒரு தாமரைமலர் பூக்க அம் மலரிற் பிரமன் தோன்றி உலகைப் படைத்தனன் என்பது புராண வரலாறு. இதனை யுட்கொண்டு, 'உந்திமலர் பூக்கு முலகம்' என்றார். உருக்கும் என்பதற்கு 'கண்டமாதர் மனத்தை' எனச் சொல் வருவித்துப் பொருள் கூறப்பட்டது. காதல் கொண்ட தலைவி கூற்றாதலின். தன் மனத்தையுருக்கியது மகரக் குழைக் காது எனக் கண்டு தன்னைப்போன்ற பிற மாதர் மனத் தையும் உருக்கும் இது என்று மனங்கொண்டு கூறியதாகக் கொள்க. புடைபெயரும் நோக்கு - இமையடித்துப் பார்க்கும் பார்வை. விழிசுழலப் பார்க்கும் பார்வையும் ஆம். அப்பார்வை யால் மாதர் காதல் கொண்டு தம் வடிவழகு கெடுவர் என்பது

தோன்ற, 'மாமைநுகரப் புடைபெயரும்' என்றார். மாமை - மாந்தளிர் போன்ற அழகு. நுகர உண்ண. இது கெடுக்க எனப் பொருள்பட்டது. துன்பக்காலத்தும் அவன் முகமலர்ந் திருக்கும் என்பதை விளக்க, 'எப்பொழுதும் செவ்வியழியாத் திருமுகம்' என்றார். "மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும், இத்தி ருத்துறந் தேகென்ற போதினும், சித்தி ரத்தி னலர்ந்த செந்தாமரை, ஒத்திருக்கு முகத்தினை யுன்னுவாள்" (கம்பரா. சுந். காட்சிப் 20) என்ற கவியை ஆய்க. எவ்வுருவம் என்பதற்கு எவ்வுருவினாலும் என ஆல் உருபை விரித்துக்கொள்க. திருமால் வடிவு நீலம். அந்நிறம் மற்றை வெண்மை முதலிய நிறங்களால் வேறுபடாது நிறங்களெல்லாம் அதனுள்ளடங்கும் என்பது கருத்து. "புணர்க்கவொரு கிரணம்போலு மெனையுங்கொண். டணைக்க மணிநிறமு மானேன்" (அழகர். தூது, 93) என்ற கண்ணியுங் குறிப்பும் காண்க. படிவத்தின் வேறுபட்ட வனப்பு என்றது உறுப்புக்களின் அழகை. கரங்கள், கால்கள், கண், முகம், உந்தி இவை சிவப்பு நிறம் உடையவை. படிவம் நீல நிறமுடையது ஆதலால், 'படிவத்தின் வேறுபட்ட வனப்பு என்றார். பிறைமதி கண்டு முன் மலர்ந்த ஆம்பல் நிறைமதி கண்டும் நெகிழ்ந்ததுபோல் என்ற உவமை இளமைப் பருவத் துச் சோழனை ஒருகால் கண்டவள் மன்னவனாகி மதயானைமேற் பவனிவரக் கண்டு மனம் உருகியதைக் காட்டவந்தது. வடி வழகினைக் கண்டு மெய்ம்மறந்து நின்றாள். கண்ணும் மனமுங் களிப்படைந்தன. சோழன் இவள் நின்ற நிலையைக் காணுதற்கு முன் யானை அவ்விடம் விட்டுப் பெயர்ந்தது என்பார், "களிப் பளவிற்......பெயர்ந்தது" என்றார்.

### 378—384. பண்டுநனவு........அயர்ந்தா ளவணிலையீது

(சொ - ள்.) முன்னர் நனவில் சித்திரந்தீட்டிப் பகலிற் கண்டு, நற்கனவு கொடுக்க, அவனுருவத்தை இரவிலும் கண்டு மனமகிழ்ச்சியுற்றவள் (அம்மங்கை இப்போது) ஓவியத்தும் எழுதவொண்ணாத அவனழகைக் குறித்து நோக்கிய விழிகள் உறங்காமையைக் கொடுக்கும்படி பெயர்ந்து சென்றாள். சுற்றத் தார் பெருந்தோள்களிற் சாய்ந்து வீழ்ந்து மெய்ம்மறந்தாள்; அவள் நிலைமை இது.

(வி - ம்.) நனவிற் படமெழுதிப் பார்த்துக் கனவில் உருவந் தோன்றப் பார்த்து அவ்வுருவங்களினும் சிறந்ததாக இப்போது நேரிற் கண்டாள் என்ற கருத்தை விளக்க, 'தீட்டமுடியாத செவ்வி' என்றார். நாட்டம் - கண். குறித்து நோக்கிய செய லுக்கே கண்கள் தமக்குப் பரிசு தாமே கொடுத்ததுபோல உறங்

காமையை நல்கின என்றார். காட்சிக்குப் பயன் உறங்காமையே என்பது. மீட்டு-திருப்பி. கண்ணும் மனமும் உயிரும் அவன் பாற்சென்று களித்திருந்தன. கண்ணிற்குத் தோன்றாமல் அவ னுருவம் சேய்மையில் நீங்கியபோது அவற்றைத் திருப்பி வந்தாள் என்க. வந்தபின் பகலும் இரவும் உண்ணாமலும் உறங்காமலும் இருந்தனள் எனக் கொள்க.

### 384—395. அப்பாற் சயம் தொலைய......ஒருமடந்தை

(சொ-ள்.) அதன்பின், தன் வெற்றி கெட (சிவன் நெற் றிக்கண்ணால்) எரிந்த காமன் கண்களில் உள்ள சிவப்பு நிறம் வந்து கூடியதுபோலச் சிவந்த வாயுடையவள்; முடிவில்லாத ஒலியையுடைய ஏழு கடலும் ஒன்றாகச் சேர்ந்து (மேலெழுந்து வந்து) உலகத்தைத் தனக்குள்ளடக்குகின்ற யுகமுடிவு காலம் போன்ற கடைக்கண்களை யுடையவள்; இவ்வுலகத்தைத் தொலைத்துத் தங்கள் தொழிலையுந் தொலைப்பதற்காகக் கொடிய காலன் தூதுவர் வந்து கூட்டமாக இருப்பதுபோன்ற குவிந்த கொங்கைகளையுடையவள்; மன்மதனைப்போலக் கண்ணாற் பார்க்க வடிவந் தோன்றாத இடையுடையவள்; தவமுனிவ ருடைய அளக்கமுடியாத அறிவைத் தொலைப்பவள்; விரைவில் இடை ஒடிந்து போகாது கெடாது என்று சொல்லும்படி அவ் விடை யொடியாலிருப்பது கருதி இருபுடையும் வளர்ந்த அல்குலுடையவள்; வெல்லப்பாகுபோன்ற இனிய சொல் லுடையவள் ஆகிய ஒருமடந்தைப் பருவப்பெண்.

(வி-ம்.) போரில் ஒருவன் தனக்குரிய தேர் பரி முதலிய வற்றை இழந்தாலும் கோபங்கொண்டு கண் சிவப்புறுவன். தன்னை வென்றவனைப் பின்னை வெல்லக் காலங்கருதியிருப்பன். இஃதியற்கை. சிவன் நெற்றிக்கண் நெருப்பால் எரித்துக் காம னுருவத்தையழித்தார். உருவமிழந்த காமனுக்குக் கடுங்கோபம் உண்டாவதியற்கை. அதற்கு ஏற்பக் கண்கள் மிகவும் சிவக்கும். அது மிகுந்த சிவப்பாய் என்பது தோன்ற, "வெந்து வடிவிழந்த காமன்" என்றார். அச் சிவப்பு நிறமுழுவதும் திரண்டு ஓர் வடிவாகிச் சிவனையழிப்பது கருதி இவள் வாயில் வந்தமர்ந் திருப்பதுபோலத் தோன்றியது இவள் வாய்ச்சிவப்பு என்பது கருத்து. யுகமுடிவு எவ்வாறு உலகினை யழிக்குமோ, அது போல இவள் கண்களும் ஆடவர் மனத்தை யழிக்கும் இயல் புடையன என்றும், இயமன் தூதுவர் கூடியிருப்பது போலக் குவிந்த முலைகள் இரண்டும் ஆடவருயிரைக் கொள்ளைகொள்ள அமர்ந்திருக்கின்றனவென்றும் கருத்துக் கொள்க. மாரனைப்

போல் வடிவில் மருங்குலாள் எனக் கூட்டுக. மாரனுருவம் பிறர் கண்ணுக்குத் தோன்றாததுபோல இடையும் தோன்றாது எனக் காண்க. முனிவரும் இவளைக் கண்டால் மயங்குவர் என்பது விளங்க, "மேலோர்.........முடிப்பாள்" என்றார். முடிப்பாள் - தொலைப்பாள், கெடுப்பாள் என்ற பொருளில் வந்தது. இவள் அல்குல் இருபக்கங்களிலும் அகன்று வளர்ந்து உயர்ந்து நின்று இடையைத் தாங்கி இனி இடை யொடியாது கெடாது என்று நினைக்கும்படி தோன்றியது எனக் கொள்க. போய் முடியலாகாமை - இறந்துபோகாமல் இருப்பது. முடியலாகாமைக்கு என நான்கனுருபு விரித்துப் பொருட்டுப் பொருள் கொள்க. போகாது ஒழியாது என்ற இரண்டு சொல்லும் போகும் என்ற பொருள் தந்ததாக்கொண்டு இடை போய் விடும் என்று கருதி, அது போகாதிருப்பதற்காக வளர்ந்த அல்குலாள் என்றும் கொள்ளலாம். இப்பொருட்கு "என்று" என்னுஞ் சொல்லை அல்குலின் வினையாக்குக.

## 395—402. தோழியைத் தோள்.......கைப்பற்றி ஒட்டி

(சொ - ள்.) தன் பாங்கியைத் தோள் வருந்தும்படி தழுவி நிலா முற்றத்திலேறி நின்று 'கொடிபோன்ற பெண்ணே! நாமிருவரும் பாங்கியரைப்போல இருதிறமாகப் பகுத்து உருண்டைப் பந்து கொண்டு கூத்தர் கண்டு மகிழும்படி விளையாடி நான் தோற்றால் என் மாலையை நீ வாங்கிக்கொள்வது; நீ தோற்றால் எம் மன்னன் பூமாலையை வாங்கித் தருவது நான் அதனைக் கொள்வது (இதுவே பந்தயம் ஆம்)' என்று மின்போன்ற அம் மடந்தை கூறிக் கூந்தலைச் சுருட்டிக் கட்டிக் கொங்கைகளையும் கச்சினால் இறுக்கிக் கட்டிப் பல பந்துகளைக் கையிலெடுத்துப் பந்தயம் பேசி.

(வி - ம்.) 'நீ பாங்கி; நான் தலைவி' என்ற வேறுபாடு இன்றி இருவரும் ஒப்பாய் நின்று உயர்வு தாழ்வின்றிப் பகுத்து விளையாட வேண்டும் என்பது தோன்ற, "சேடியரொப்ப" என்றார். ஒப்ப - சமமாக எனப் பொருள்கொண்டு நாம் இருவரும் சேடியரை இருபிரிவாகப் பிரித்து விளையாடவேண்டும் என்ற பொருள் தோன்ற அவ்வாறு கூறினர் என்றும் கொள்க. கோடியர்-கூத்தர். பந்தாடும்போது இடம் வலமாக வருவதும், குதிப்பதும், நிமிர்வதும், வளைவதும் ஆகிய செயல்கள் கூத்தாடுவோர் போலத் தோன்றலால் அவர்களும் கண்டு மகிழ்வர் என்பது கருத்து. வட்டித்து - சூள் மொழிந்து என்றும் பொருள் கொள்ளலாம்.

## 403—419. பொருதிறத்துச் சேடி.......போதில்

(சொ - ள்.) விளையாடும்போது பாங்கிமார் விளையாடல் நீங்கும்படி தானே நின்று இருபுறத்தும் வரும் பந்துகளையும் ஏந்தி மிகவும் முத்துப் பதித்த அப்பந்துகள் தன்னைச் சூழ்ந்து வீழ்ந்து எழுந்து நெருங்க, அது திருப்பாற்கடலில் நீர் எழுந்து சிதறும்படி விசிறிய அலையின் நுரை நடுவே முன் தோன்றிய திருமகள் போலத் தோன்ற, முற்பட்டுப் பந்தடிக்கின்ற செங் காந்தட் பூப்போன்ற உள்ளங்கைகள் சிவக்கும் என்று வாய் திறந்து கூறுவதுபோலக் கைவளை யொலிக்கவும் தங்களுக்கு இடமாகிய அசையுங் கொடிபோன்ற இடை நொந்து தளர்ந்தது என்று சொல்வதுபோல "அவ்விடையி லடங்கியுள்ள கலாபம் என்ற மேகலை அரற்றவும், மெல்லிய குரலாகத் தொடங்கி அழகிய சிற்றடி வருந்துவது குறித்துக் காலில் அணிந்திருந்த சிலம்பு ஒலிக்கவும், (பந்தைப் பற்றுவதற்காக) பரந்து மேலெழு கின்ற கையைக் குறித்தோ, இடையைக் குறித்தோ, தாமரை மலர்போன்ற வடிவைக் குறித்தோ கரியநிறம் வாய்ந்த கூந்த லின்மேலுள்ள வண்டுகளெழுந்தொலிக்கவும் அக்காரிகையான வள் பந்து விளையாடிப் பாங்கியை வென்று சூரியன் போன்ற சோழனது சந்தனம் பூசிய மார்பின் மாலையை வாங்கித் தா" என்று பசிய துகிலாகிய ஆடையைப் பற்றி இழுத்து அவளை வருத்தும் பொழுதில்.

(வி - ம்.) தன் பக்கமுள்ள பாங்கியர் வேலையின்றி நிற்க, எல்லாப் பந்துகளையும் தானே ஏற்று விளையாடினள் என்பார், "சேடியர் போர் தொலைய" என்றார். முத்தினாற்செய்த பந்து கள் அவளைச் சூழ்ந்து முன்னும் பின்னும் இருபுறத்திலும் நின்ற தோற்றம் திருப்பாற்கடலில் எழுந்த திரை நுரைகளின் நடுவே திருமகள் முன்றோன்றியிது போன்றிருந்தது என்றார். பந்தடிக் கும்போது கைவளையல் ஒலிப்பது கைசிவந்ததுகண்டு வருந்திப் புலம்புவதுபோலவும், மேகலை ஒலிப்பது இடை வருந்தியது குறித்துப் புலம்புவதுபோலவும், சிலம்பு ஒலிப்பது சிற்றடி வருந்துவது குறித்துப் புலம்புவதுபோலவும் இருந்தது என்று குறித்தார்.

கூந்தலின் மேல் வண்டுகள் எழுந்து ஒலிப்பதை அவள் கை வருந்துவது குறித்தோ, இடை வருந்துவது குறித்தோ, அடி வருந்துவது குறித்தோ என ஐயமாகக் குறித்தார். வண்டுகள் கூந்தல் மேலுள்ளவை யாதலால் அவைகட்குத் தனியாக ஓர் உறுப்பைக் குறித்து வருந்தும் வருத்தம் இல்லை என்பது கருத்து. வென்றவர் தோற்றவரைப் பந்தயந் தந்து போம்படி

பற்றியிழுத்து வழக்காடுவது இயற்கையாதலின் மாலை வாங்கித் தாவென்று ஆடைபற்றி இழுத்தனள் எனக் கூறினர். கந்துகம்- பந்து. தரளத்து அவை - முத்தாற் செய்யப்பட்ட அப்பந்து கள். வனசம் - தாமரை மலர். மகள் - பெண். இது திருமகளை யுணர்த்தியது. அங்காந்து - திறந்து. வளைகட்கு வாயில்லை யெனினும் வாயின் வினையை அவைகட்கு ஏற்றிக் கூறினர். சமாதியலங்காரம்; "இருள் பருகிப் பகல் கான்றெழுதரும் பல் கதிர்ப்பரிதி" என்பது போல. கலாபம் - பதினறு மணி கோத் திருக்கும் இடையணி. பருதி அகளங்கன் என்பது சூரியன் குலத்துதித்த அகளங்கன் எனவும் பொருள் தரும். துகில், தானை : ஒருபொருட் பன்மொழி. நல்லாடை என்க.

## 419—432: தனிக்குடைக்கீழ்......மறுகிற் றலைப்பட்டு

(சொ - ள்.) ஒப்பற்ற குடையின்கீழ் யானையின்மேல் வெண் சாமரம் வீசவும், சேனைகள் நெருங்கவும், பவளமும் முத்துக்களும் ஒளி வீசவும், சங்குகள் முழுவதும் முழங்கவும், புடை பெயரும் படி நீண்டு வலிய சுறு மீனினங்கள் முழுவதும் வந்து தெருவிற் பக்கத்துப் பிறழவும், சேர்ந்து ஒரு கட்பறை முழங்கவும், யானையின்மேல் ஏற்றிவிட்ட மைந்தர்கள் முன்னிறைந்து நிற்க வும், நடுக்கமுள்ளவராய்த் தாழ்ந்த தொழிலுடைய சுற்றத்தைக் காப்பதற்காகப் பரதர் பக்கத்து நெருங்கவும், சிறந்த நதியாகிய கன்னி, நருமதை, கங்கை, சிந்து, காவிரி இவைகளைத் தோய்ந்த காவிரிப்பூம்பட்டினம் விளங்கவும் நிலைபெற்ற அரசனாகிய தியாகசமுத்திரம் வந்தபோது தமது மன்னர் வீதியிற் கண்டு.

(வி - ம்.) தியாக சமுத்திரம் என்பது விக்கிரமசோழன் பட்டப்பெயர்களில் ஒன்று. சமுத்திரம் வந்ததற்கேற்பச் சமுத் திரத்தில் உள்ள பொருள்களும் உடன் வந்தனவாகத் தோன்றும் படி யமைத்துள்ளார். பவளம், நித்திலம், மகரவயமீன் குலம், பதலை, மதலையர், பரதர். கன்னி முதலிய நதிகள் கடற்குரிய பொருள்கள். நித்திலம்-முத்து. மகரவயமீன் குலம்-சுறு ஆகிய வலிய மீனினங்கள். பதலை - நெய்தனிலப் பறை. மதலையர் - கப்பலுடையவர். பரதர் - நெய்தல்நிலமாக்கள் எனக் காண்க. அரசன் உலா வரும்போது உடன் வந்தனவாகக் கூறும்போது பவளமும் முத்தும் என்பதை உலாக் காணவந்த மகளிர் சிவந்த வாயும் பற்களும் ஆகவும், மகரவயமீன் குலம் என்பதை அம் மீன் கூட்டம் போன்ற மகளிர் விழிக்கூட்டங்களாகவும், சங்கு களை அம்மகளிர் கண்டங்களாகவும், முழங்குவதை அவர்கள் குரலாகவும், மதலையரை, யானையின் மேலேறி வந்த மைந்தர்க ளாகவும், பரதரைப் பாரதநாட்டு மக்களாகவும் பொருள்

கொள்க, 422 முதல் 428 வரை இருபொருள் கொள்க. மகளிர் வாய் திறந்து பற்காட்டி நிற்கவும் கண்டத்திற் குரல் காட்டி வாழ்த்திப் புகழ் பேசவும், விழிகள் பிறழும்படி பார்க்கவும், பறை முழங்கவும், மைந்தர்கள் நிறைந்து நிற்கவும் பரதநாட்டினர் யாவரும் நெருங்கவும் மன்னன் உலா வந்தான் எனக் கொள்க. கோமறுகு: அரச வீதி; தமக்குரிய தலைமையான வீதி எனவும் கொள்ளலாம்.

## 432—444: தங்களில் ஒட்டிய......தோண்மேலயர்ந்தாள்

(சொ - ள்.) (தலைவியும் பாங்கியும் ஆகிய இருவரும்) தங்களுக்குள் ஏற்படுத்திய பந்தயத்தை அறியாமல் கைவளையலும் கட்டிய மேகலையும் சூழ்ன்று நழுவியதும் பாராமல் நெருங்கி வணங்கினாள், மறந்தாள், அசைந்தாள், சோர்ந்தாள், அழுதாள், தானே தனியாகி நின்றாள், குற்றமில்லாத உடுத்தப் பட்ட சேலையும் விளங்கிய பொன்னாற் செய்த மேகலையும் போக்கிய அல்குலே! (நீ) புனைந்து கொள்க' என்று கூறிக் கட்டிய மணி பதிக்கப்பட்ட கச்சினையும் தம்மேற் புனைந்த மேலாடையையும் கொங்கைகள் கொடுக்க, அதனைக் கண்கள் பார்த்து மாலையாக்குவதற்குப் பொருந்திய முத்துக் கோவையையும் பொன்னிறத்தனவாகிய பட்டினையும் புனைக என்று (அக் கொங்கைகட்குக்) கொடுத்தன. கொங்கைகளும் அவற்றைக் கொண்டன. அம்மடந்தையும் அடுத்த மாதர் தோண்மேற் சாய்ந்து தன்னை மறந்தாள்.

(வி - ம்.) அரசனைக் கண்டவுடனே பந்தயங் கூறியதை மறந்தாள்; காதல் கொண்டாள்; உடல் மெலிந்து வளையல் கழன்று விழுந்தன; உடையும் நழுவியது: அவற்றையும் காவாமல் அரசன் அருகே சென்றாள்; சென்று வணங்கினாள்; தன்னை மறந்தாள்; தனித்து நின்றாள் என்க. பின்பு கண்ணீரை வடித்தாள். கண் பசலை பூத்தது. கொங்கை பசலை பூத்தது என்பதைக் குறிப்பாலுணர்த்துகின்றார் அல்குல், தான் உடுத்திருந்த உடையும் மேகலையும் போக்கியது கண்டு, கொங்கைகள் தாமணிந்திருந்த கச்சும் மேலாடையுங் கொடுத்தன. அதனையறிந்த கடைக்கண்கள், முத்துக் கோவையையும் பொன்னிறத்த பொன்றாத பட்டினையும் அக்கொங்கைகட்குக் கொடுத்தன என்றார்.

அல்குலைச் சூழ்ந்திருந்த உடையும் மேகலையும் நழுவின. பின் கொங்கையிற் புனைந்த கச்சும் முத்து மாலையும் நழுவின. கண்ணீர்த் துளிகள் கொங்கைகளின்மேல் விழுந்து கொங்கை

களும் பசந்தன என இயற்கையாக நிகழ்ந்த செயல்களை மேற் கூறியவாறு கற்பித்தார். முத்துக்கோவை-முத்துக்களின் கோவை போல இடையறுது விழுகின்ற கண்ணீர்த் துளிகளையுணர்த்தி யது. பொன்னிறத்த பட்டு என்பது பொன்னின் நிறத்தவாய் பட்டுப்போலத் தோன்றும் பசலையை யுணர்த்தியது. காதல் கொண்டவர்க்குக் கண் பசலையடையும் என்பதை "முயக் கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற, பேதை பெருமழைக் கண்'' (குறள்) என்பதனுலும், கொங்கை பசலையடையும் என் பதை "முத்துலாய் நடந்த கோலமுலைமுதன் முற்ற மெல்லாம், வித்திய வேங்கை வீயும் விழுப்பொனும் விளங்க'' (சீவகசிந். 2539) என்பதனுலும் அறிக. கண்ணிலுள்ள கண்ணீர்த்துளி களும் பசலையும் கொங்கைகளின் மேலிருந்தன என்பது குறிப்பு. பொருளிழந்தவர்கட்கு அவ்வப்பொருளை அமையம் அறிந்துதவும் அன்புடையார் செயல் போல அச்செயல் இருந் தது என்பது தோன்ற இவ்வாறு கற்பித்தார். இஃது தற்குறிப் பேற்றம் என்னும் அணி. இங்ஙனம் நிகழ்ந்தவையறியாது மயங்கினுள் என்பதை இறுதியில் "அடுத்தவர் தோண்மே லயர்ந்தாள்'' என விளக்கினர்.

## 444—454: கடுத்துக் கவரும்......பிழைத்தொழிந்தாள்

(சொ - ள்.) சினந்து உயிரைக் கவரும் காமன், உடனே போர் புரிந்தது மல்லாமல், எங்கும் நின்ற வருத்தத்துடன் வரும் பழைமையான சொற்களைப்பேசும் தாயர் ஆகிய அவர்களும் கண்டு நடுங்கிச் சந்தனத்தைப் பனிநீரிற் குழைத்து அமைத்துப் பூசினுர்; நீர்த்துளிகளை மேனியிற் பொழிந்து எழுந்து நின்று விசிறியால் வீசினுர்; நிலவு வீசும் இடத்தில் கிடத்தினர்; இளமை யான தென்றற்காற்றினையும் கொண்டுவந்து சுட்டார்கள்; கல்லாரமலரை மாலையாகத் தொடுத்துப் புனைந்தார்கள். அவ் வளவில் விட்டனரோ? (மேலும் குளிர்ச்சிதரும் பொருள்களைத் தந்து சுட்டனர்) விட்டிலர். பள்ளமாகிய அவ்விடத்திற் செல் லும் பெருவெள்ளம் போல் அவள் உள்ளத்தையும் உயிரையும் உடன்கொண்டு அச்சோழன்பின் ஒலிபொருந்திய தெருவிலு டன் சென்ற போக்கினுல் அம்மடந்தையுயிர் பிழைத்திருந்தாள்

(வி - ம்.) காதலை விளக்கும் கடவுள் காமனுதலால் உடனே வந்து கைகலந்தான் என்முர். கைகலத்தல் - போர்புரிதல். காதலை மிகச்செய்தான் என்பது கருத்து. காமன் கைகலந்தது மன்றித் தாய்மாரும் சுட்டார். சும்மா விட்டாரில்லை. மேன் மேலும் துன்பத்தை விளைவித்தார் என்பது தோன்ற "விட்ட னரோ!'' என வியப்புத்தோன்ற ஓகாரம் தந்தனர். காமநோ

யுற்றவர்க்குக் குளிர்ச்சிதரும் பொருள்கள் யாவும் வெப்பத்தை விளைக்கும் என்பது இலக்கிய மரபு. அதனல் "தென்றலுங் கொணர்ந்து சுட்டார்" என்ருர். "முத்துங் களபமுந் தண்பனி நீரு முயங்குமலர்த், தொத்துங் குளிரியுந் தூய்மலர்ப் பாயலுஞ் சூழ்ந்துபுறங், கத்துங் கடலுங் கதலியு மாலியுங் கங்குலுமிப், பத்தும் பெரும்பகை யாய்விட்ட வாமொரு பைந்தொடிக்கே" என்ற இரத்தினச் சுருக்கத்துள்ள கவியையும் காண்க. பள்ளங் கண்டு படரும் புனல்போல இவள் உள்ளமும் உயிரும் வள்ளல் சோழன்பின் சென்றன. அதனல் இவள்பால் உயிரில்லை. உள்ளமும் இல்லை. எனவே இவள் இறந்திலள்; உள்ளமும் உயிரும் இல்லாத உடம்பாகக் கிடந்தாள் எனக் காண்க.

### 454—460 : மாதரில் வரீப்படும்...... அல்குல் அரிவை

(சொ - ள்.) திருப்பாற் கடலிற்ருேன்றிய தேவாமிர்தத்தைப் போன்றவள்; வண்டுகள் சூழ்ந்த மணங்கமழ்கின்ற கூந்தலுடையவள் (முன்கூறிய மடந்தையின்) வேருகிய ஒருத்தி அவள் வலிய தேர்த்தட்டுஞ் சிறியதெனத் தோன்றும்படி பெருகிய மரகதமணியாற் கட்டும் கனமான அழகிய மேகலையானது பட்டு நல்லாடையின் ஒளிமறையும்படி ஒளிபரப்ப இடம் பரந்து அகன்ற அல்குலையுடைய அரிவைப் பருவமுடையவள்.

(வி - ம்.) அமுதம் கண்ணுக்கினிமையும் உண்ணுதற்கினிமையும் உடையது. எவராலும் விரும்பப்படுவது. ஒப்பாள் எனவே கண்ணுக்கினிமை யுடையவள்; போக நுகர்தற்கு இனிமையுடையவள்; எவராலும் விருப்பப்படுவாள் என்ருர் ஆயிற்று. மரகதமணியாற் செய்த கலாபம் அணிந்த அல்குல். அக்கலாபம் பட்டொளி துகிலொளி மறைய ஒளி பரப்புவது; தேர்த்தட்டிலும் பெருகியகன்றது எனக்கொள்க. கைபோய் - இடம் பரந்து. தேர்த்தட்டு அல்குலுக்கு உவமை.

### 460—468 : இகலி யொருக்கி......படைத்த தனத் தன்னம்

(சொ - ள்.) பகைத்துத் தேய்த்து இடையினைப் போக்கி ஒன்றினை யொன்று வந்து நெருக்கிப் பேரழகு நிறைந்து செருக்கி (மார்பு முழுவதும்) இடமாகக்கொண்டு ஒரு மின்னுக் கொடி இரண்டு குடங்கொண்டு நின்றது என்று (கண்டோர்) கூறும்படி அகன்று ஒப்பாகி நிரம்பி இளைஞர்மனத்தைக் கட்டிப் பெரிய தன் உச்சியிலிருத்திப் பருத்து விளங்கும் ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த உலகத்திற் பெருமையும் உவமையும் தனக்கில்லையாகத் தோன்றிய கொங்கையுடைய அன்னம் போல்வாள்.

(வி - ம்.) இடையோடு பகைத்து நாளுக்கு நாளாக அதனை நலியச்செய்து பின் இல்லாமற் செய்த கொங்கை என்க. இவ்வாறு கூறுவது இலக்கிய மரபு. "மாயை யிடையை யுளரா முலையான் மற்றை மாதர்போ லென்று, தூயவறிஞ ரனுமிதித்துச் சொல்லு மருங்கிற் றேகை" (பிரபுலிங்க.) எனப் பிறருங் கூறுதல் அறிக. மாமை - பேரழகு. ஒரு மின்னுக்கொடி இரண்டு குடங்கொண்டு நின்றது. இஃது இல் பொருளுவமை. தனத்தைக் கண்டவர் இவ்வாறு உவமை கூறும்படி இருந்தது. இளைஞர் கண்டால் அவர்கள் நெஞ்சம் கொங்கையின் முகட்டிலேயே யிருக்கும். அதனையே நினைக்கும் அத்தகைய அழகுடையது கொங்கை என்பது தோன்ற "இளையோர்கள்...முகட்டிற் பெய்து" என்றார். இதற்கு இணையும் இல்லை, உயர்வும் இல்லை; தனக்குத் தானே யுவமையாகும் என்று அருமையாகத் தோன்றும் பார்ப்பவர்க்கு. அத்தகைய வனப்பு வாய்ந்த தனம் என்று கொள்க.

## 468—474 : கருமைஎறித்து......வாய்த்த விழியாள்

(சொ - ள்.) கருமையொளியை வீசிக் கடை நோக்கம் சென்று இருபக்கங்களிலும் தான் செல்லும் எல்லை இதுவெனக் குறித்துக் காதணி வரையும் தனக்குரிய இடமாகக் கொண்டு, மடங்கிச் செருக்கிச் செவ்வரி பரந்து இளைஞர் மனங்கள் நடுங்கி விழும்படி உயிர்நிலையில் (அம்புபோலத்) தைத்து, இதழ் செறிந்த கழுநீர் மலரின் அழகையும் தோற்கும்படி செய்து மான்விழியின் இயல்பைப் பொருந்திய கண்களையுடையவள்.

(வி - ம்.) எறித்து - ஒளி வீசி. கண்கள் அடிக்கடி பிறழ்ந்து மடங்கி மடங்கி இருபுறமும் செல்வதும் வருவதுமாயிருக்கும் இயல்பை எல்லை குறித்துத் தனக்கு இடங்கண்டதாகக் குறித்தார். இளைஞர் கண்டாற் காதல்கொண்டு மயங்கி வீழும்படி செய்யும் இவ்விழிகள் என்பதை 'நிறந்தைத்து' என்று குறிப்பாகக் கூறினர். நிறம்-உயிர்நிலை. மார்பு என்றும் கொள்ளலாம். மான் மருண்டு மருண்டு முன்பின் பக்கங்களிற் பார்ப்பது இயல்பு. பெண்கள் கண்களும் அவ்வாறு நோக்குவதால் "மானின் விழிநீர்மை வாய்த்த விழியாள்" என்றார்.

## 474—480 : முழுதும் நெறிந்து......பேணுங் குழலாள்

(சொ - ள்.) முழுவதும் நெளிவுடையதாகிக் கடைப்பக்கஞ் சுருண்டு, வழுவழுப்பாகிக் கறுத்து நீண்டு நெருங்கி மிகுந்த மணங்களை நிறைவித்து, நல்ல பூங்கொத்துக்கள் செருகப்பெற்று,

அதனல் கொழுந்து தோன்றும் பூங்கொடியாகவும், மாந்தளிர்கள் கிடந்து அதனல் மேல் அசையும் பூஞ்சோலையாகவும், திருவென்னும் தலைக்கோலஞ் சேர்ந்து அதனல் திருமகள் இருக்கும் தாமரையாகவும், தோன்றிப் போய்ச் சேர்ந்த வண்டினங்களைப் பெரிய விருந்தாக (மதுவளித்து)ப் பேணுகின்ற கூந்தலையுடையவள்.

(வி - ம்.) நெய்த்து - எண்ணெயை யுடையதாகி எனவும் பொருள் கூறலாம். பூங்கொடிகளிற் பூங்கொத்து நிறைந்திருக்கும்: அதுபோலக் கூந்தலிலும் பூங்கொத்துக்கள் நிறைந்திருப்பதால் அதனை நோக்கியவர்க்குப் பூங்கொடி போலத் தோன்றும் என்பது கருதி, "கொழுந்தெழுந்த வல்லியாய்" என்ருர். மாந்தளிர் கூந்தலிற் புனையும் வழக்கமும் உண்டு. கூந்தலின் மாந்தளிர் பல சோர்ந்து கிடப்பன கண்டவர்க்கு அது சோலையாகத் தோன்றும் என்ற கருத்தாற் "சோலையாய்" என்ருர். 'திருவும் பிறையும்' கூந்தலின் முன்புறம் அணிவர். அது தெய்வவுத்தி, தலைக்கோலம் என்று கூறப்படும். அவ்வணியைத் 'திரு' என்ருர். அது கூந்தலில் இருப்பதால் அக்கூந்தல், திருமகளுறையும் தாமரைமலர் ஆகத் தோன்றும் என்ற கருத்தினல், 'தாமரையாய்' என்ருர். பூங்கொடி, பூஞ்சோலை, தாமரையாகிய மூன்றும் வண்டுகட்கு மதுவளிக்கும் இயற்கையுடையனவாதலின் "வண்டின் பெருவிருந்து பேணும் குழலாள்" என்ருர். வண்டின் பெருவிருந்து என்பதை வண்டாகிய பெருவிருந்தினைப் பேணும் எனவும் கொள்ளலாம். இப்பொருட்கு வண்டு + இன் அல்வழிச்சாரியை எனக் கொள்க. அப்பொருட்கு இன் உருபு மயக்கம் எனக் கொள்க. அரிவைப் பருவமுடையவள் ஒருத்தி. அவள் இத்தனைய அல்குலுடையாள், தனமுடையவள், விழியுடையவள், கூந்தலுடையவள் எனக் கூட்டுக.

## 480—492: பொருகளிற்றின்...நிறைபோய் இருப்புழி

(சொ - ள்.) போர் செய்யும் யானைமேல் முன்னெருநாள் மனுகுலத்தவனுன விக்கிரமசோழன் தெருவிற் பவனி வந்து (காதல்) தந்த பெரிய தனிமையில், அச்செந்தமிழ் நாட்டரசனே எம்மைக் கவர்ந்துகொண்டனன். அவன் இங்கு வந்து தானே தந்தால் தருக; (இன்றெனில் ஒன்றும் வேண்டா) என்று கூறுவனபோல, மலர்போன்ற இரு கைகளும் இரு தோள்களும் இடுகின்ற வளைகளைத் தாங்காமலும், இரு கண்களும் துயில்வித்தாலும் தூங்காமலும், நீலநிறக்கூந்தல் மலர்களை மறந்தும் புனையாமலும், விருப்பத்தைத்தரும் முலைகள் அழகிய கச்சுப் புனையாமலும், அல்குல் ஒளிபொருந்திய பெருமையான

பொன்னுடையை விரும்பாமலும், மனம் கூறும் தெளிவுரையைக் கொள்ளாமலும், (இருப்ப) கரும்பு வில்லை எடுக்கும் காமனுடைய கையம்பினால் விழுந்த காமத்தீயால் மனம் உருகி நிறை கெட்டு இருக்கும் அமையத்தில்.

(வி - ம்.) தனிமைக்கண் இருப்புழி எனக் கூட்டுக. இவ் வரிவை முன்னொருநாள் சோழன் பவனி கண்டு காதல்கொண்டு காமநோயால் வருந்தியிருந்தனள் என அறிக. "வந்து தந்த பெரிய தனிமை" என்ற குறிப்பினால் அவன் பவனிவந்த நாள் முதல் இவள் காதலால் ஒருவருடனும் உரையாடாது தனிமையாகவே இருந்தனள் என்று கொள்க. இவள் தனிமைபோன்ற தனிமை வேறில்லையெனத் தோன்றப் 'பெரிய தனிமை' என்றார். கை, தோள், கண், கூந்தல், முலை, அல்குல், மனம் இவைகள் யாவும் தத்தமக்குரிய வணிகளையும் செயல்களையும் ஏற்றுக் கொள்ளாமலிருக்கின்றன. அவை அவ்வாறிருக்கும் இயல்பு எங்களைச் சோழமன்னன் முதலிற் கவர்ந்து கொண்டான். அவன் வந்து எங்கட்குக் கொடுத்தால் நாங்கள் ஏற்றுக்கொள் வோம்; வேறு எவர்வந்து கொடுப்பினும் ஏற்றுக்கொள்ளோம் என்று காட்டுவனபோல இருந்தன என்பது கருத்து. வெம்முலைகள், பொலங்கச்சுமீது படத்தரியா என்றும், அல்குல் சோதியடுக்கும் கனபொற்றுகில் பேணாது என்றும், நெஞ்சு கொடுக்கும் தெருள் கொள்ளாது என்றும் கூட்டுக. ஏந்தா, துயிலா, புனையா, தரியா இவற்றின் ஈறுகெட்டதெனக் கொள்க. கொள்ளாது என்ற வினையெச்சத்தின் பின் "இருப்ப" என்னுஞ் சொல் வருவித்து முடிக்க. எம்மைக் கவர்ந்துகொண்டனன் என மாற்றி எம்பாலிருந்து (எமக்குரியவைகளைக்) கவர்ந்துகொண்டனன் எனப் பொருள் கொள்க. எம்மை : வேற்றுமை மயக்கம்; ஏழனுருபுப்பொருளில் ஐ வந்தது. தெருள் - தெளிவு. அனங்கன் கையம்பால் வீழும் நெருப்பு எனவே காமத்தீ என்பது குறிப்பாய்த் தோன்றியது.

## 493—510 : பாடிய பூவைக்கும்......நின்றயர்கால்

(சொ - ள்.) பேசுகின்ற நாகணவாய்ப் பறவை மீதும் அன்பில்லாது, ஆடுகின்ற மயில் மீதும் அன்பில்லாமற் கூடிய கிளிக்கும், தம்மிடத்தில் வளர்கின்ற இளமையான அன்னப் பறவைக் குஞ்சுக்கும் (ஒருதவியும்) செய்யாதவளாய் அவைகளை விட்டு வேறிடம் பெயர்ந்து சென்று மிகுதியாக மலர் பூக்கும் குரவமரப் பந்தர்த் தோட்டத்தை யடுத்துள்ள இளமரச்சோலையிற் சென்று நின்று வலிய யானையையுடைய சோழனது மேன்மையான காவிரியில் நாளும்வந்து நீராடுகின்றீர்; அன்னங்

களே! நீங்கள் என்று கூறி வருந்தியும், சோழனது காவிரிப்பூம் பட்டினம் அடையப்பெற்றீர்கள் நாரைகளே! என்று மன முருகிக் கூறியும், கறுப்பாகிய நீலநிறக்குயிலினங்களே! நீங்கள் சோழநாட்டுச் சோலையிற் பயில்வீர்போலும் எனக் கூறிவருந்தி யும், தோகையையுடைய பெருமையான இயல்புடைய மயில் களே! கொல்லிமலையிலும் நேரிமலையிலும் சேர்ந்து வாழப் பெறுவீர்கள் என்று கூறி மனமுருகியும், சோழனது குளிர்ந்த பூங்கொத்துக்கள் சேர்ந்த மாலையிற் பலகாலமும் தடவி மது வுண்ட வண்டுகளே! வாழ்வீர்கள் என்று மயங்கிக்கூறியும், தொண்டியை யாண்ட சோழனது மணம்பொருந்திய பொதிய மலையில் உள்ள வெள்ளிய அருவியிற்றோய்ந்தல்லவோ தென் றலே! நீ வருவதென்று கூறி மனந்தடுமாறியும் நின்று சோர்ந் திருக்கும் வேளையில்.

(வி - ம்.) காதல் மிகுதியால் மனையை விடுத்து மலர்ச் சோலை சென்றாள் எனக் காண்க. தான் வளர்த்த பூவை, மயில், கிளி, அன்னப்பறவை மேலும் அன்பில்லாமல் அவைகட்கு வேண்டும் உணவு கொடாமலும் சென்றாள் என்பார் 'பரிவின்றி அன்பின்றி ஆற்றாள் பெயர்ந்து போய்' என்றார். அன்னங்காள்! குருகுகாள்! குயிலினங்காள்! மஞ்ஞை! வண்டுகாள்! தென்றல்! நீங்கள் அச்சோழமன்னனுக்கு உரிமைப்பொருள்களை யடைந்து வாழ்கின்றீர்; நீவிர் முற்பிறப்பிற் பெருந்தவம் புரிந்தவர்களே யாவீர்; யானோ, அவனை யணையாது வருந்துகின்றேன்; எனக்கு நீங்கள் உதவிசெய்யமாட்டீரோ என்று குறிப்புத்தோன்றும் படி மயங்கிக் கூறினள் என்க. அன்னங்காள்! நீர் மன்னன் குலப்பொன்னி வைகலும் ஆடுதிர் எனக்கூட்டுக. மற்றவற்றை யும் விளிப்பெயர் முன்வைத்துப் பின் மற்றை எழுவாய் பய னிலையை நிறுத்திப் பொருள் கொள்க. தொண்டி - கீழ் கடற் கரையின்கண் உள்ள ஓர் ஊர். இது சோழர்க்குரியது ஆதலின் "தொண்டிக்கோன்" என்றார்.

## 511—524: மன்னர்க்கு... ...விருப்பு வருவித்தாள்

(சொ - ள்.) அரசர்க்கு அரசன், வளவன், அகளங்கன், (ஆகிய சோழன்) (பவனி வருவதைக் குறிக்கும் அறிகுறியாக அவன் வருவதற்கு) முன்னே சங்கு முழங்கியவுடனே, (அவ் வரிவை) மின்னலைப்போலச் சென்று தான் காப்பாற்றிய சிறந்த மடமும், எந்நாளும் விட்டுப்பிரியாத நாணமும் பெருங்காதலால் (தன்பால்) இல்லாதுநீங்கச் சூரியனை எதிர்வந்து கண்டது போலச் சோழன் வடிவவொளியைக் கண்டு முகமாகிய தாமரை மலர்ந்தாள். பின்னர் வளர்ந்து பெருகி மேல் நிறைந்து அகன்ற

அல்குல் அதன்மேல் படிகின்ற மேகலையும் போதாதவாறு பக்கம் அகன்றாள்; ஒளி குறையும்படி இடையை யொடுக்கிய கொங்கையும் தோளும் முன்னிருந்தபடி பருத்தாள். வற்றாத காவிரித் துறையுடைய சோழனது அழகிய பூமாலையைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுடையோர் தன்னையன்றிப் பிறரில்லாமையை உறுதியாக்கினாள். சோழனுக்குப் பூமிதேவியின் கொங்கையாலும் திருமகளின் தோளாலும் வாராத காதலை வருவித்தாள்.

(வி - ம்.) மடம் என்பது மாதர்க்குரிய நாற்குணங்களுள் ஒன்று. மடம் - கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை. நாணம் என்பதும் ஒன்று. மற்றைக் குணங்களுட் சிறந்தது, குலப் பெண்கள்பால் என்றும் பிரியாதிருப்பது இது. "பெண் பாவலர்கட் கணியாய்ப் பிரியாத நாணும்" (சீவகசிந். 1967) என்றார் திருத்தக்கதேவர். இரவி எதிர் வந்து காணுங்கால் எய்ப்ப எனக் கூட்டுக. இரவி ஏய்ப்ப எனவும் கூட்டலாம். இரவி ஏய்ப்ப (சோழன்) உருவவொளி வாய்ப்ப முகபங்கய மலர்ந்தாள் என்று பொருள் கொள்க. மேகலையும் போதா வண்ணமாக அல்குல் புடை பெயர்ந்தாள் என்க. நடு - இடை. ஒடுக்கும் - தேய்க்கும். கொங்கை வளர வளர இடை தேய்ந்து தேய்ந்து மறையும் என்று கூறுவது நூல் மரபு. கண்டாள்; முகமலர்ச்சியடைந்தாள்; அல்குல் விம்மிற்று; கொங்கைகளும் தோளும் பருத்தன; சோழனைப் புணர்வதற்குத் தக்கவள்தான் என்று உறுதி காட்டினாள்; சோழனுக்குக் காதலை வருவித்தாள். பூமிதேவியின் கொங்கையிற் றோய்ந்திருப்பதனாலும் திருமகள் தோளை யணைந்திருப்பதனாலும் சோழனுக்குப் பிற பெண்கள் மேற் காதல் தோன்றாது அத்தகைய சோழனுக்கு "வாரா விருப்பு வருவித்தாள்" என அரிவையின் எழில் நலம் பாராட்டினர் என்க.

## 524—534 : ஓராங்கு கோது.......தேவிட்டா வமுதம்

(சொ - ள்.) இஃது ஒருவாறாக (சக்கை முதலிய) குற்றங்கள் கலப்பில்லாத நல்ல வெல்லப்பாகு போன்றவள்; கொய்யப்படுந் தளிரை ஈனுகின்ற மலர் வாடாத பொற்கொம்பு போல்வாள்; மேலுள்ள முயற்களங்கத்தால் ஒளி மழுங்காத நிறைமதி போல்வாள்; வானத்திலுள்ள மேகத்தால் ஒளி மறையாத மின்னல் போன்றவள்; இலக்கணத்தைக்கொண்டு எழுதப்படாத ஓவியம் போல்வாள்; ஏழிசைகளைப் பாடும் வண்டு மொய்க்காத கற்பகத்தின் பூங்கொம்பு போல்வாள்; முழுவதும் கருப்புறாத தோகையையுடைய இளமையான மயில்போல்வாள்; எந்நாளும்

தெளிவில்லாத மயக்கத்தைக் கொடுக்கும் தேன் போல்வாள்; பொருளால் வருந்தித் தேடினும் கிடையாத மாணிக்கம் போல்வாள்; எவருக்கும் உண்ண உண்ண வெறுப்புத் தோன்ருத தேவாமிழ்தம் போல்வாள் (ஆகிய தெரிவை.)

(வி - ம்.) வெல்லப்பாகு கரும்பின் சக்கை முதலிய குற்றங்கள் சேர்ந்திருக்கும் ஆதலால் வெல்லப்பாகு இவளுக்கு ஒப்பாகாது. அக் குற்றங்கள் கலவாத வெல்லப்பாகு இருந்தால் அதனை இவட்கு ஒப்புக் கூறலாம் என்பது கருத்து. கோது விரவாக் கொழும்பாகு காண்பது அரிது. அது போன்றவள் இவள். உலகத்தில் இல்லாத உருவம் படைத்த பெண் அருமை தோன்றும்படி அமைத்துக் காட்டுகின்ருர். இதுபோலவே பொலங்கொம்பு, முழுத்திங்கள், புதுமின், ஓவியம், கற்பகத்தின் கொம்பு, இளந்தோகை, தேறல், மாணிக்கம், அமுதம் என்ற பொருள்களையும் இயற்கைப் பண்பு நீக்கி இல்லாத பொருளாக்கி அவற்றிற்கு ஒப்பானவள் இவள் எனக் கொள்க. இவ்வறு கூறுவது விலக்குருவகம் என்னும் அணியாம்.

534—542: திருந்திய........சேரவினிதிருந்த செவ்விக்கண்

(சொ - ள்.) (தெரிவை யொருத்தி) திருத்தமான சோலையிலிருந்து இளந்தென்றற் காற்றுத் தூதுபோல வரவும், அந்தியாகிய மாலைப் பொழுதின்கண் மணிகள் பதித்த மண்டபத்தில் கடலில் எழுந்த நிலவின் ஒளிபடியும் நிலா முற்றத்தில் தூங்கும் மகரமீனின் அகன்ற வாய்போன்ற பெரிய வாயிலிருந்து சிந்திய பனித்துளித் திரட்சிகள் வீழவும், தன் பாங்கில் உள்ளோர் அன்புடன் பூசிய சந்தனம் மணம் கமழவும், புள்ளியுடைய வண்டு மொய்த்த முல்லைமலர் மணத்தைப் பரப்பவும், கூத்து வகைகட்குரிய பெருமையான இசைபாடும் யாழ்ப்பாணன் தன் பேதை விறலியுடன் சேர்ந்து இனிமையாக இருந்த அமையத்தில்.

(வி - ம்.) தூதுவர் ஒருவர்பாற் சென்று செய்தி சொல்லி வருவோர், அச்செய்தி கேட்டவர் வேறு செய்தி கூறிவிடுத்தால் அதனையும் பொய் சொல்லி மீள்வர். இது தூதுவர் இயற்கை, தென்றற்காற்று வரவும் போக்கும் அவ்வாறிருந்தது. அதனுல் "தூதுவரு" என்ருர். வீழ்ந்த பனித்துளிகளெல்லாம் திரண்டு ஒருபுடைசென்று கீழ் விழுவதற்காக அகன்ற வாயுடையதாக ஒன்று அமைத்திருப்பர்போலும். அது நிலாமுற்றத்தை யடுத்திருக்கும் எனத் தெரிகிறது. "நிலவுப் பயன்கொள்ளும் நெடு

வெண் முற்றத்துக் கிம்புரிப் பகுவா யம்பண நிறையக், கவிழ்ந்து வீழருவிப் பாடுவிறந் தயல'' (நெடுநல். 95-97) என வருதலுங் காண்க. உழையோர் என்றது பாங்கியரை. மாலைப் பொழுது, மண்டபத்து, முன்றிலில், தூது வரவும், கற்றை தூங்கவும், சந்தனம் கமழவும், முருகுயிர்ப்பவும், இனிதிருந் தனள். அத்தெரிவை எனவும், யாழ்ப்பாணனும் பேதை விறலி யும் அவளுடனிருந்தனர் எனவும், அறிக. வேலை விரிந்த நிலா முன்றில் என்பதைத் திருப்பாற்கடல் போலப் பரந்த நிலாமுற் றம் எனவுங் கொள்ளலாம். வேலை-கடல். இங்குத் திருப்பாற் கடல் எனக் கொள்க.

## 542—546 : நேரியும் கோழியும்......காவிரியும் பாடுகென

(சொ - ள்.) சோழனது நேரிமலையையும், (தலைநகர் ஆகிய) உறையூரையும் புலிக்கொடியையும், மூன்று முரசங் களையும், குதிரையையும், பருத்த அயிராவதம் என்ற யானையை யும், சக்கரத்தையுடைய திருமாலாகிய அச்சோழன் புனைந்த ஆத்திமாலையையும் அவன் ஆணையையும் சோழ நாட்டினையும் காடுகளைச் சுருட்டி எறிகின்ற காவிரியாற்றினையும் குறித்துப் பாடுக என்று (அத்தெரிவை பாணனை நோக்கிக்) கூற.

(வி - ம்.) ''வரையாறு நாடு நகர் ஊர் துரக மதகரியே விரையாரு மாலை முரசம் பதாகைமெய் யாணை யென்னும், உரை யார் தசாங்கம்'' என்று கூறுமுறை மாறிப் பத்தும் வந்துள்ளன. இங்கு பாணனைப் பாடுக எனக் கூறியதாக ஆசிரியர் கூறியதால் முறைமாறிக் கூறினர் எனக் காண்க. தசாங்கங் கூறும் புலவர் முறைப்படியே கூறுவர். அது மரபு. வெள்ளம் வரும்போது காட்டிலுள்ள பொருள்களை யெல்லாம் இழுத்துக் கொண்டு வரும் என்பதுதோன்ற ''காடுதிரைத் தெறியும் காவிரி'' என்றார்.

## 547—556 : கூனலியாழெடுத்தான்....வேனிலான் பாணி

(சொ - ள்.) பாணன் வளைவாகிய தன் யாழினைக் கையி லெடுத்தான். (அவன் எடுத்தது கண்டு) வேனிற் பருவத்துக் குரிய அரசனாகிய காமனும் சினந்து எழுந்து தன் வளைந்த வில்லை யெடுத்தான். தேன்போல ஒழுகிய நரம்புகளை யாழ்ப் பாணன் கையாற் றடவினான். கொடிய வலிமையுடைய மார னும் தன் வில்லிலுள்ள நாணியைக் கையாற் றடவினான். முதலில் நிறைந்த நரம்புகளைச் சுருதிக்குப் பொருந்தும்படி யமைத்து ஏழிசைகள் நிற்கும் நிலைகளை ஆராய்ந்தான் பாணன். வலிமையுடைய காமனும் தன் அம்புகளை ஆய்ந்து அவற்றின்

நிலையை யாய்ந்தான். விறலியோடு சேர்ந்து பாணன் ஒரு பாட்டினைக் கோத்தான். மதனும் சினந்து தனது அம்பறாத் தூணியில் அம்புகளெல்லாந் தொலையும்படி பல பாணங்களைக் கோத்தான். பாணனது யாழினின்றெழுந்த இசைப் பாடல்கள இனிமையாக ஒலித்தன. மதனுடைய கரங்கள் பாணங்களை யேவி வேகமாக விடுத்தன.

(வி - ம்.) இசைப் பாடல் காமத்தை மிகுவிக்கும் என்ற கருத்தினால் இங்குப் பாணனுடைய செயலினையும் காமனுடைய செயலினையும் ஒன்றாக்கிக் கூறினார். சோழனுடைய மலையாறு முதலியவைகளைக் குறித்துப் பாடுக என அவள் பணித்தமையான் அம்மன்னன்மீது முன்னரே காதல் கொண்டிருந்தவள் அவள் என்பது நன்கு விளங்கும். யாழெடுத்தபோது காதல் துவங்கியது; நரம்பைத் தடவும்போது அவளுக்குக் காதல் பரவியது, பண்ணின் நிலை தெரியும்போது அவட்குக் காமநிலை தெரிந்தது. பாணன் பாடியபோது காமமிகுந்து மயக்கமடையும் நிலையாயினள் என்பது கருத்து. மன்மதன் அம்புகளை அதிகந் தொடுத்தான் என்றால் காமமிகுந்தது என்பதுதான் பொருள். பாணன் யாழ் எடுத்தான்; காமன் வில்லெடுத்தான்; நரம்பு தைவந்தான்; நாண் தைவந்தான், சுருதி தெரிந்தான். அம்பு தெரிந்தான், பாணி கோத்தான், அம்பு பல கோத்தான் எனச் சொற்களை முறையே அடுக்கியிருக்கும் நயம் ஆசிரியர் புலமையைக் காட்டுவதாம். தைவந்தான் - தடவினான். தெரிந்தான் - ஆராய்ந்தான். பாணன் யாழ் எடுத்தான் எனவும் வேனலரசனும் வில்லெடுத்தான் எனவும் எழுவாய் செயப்படு பொருள் பயனிலைகளை முறைப்பட வைத்துப் பொருள் காண்க. பின் வந்த கண்ணிகளிலும் இவ்வகையே பொருள் கொள்க.

## 556—569: விசைத்தெழுந்த......புலம்பினாளாங்கு

(சொ - ள்.) நரம்பினின்று விசையாக எழுந்த வீணையிசையினாலோ மன்மதன் அம்பின் விசையாலோ ஒளி பொருந்திய நெற்றியுடையவள் மதிமயங்கி வீழ்ந்து சேய்மையில் உலவுகின்ற வாடையைப் போன்ற தென்றற்காற்றினையும் கோடைக் காற்று என்றே கூறினள். நீண்ட கச்சினை வெறுத்த அழகிய முலைமேல் தெளித்த பனிநீரை இதுவோ நெருப்பு என்றாள். ஊரிலுள்ளவரை யெல்லாம் காப்பதற்கு முழக்கும் காவற் பறையை வருத்தும் அம்புடைய மன்மதன் முழக்கும் போர்ப் பறையென்றே புகன்றாள். வாழ்கின்ற உலகத்து மனிதர் யாவரும் மனமகிழும்படி படுக்கைகளில் வீழும் நிலாவை வெயில் என்று கூறினாள். உறையூர் மன்னன், அகளங்க (விக்கிரம

சோழன்) னுடைய ஏழுலகத்தையும் புரக்கின்ற செங்கோல் (என் போன்ற) சிலர்க்குக் கொடுங்கோல் என்றுரைத்தாள். இரவு விடியும் வரையும் (இவ்வாறே) ஆங்குப் புலம்பினுள்.

(வி - ம்.) அத்தெரிவை மயங்குதற்குக் காரணம் இன்ன தென அறிய வழியின்று என்பார், இசையாலோ அம்பாலோ என் ஐயுற்றுக் கூறினர். வாடை - வடக்கிருந்து வருவது. இது கார்காலத்தையடுத்த காலத்து வரும்; ஆதலால், அவ்வாடை வருங்காலத்தைக் கூதிர்காலம் எனக் கூறினர். மிகவும் குளிர்ச்சி தருவது வாடை. மழைபெய்து நிலங் குளிர்ந்தபின் வருவதனுல் அதற்குக் குளிர்ச்சி இயற்கையா யமையும். தென்றலும் குளிர்ச்சி தருவதால் "வாடையனைய மலையாநிலம்" என்ருர். மலையாநிலம் - தென்றல். மலயம்-பொதியமலை. அநிலம்-காற்று. மலயம்+அநிலம்=மலையாநிலம். கோடை=மேல் காற்று. வேனிற்காலத்து வருவதால் வெப்பமுடையது. தென்றலைக் கோடை என்று கூறினள். அவளுக்குக் காதலாற் குளிர்ச்சி வெப்பமாகத் தோன்றியது. கச்சணியுந்தோறும் நழுவுவது குறித்து "வாரை முனிந்த வனமுலை" என்ருர். குளிர்ச்சியாய் இன்பந்தரும் பொருள் யாவும் காதல் நோயுடையார்க்கு வெப்பமாய்த் துன்பந்தருவது இயல்பு. ஆதலால் பனிநீரை நெருப்பென்ருள். துடி-உடுக்கை. ஊர் காவலர் முழக்குவர்: அதுவும் பகைப்பொருள். மாரன் போர்ப்பறை முழக்கமென்றே கூறினள். சேக்கைதொறும் வீழும் நிலவு படுக்கையிடங்கடோறும் வேண்டுமென்று விரும்பும் நிலவு எனவும் கொள்ளலாம். யாவரும் விரும்பும் நிலவை வெயிலென வெறுத்தாள் என்க. இறைவன் தன்னடிக்கீழ் வாழ்வார் படுந் துன்பங்களை நீக்கி யின்பமளித்துக் காப்பது நீதியாம். நம்மன்னனும் அவ்வாறு தான் காக்கின்ருன். அதனுல் செங்கோலன் என்று யாவருங் கூறுகின்றனர். ஆயினும் அவனைக் காதலித்த என் போன்ற சில கன்னியர் கருத்தறிந்து வந்து கலந்து இன்பம் அளித்திலன். அதனுல் சிலர்க்கு அவனரசு கொடுங்கோலாகத் தோன்றும் என்ற கருத்து விளங்க "செங்கோல் கொடுங்கோல் சிலர்க்கு" என்ருள். காதல் கொண்ட கன்னியரைக் கலந்து இன்பமளிப்பதுவும் அரசன் செய்யும் முறையாம் என்பது அவள் கருத்து. இரவில் இசைகேட்டபின் விடியுமளவும் காதலாற் பலபடப் புலம்பினள் என்க.

**570—574:** பலரும் பணிந்து......ஓடிப் பிழைத்தனளாய்

(சொ - ள்.) பெரிய மலைகள் சூழ்ந்த கடல் சூழ்ந்த உலக முழுவதும் உரிமையாக உடைய மன்னன் சோழன், பலரும்

வணங்கித் துதிக்கும்படி முகபடாம் அணிந்த யானைமேற் பவனி வர, அத்தோற்றங்கண்டு வீணையின் மீட்டிய இசை முதலாகிய எப்பகைக்கும் பொறுக்க முடியாமல் வருந்திய உயிர் செழிக்க எழுந்து ஓடிப் பிழைத்தவள் ஆகி நின்று.

(வி - ம்.) பலரும் பணிந்து பரவ, பிரான், யானை தோன்றுதலும் என்பதை பிரானைத் தாங்கிய யானை தோன்றுதலும் என்ருவது பிரான் யானையின்மேல் தோன்றுதலும் என்ருவது உருபு விரித்துக் கொள்க. யானையும் பிரானும் இயைந்தே வருவர் ஆதலின். இசை முதலிற் பகையாயிருந்தது; பின்னர்த் தென்றல், பனிநீர், துடி, நிலவு இவைகளும் பகையாயின ஆதலால் 'இசை முதலாம் எப்பகைக்கும் ஆற்ருது' என்ருர். பல பகைவர் நடுவே வருந்தி யுயிர் விடும் அமையத்து யானை தோன்றியது கண்டவுடனே பகைவரிடமிருந்து தப்பிப் பிழைக்க வோடுவார் போல் ஓடினள் என்ற கருத்தமைய "ஓடிப் பிழைத்தனளாய்" என்ருர்.

## 575—586: முட்டுந் திகிரி கிரியன்......அசனியேறே

(சொ - ள்.) (வானத்தை) முட்டுகின்ற சக்கரவாளகிரியின் பழைமையான முதுகிற்கட்டிய தெய்வத்தன்மை வாய்ந்த மத யானைகள் எட்டுந் தாங்கிய உலகத்தைத் தனியாகத் தாங்கிய மன்னனைத் தாங்கிய அயிராபதமே! செருக்குற்று நட்பாகப் பொருந்துவதை நினையாத போர்புரிந்த கலிங்க நாட்டினர் தோற்ருேடிப் போயிருந்த வடக்கிலுள்ள மலைகளெல்லாம், சூரியமண்டலத்தோடு முட்டிப் பொருது கெட்டுப்போன விந்த மலையைப் போலப் புதையும்படி அவற்றின்மேல் நடந்த மலையே! கெடாத சந்திர குலத்திற்கும் தெய்வத்தன்மையுள்ள பொதிய மலைக்கும் அழகிய இடம் பரந்த பழைமையான குமரி யாற்றிற்கும் தங்களுடைய நாட்டிற்கும் போர்புரியும் பாண்டி மன்னராகிய பாம்புகள் நடுங்கி வீழும்படி பிளிறுகின்ற ஒப்பற்ற இடியேறே! (என யானையை நோக்கி விளித்தனள்.)

(வி - ம்.) கடாயானை எட்டும் என்றது திக்கு யானைகள் எட்டினையுங் குறித்தது. உலகை முழுவதையும் வளைத்துக் கோட்டைபோலச் சூழ்ந்து நிற்பது சக்கரவாளகிரி ஆதலால் அதன் முதுகிற் கட்டிய எட்டு எனத் திசையானையின் சிறப்புக் கூறினர். ஒவ்வொரு திசையின் முடிவெல்லையில் அவைகள் நிற்பன என்பது நூல் மரபு.

எட்டுத்திக்கு யானைகளாலும் தாங்கப்பட்ட உலகத்தைத் தனியே தாங்கு மன்னனை நீ தாங்கி வருகின்ருய்; உன் வலிமை

மிகவும் சிறந்தது. உன்போன்ற வலிமையுடையவர் யார் உளர் என்ற கருத்துத்தோன்ற "எட்டும் தரிக்கும் உலகம் தனிதரித்த கோனைப் பரிக்கும் அயிராபதமே" என்றார். கலிங்கர் தோற்றுப் புறங்காட்டி ஓடி யொளித்த வடக்கிலுள்ள மலைகளெல்லாம் விந்தகிரிபோலப் புதையும்படி அவற்றின்மேல் நடந்த மலையே என்றது. முன்னிகழ்ந்த கலிங்கப் போரில் ஓடி யொளித்த வரைத் தேடிச் சோழன் சென்றபோது நீ யவனைத் தாங்கிச் சினந்து விரைந்து அம்மலைகள் மேல் நடந்தனை யென்றும், அப்போது மலைகள் விந்தம்போல் மண்ணிற் புதைந்தன வென்றும், அம்மலைகட்கெல்லாம் பெரியமலையாக உன்தோற்றம் இருந்ததென்றும் யானையைப் புகழ்ந்த குறிப்பிது. வடவரைக ளெல்லாம் விந்தமேபோலப் புதைய எனக் கூட்டுக. தமது குலம், மலை, யாறு, நாடு இவைகளைப் பிறர் கவரநினைத்தபோது போர்புரிவர் என்பது தோன்ற "திங்கட் குலத்திற்கு...... படிக்கும் பொரும்" என்றார். இடி முழக்கம் கேட்டாற் பாம்பு கள் நடுங்கிஇறப்பது இயற்கை. ஆதலாற் "பன்னகங்கள் வீழ" என்றார். பன்னகம் - பாம்பு. அசனி - இடி. ஏறு - ஏறுவது. பொருள்மேல் விழுந்து துளைத்துச் செல்வது. இடியாகிய ஏறு இருபெயரொட்டு எனக் கொள்க. நிருபர் - மன்னர். நிருப பன்னகம் என உருவகமாக்கினர்; யானையை இடியேறு என்று கூறியதற்கேற்ப. சோழன் யானை பிளிறுவது கேட்டால் பாண்டியமன்னர் நடுங்குவர் என்பது தோன்றும். ஒருவர்பா லுதவி பெற விரும்பியவர் அவரைப் புகழ்வது இயல்பு. அது போல யானையின் உதவி பெற இத்தெரிவை விரும்பியதால் இவ் யானையை இவ்வாறு புகழ்ந்தனள் எனக் கொள்க.

## 586—598: கடிப்பமைந்த......அனகன் வர நீங்கினேன்

(சொ - ள்.) குறுந்தடியோடு பொருந்திய யாமந்தோறும் அடிக்கப்படும் முரசின் ஒலியால் நான் இழந்த நிறை எனும் பண்பினை நினதுவரவறிவித்த மாலையணிந்த முரசின் ஒலியானது தரப்பெற்றேன்; அச்சத்தைத் தரும் காளையின் கழுத்து மணி யொலி யுண்டாக்கிய செவிப்புண், நின் இருபுடையும் உள்ள மணியோசையால் ஆறப்பெற்றேன். பெருத்த கொங்கைமேல் தென்றற்காற்றுச் சுட்ட நீங்காத வெப்பத்தை உனது செவிகளி லிருந்து வரும் நீங்காத காற்றினுன் மாற்றினேன். நடுங்கச் செய்யும் பனித்துளிகள் (உடம்பினின்றும்) வேருகப் பிரித்துக் கொண்டுபோன என்னுயிரை நீ வீசிய மதத்துளிகளால் திரும்பப் பெற்றேன். நெருங்கிய மேகங்கள் உலாவுகின்ற அலைகளையுடைய கடல் முழங்க அதனுல் உண்டாகிய என்

காமநோய் வருத்தத்தை ஒப்பற்ற நீ முழங்க அதனுல் நீங்கினேன். பெருகிய இரவில் என்மீது மன்மதன் போர் செய்ய வந்த துன்பங்களெல்லாம் நின்மீது சோழன் பவனிவரக் கண்டு நீங்கினேன் (என்று கூறினள்.).

(வி - ம்.) யாமந்தோறும் ஊர்க்காவலர் அடிப்பதனுல் அது "யாம்முரசு" எனப்பட்டது. ஏடகம் பொதிதார் பொருந்திட யாம பேரி யிசைத்தலால் (கம்ப. கைகே. 57) என்று கூறுவதும் காண்க. யாமமுரசு, விடைமணி, மலயக்கால், பனித்திவலை, கடல்முழக்கம், அனங்கன் ஆகிய பொருள்கள் காமநோயைத் தந்தன. சோழன் ஏறிவந்த யானையைக் கண்டவுடன் அத்துயரமெல்லாம் நீங்கின என்பது கருத்து. நிறை - மனத்தை வேறுவழிச் செல்லாது நிறுத்துவது. செவிப்புண் என்றது ஒலி கேட்டுக்கேட்டு வெறுப்படைந்ததைக் குறித்தது. புண் புலர்ந்தேன் என்றது, உன் கழுத்து மணியோசை கேட்கக் கேட்க விருப்பமுற்றேன் என்பது. செவியில் மாருப் பெருங்காற்று என்பது. யானை செவிகளை யசைக்கும்போது எழும் பெரிய காற்றினைக் குறித்தது. திவலை-துளி. ஓதம் - அலை; ஒலி எனவும் கூறலாம்.

## 598—609 : இன்னும் கடை......என்றிரந்து நின்ருள்

(சொ - ள்.) இன்னும் முடிவு வரையும் என்னை நீ காக்கக் கருதுவையாகில் வண்டுகள் இருபக்கத்திலும் செல்லச் செல்கின்ற மலைபோன்ற யானையே! விடுத்தலாற் சென்று நீராடும் பொய்கையைக் கலக்குவாயாயின் காமனுக்குக் கூரிய அம்பு காட்டி நிற்கும் பொய்கையையே கலக்கவேண்டும். இன்னும் கேட்டருள்க. மேகமும் எதிர்வர நாணும் கரிய உருவத்தையுடைய நின் மதத்திற் படியும் வண்டுகளை யொழித்துக் காமன் போர்க்குப் பூட்டும் வில்லின் நாணியாகிய வண்டுகளையே அடித்துக் கெடுக்கவேண்டும். பூமிக்கு மன்னனுகிய சோழன் சிவந்த கையிலுள்ள கரும்பினை யொழித்து, நீ தின்பதற்கு மன்மதன் கை வில்லாகிய கரும்பினையே விரும்பவேண்டும். எங்கட்கு உயிராகி உடலாகி அறிவாகியிருப்பாய் நீயல்லவோ அயிராபதமே! பெயராது நில் என்று கூறி வேண்டி நின்ருள்.

(வி - ம்.) விடை - விடுத்தல். அரசன் பவனி முற்றி யானையை விடுத்தலை யுணர்த்தியது. விடுத்தபின் போய் என்பது பொருள். ஆடுந் தடம் என்பது விரித்தலாகி ஆட்டுந்தடம் எனநின்றது. பாகர் என்பதை வருவித்துப் பாகர் விடைபெற்றுச் சென்று உன்னை நீராட்டுகின்ற தடம் என்றும் பொருள் கொள்ள

லாம். காமனுக்கு அம்புகள் என்று கூறப்படுவன ஐந்து மலர்கள். "முல்லை, அசோகு, முழுநீலம், சூதப்பூ, அல்லி மலரோடிவ் வைந்து" என்பன அவை. முல்லை அசோகு சூதம் மூன்றும் கோட்டுப்பூவாதலால் அவற்றை யொழித்துப் பொய்கையில் மலரும் பூக்களை மட்டும் கொள்க அல்லிமலரும் நீலமரும் பூத்த பொய்கையைக் கலக்கிப் பூக்களைத் தொலைத்துவிடு என்பது பொருள். அல்லிமலரை யொழித்துத் தாமரைமலரை அம்பாகக் கொள்வார் பலர். மன்மதன் கை வில் கரும்பு, வில் நாணி சுரும்பு, வில்லின் வைத்துத் தொடுக்கும் அம்பு மலர் இம்மூன்றையும் நீ தொலைத்துவிட்டாற் காமன் போர் புரிய வர மாட்டான். எம்போல்வார் துன்பம் நீங்கும். ஆதலால், இச் செயல்புரிய வேண்டும் என்று கூறி வேண்டினள். பெயராது சிறிதுநேரம் நில் என்றும் வேண்டினள் எனக் கொள்க. கண்டாய்: முன்னிலையசை. நில் என்று இரந்து நின்றாள் என்று முடிக்க.

## 609—618. நுதலாக விற்......மலர்பறிப்பா ளொப்பாள்

(சொ - ள்.) வில்லை நெற்றியாகக்கொண்ட வேறு ஒருத்தி பேரிளம்பெண் கொற்கைநாட்டரசனாகிய வலிய புயமுடைய சோழனது மதயானையின் கைபோலக் கொல்லுவதற்காகத் திரண்ட துடையுடையாள்; அளவில்லாத வளைந்த கொலை பகைக்கப்பட்ட சேடன் முடியிலுள்ள நிறமான நாகமணியைப் புனைந்து நடிக்கும் படம்போன்ற அல்குலுடையவள்; பாங்கியாகித் தம்மைத் தாங்கி இடையைத் தேய்த்தழித்த தமது பழிக்கு நாணி வட்டவடிவமான முகத்தைச் சாய்த்ததுபோலக் கவிழ்ந்த கொங்கை யுடையவள்; திருமகள் தனக்கு நிகர் ஒருவரும் இல்லாமற்செய்து தானுறையும் மலரையும் பறித்து நின்றவளைப் போன்றவள்.

(வி - ம்.) யானைக் கை கொல்லுந் தொழிலுடையது; திரண்டது. அதுபோலத் துடையும் கொல்லுந் தொழிலுடையதாய்த் திரண்டது என உவமையை விரிக்க.

பாம்புகளிற் சிறந்த பாம்பு ஆதிசேடன். அவனுடைய படம் போன்ற அல்குல் என உவமையை யுயர்த்தி அல்குற்குச் சிறப்புக் காட்டினர். குரு - நிறம். மணி - இரத்தினம். நாகமணி மேற்கொண்ட படம் என்று கொள்க. பேரிளம்பெண் ஆண்டு நாற்பது சென்றவள். ஆதலால், அவள் கொங்கை சிறிது சாய்ந்திருந்தது என்பது தோன்ற, "முகஞ்சாய்த்த கொங்கையாள்" என்றார். கொங்கைகள் தம்முகம் கவிழ்ந்து

தோற்றம் பாங்கியரைப்போல எப்போதும் தம்மைத் தாங்கிச் சுமந்திருந்த இடையைத் தேய்த்து வருத்திக் கெடுத்த தம் பழிச் செயலுக்கு நாணித் தலைகவிழ்ந்தது போலத் தோன்றியது என்றார். பிறந்த குழந்தையை நடந்து செல்லும் பருவம் வரையிற் சேடியர் தூக்கிச் சுமந்து வளர்ப்பதுபோல இடையும் கொங்கை தோன்றிய காலமுதற் சுமந்து வட்டமாய் வளரும் பருவம் வரை தாங்கியது என்ற குறிப்புத் தோன்ற, ''சேடியாய்த் தம்மை யெடுக்கும் இடை'' என்றார். அறிவுடையோர் பழிக்கு நாணுவர்; தலைகவிழ்ந்து நிற்பர். அவரைப்போலக் கொங்கைகளும் நன்றி மறந்து தீதுசெய்த தம் பழிக்கு நாணிக் கவிழ்ந்தன என்பார், 'முகஞ்சாய்த்த' என்றார். சாய்த்ததன்ன கொங்கை' எனக்கொள்க. செய்யாள் - திருமகள் (இலக்குமி) அழகில் ஒருவரும் தனக்கு நிகரில்லாமற் கெடுத்துப் பின் தாமரைமலரையும் பறித்தெறிந்து வெளியில் வந்த திருமகள் போன்றவள் என்பது. பகையிருக்கும் வரையும் மறைந்திருப்பார்; பகைவரில்லையெனில் வெளிப்பட்டு எங்குந் திரிவர். இஃது உலகியற்கை. அதுபோலத் தாமரையைப் பறித்தெறிந்து வெளியேறிய திருமகள் வந்தனள் என்று கொள்க.

## 618—628. நறைகமழும் மாலை......தமர்மேலயர்ந்தாள்

(சொ - ள்.) (அப்பேரிளம்பெண்) மணம் கமழும் பூமாலை பல புனைந்து கத்தூரிக்குழம்பு பூசிக் கடலிற் பிறந்த முத்துமாலை யணிந்து பூஞ்சோலையில் மானும் மயிலும் போன்ற பாங்கியரும் தானும் அழகுடன் அமர்ந்திருப்ப வண்டுகள் ஒலிக்கும் கள் ஊறுகின்ற இளம் பாளையின் உச்சியில் உண்டாகிய கடுப்புடைய கள் வடிந்திறங்கிய அமையத்தில் அக்கள்ளை வேருகக் குடத்தினிரப்பி வண்டுகளையும் அதிலுள்ள நுரையையும் போக்கி ஒருத்தி புகழ்ந்து பேசிக் கொடுக்கப் பார்த்து வருந்திச் சிறிய கள்ளின்றுளியைக் கூரிய நகத்தாலெடுத்துத் தெறித்து விட்டுப் பின் உண்டு சுற்றத்தார்மேல் சோர்ந்து வீழ்ந்தாள்.

(வி - ம்.) மானும் மயிலும் நோக்கத்திற்கும் சாயலுக்கும் உவமையாதலால் மான்போன்ற மருண்ட பார்வையும், மயில் போன்ற கண்ணுக்கினிய சாயலுமுடைய மடந்தையர் என்க. மடந்தையர் - பெண்கள். இவர் பாங்கியர். மடல் - வாயகன்ற பாத்திரம். பனைமடல் எனவும் பொருள் கொள்ளலாம். மடலைக் குடையாக்கி யதிற் கள்ளூற்றிக் குடித்தலும் பண்டைக்கால வழக்கம் ஆம். இக்காலமும் பனைமடலைப் பயன்படுத்துவது காண்கின்றோம். கள்ளைக் கொடுக்கும்போது அதில் மொய்த்துக்

இடக்கும் வண்டுகளையும் நுரையையும் போக்கிக்கொடுப்பதும், குடிப்பவர் அக்கள்ளில் ஒரு துளியை விரனகத்தாற் றெறித்து விட்டுப் பின் குடிப்பதும் மரபு எனத் தெரிகிறது. கள்ளைக் கொடுப்பவர் அதனினிமையும் தெளிவும், குடித்தலால் உண்டாகும் இன்பமும் கூறிக் கொடுத்தல் இயல்பு என்பது தோன்றப் 'புகழ்ந்து தர' என்ருர். என்பொருட்டுக் கொணர்ந்த இக் கள்ளினை மறுத்தால் கொணர்ந்தவர் வருந்துவரே என்று கருதி வருந்திப் பின் அருந்தினள் என்பார், 'நோக்கி வருந்தி' என்ருர்.

## 628—642. பொருந்தும் மயக்கத்து ......குலாவுதலும்

(சொ - ள்.) (அயர்ந்தபோது) உண்டாகிய குடிமயக்கத்தில் மனுகுலத்து வந்த மன்னர்களில் உயர்ந்தவனுகிய விக்கிரம சோழன் வந்து விரும்பத்தக்க கனவிற் புணர்ந்த புணர்ச்சியால் மிகுந்த வேட்கையும், மிகுந்த கள்ளுண்ட மயக்கமும் அதனேடு கூடிய உறக்கமும் ஒன்றுக்கொன்று பகையாக, உடனே அதனு லெழுந்து பக்கத்து வந்துஒளிவீசும் ஒருநீண்ட பளிங்குச்சுவரில் தோன்றிய தனது சாயையைக் கண்டு உயர்ந்த பவளமணி சூழ்ந்த அல்குலின் மேகலையே துகிலாகவும், துகில் பக்கத்தே பெயரவும் தோள் நெகிழவும், வாசனையுள்ள பூமாலை நீங்கவும், இரண்டாகிய கொங்கைகளிற் பூசிய சந்தனக்கோலம் அழியவும், கூடிய சிவப்புநிறமுள்ள வாய் வெண்மை நிறமாகவும், கரிய கண்கள் சிவப்புநிறமாகவும், விரும்பும் ஒளிபொருந்திய நெற்றியில் வெயர்வை தோன்றவும் கூடிய கனவை நனவாகத் தன் கருத்திற்கொண்டு பலர்க்கும் பெருமையாகப் பேசியிருக்கவும்.

(வி - ம்.) கள்ளுண்ட மயக்கம், அதனேடு சேர்ந்த உறக்கம், கனவிற் சோழன் வந்து கலந்த வேட்கை. இம்மூன்றும் ஒன்றுக்கொன்று பகையா யவளை உடனே எழுப்பின என்ருர். வேட்கை உறக்கத்தைக் கெடுத்தது; உறக்கம் மயக்கத்தைக் கெடுத்தது என்று கொள்க. தன் நிழலைப் பார்த்தபோது குடி மயக்கத்திற் சோர்ந்து கிடந்தவள் ஆதலால், அவள் வடிவம் புணர்ச்சிக்குறி யுடையதாகப் புலப்பட்டது. கனவை நனவாக மதித்தாள்; மயக்கத்தால் பலர்க்கும் அதனையே பேசிக் குலாவியிருந்தாள்; மேகலையே உடைபோல இருக்க, உடை புடை பெயர்ந்தது; தோள் நெகிழ்ந்தது; பூமாலை நீங்கியது; சந்தனக் கோலம் அழிந்தது; செவ்வாய் விளர்த்தது; கருங்கண் சிவந்தது; வெயர்வை யரும்பியது. இவைகள் கட்குடித்த மயக்கத்தால் சோர்ந்து கிடந்தபோதுதோன்றிய மாறுபாடு, இவற்றையே புணர்ச்சியால் நேர்ந்த மாறுபாடு எனக் கண்டு மகிழ்ந்து குலவினள் என்க.

## 642—646. வண்டுசூழ் வேரி......நண்ணுதலும்

(சொ - ள்.) வண்டுகள் சூழ்ந்த மணங்கமழும் கூந்தலை யுடைய அவள் தன் மனத்தில் வேறுபாடாகக் கண்டு உடல் நிறைந்த மகிழ்ச்சி பொய்யாகும்படி பரந்த மாலையணிந்த வெண்குடை நிழலைச் செய்ய வெற்றியில் உயர்ந்தவன் (விக்கிரம சோழன்) அச்சத்தைத் தரும் மதயானைமீது உலா வருதலும்.

(வி - ம்.) அப்பேரிளம்பெண் தன்னை விக்கிரமசோழன் வந்து நனவிற் புணர்ந்து சென்றான் என்று எண்ணி மகிழ்ந்தது பொய்யாகும்படி உலா வந்தான். யானைமேற் பவனிவருவது கண்டவுடனே புணரக்கண்டது பொய் என எண்ணினாள் அவள். பின் ஆய்ந்து உண்மை காணுதற்கு அவன் வரவு காரண மாயிற்று எனக் கொள்க.

## 646—653. தேமொழியும்.......தோண்மேலயர்ந்தாள்

(சொ - ள்.) தேன்போலும் இனிய மொழியுடையவள் (அப்பேரிளம்பெண்) பவனி கண்டவுடன் நான் கெட்டேன்; கனவை நனவாக நான் மனத்திற்கொண்டதும் அக்கட்குடி மயக்கங்காட்டிய வேறுபாடேயாகும். முற்பிறப்பில் இவ்வுல கத்தில் தவஞ்சிறிதுஞ் செய்யாத பாவியாகிய என்பால் இம் மன்னன் அணைய வருவனோ? (வாரான்) என்று கைகுவித்து வணங்கி, ஒருகாலும் தெளிந்து, பின் இரண்டாமுறையும் மனந் தெளியாத பெருகிய மையல் மனத்துள் அடைய அதனால் மயங்கி மனவேறுபாடு இல்லாத தோழியர் தோளின்மேற் சோர்ந்து விழுந்தாள்.

(வி - ம்.) கெட்டேன் - இரக்கக்குறிப்பை யுணர்த்தியது. கனவுதான் கண்டனன்; அக்கனவை நனவாக்கியது கட்குடித்த மயக்கம்தான் என்று உண்மையுணர்ந்தாள். தான் பிழை செய் ததை நினைத்து மனமிரங்கினாள். அவ்விரக்கக்குறிப்புத் தோன்ற 'கெட்டேன்' என்றாள். துகில் புடைபெயர்ந்தது; தோள் நெகிழ்ந்தது; பூமாலை சரிந்தது; சந்தனக்கோலம் அழிந்தது; செவ்வாய் விளர்த்தது; கருங்கண் சிவந்தது. நெற்றியில் வெயர்வை யரும்பியது ஆகிய வேறுபாடுகள் யாவும் கட்குடி யால் விளைந்தனவே; என்று ஆய்ந்தாள். அதனால் அம்மதுச் செய் கோலமே என்றாள். ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது. 'இத்தகைய மன்னனைக் காதலனாகப் பெறுவதற்கு எத்தனை தவஞ் செய்திருக்கவேண்டும். அத்தனை தவஞ்செய்திருந்தா லன்றோ அவனாற் காதலிக்கப்படுவன் யான்? அதற்குரிய குடிப்

பிறப்பும் தனிச்சிறப்பும் பெருவனப்பும் என்பாலுள்ளனவோ? இல்லையே! எவ்வாறு அவன் என்னைக் காதலித்து என்பால் வந்தணைவன்? கனவிற்கண்ட பொருள் கைக்குக் கிடைக்குமோ?' எனப் பலவாறு நினைத்து வருந்தினள் என்பது தோன்ற, 'தீவினையேற் கெய்த வருமே யிவன்' என்றார். இவன் என்று சுட்டியது யானைமேற் பவனிவரும் இத்தகைய சிறப்புடைய மன்னன் என்பதை விளக்கியது. ஒருகாலும், இரண்டாவதும் இவற்றிலுள்ள உம்மைகள் எதிரதுதழுவிய எச்சமும், இறந்தது தழுவிய எச்சமுமாய் நின்றன. இரண்டாவது தோன்றிய மையல் தெளியக் கூடாத மையல் என்பதை விளக்க, 'தேருப் பெரு மையல்' என்றார்.

## 653—664. அத்தோழியரும்... சிகாமணியே நம்ப

(சொ - ள்.) அப்பாங்கியரும் எழுமுழமுயர்ந்த அப்பட்டத்து யானையின் எதிரே விரைந்து சென்று நின்று (அம்மன்னனை நோக்கி) சக்கரத்தை யுடையவனே! மாளிகைகளையுடைய காவிரிப்பூம்பூட்டினத்திற்கும் கருவூர்க்கும் காஞ்சிநகருக்கும் மதுரைக்கும் உறையூர்க்கும் வேந்தனே! பாடும் புலவர்கள் சார்ந்திருக்கும் ஆணைச்சக்கரத்தை நடாத்தி, ஒப்பற்ற ஏழ்புவனத்தையும் காக்கும் சூரியனே! தளர்வில்லாமற் காத்து ஒரு குடையால் எட்டுத்திசையையும் கவித்து நிழலைச்செய்த மன்னர் குலமலையில் உயர்ந்த மேருவே! போர்புரியும் தொழிலால் மற்றுள்ள ஏழு கலிங்க நாட்டினையும் வென்று கைப்பற்றிய படைகளையுடைய தியாக சமுத்திரமே! இவ்வுலகில் ஏழு தீவிலுள்ள வட்டத்திற் பெரும்போர் புரிந்த பகையரசர்களுடைய தங்க மணிமுடியின்மேல் தங்கும் மணியே! இறைவனே!

(வி - ம்.) தோழியர் பலர் சென்று தம் தலைவி காமமயக்கத்தைக் குறிப்பாக உணர்த்துதல் வேண்டி, அரசனை இவ்வாறு விளித்தனர் எனக்கொள்க. அரசன் செவி சாய்த்துக் கேட்டு ஆராய்ந்து அவளை யணையவருவான் என்ற நோக்கத்தோடு விளித்ததன்று. தந்தலைவி மயக்கங் கண்டு வருந்திச் செய்வதறியாது திகைத்துப் புலம்பியதாகக் கொள்க கருவூர், சேரன் தலைநகரம். காஞ்சி, தொண்டை நாட்டுத் தலைநகரம். கூடல், பாண்டிய நாட்டுத் தலைநகர் இவற்றிற்கும் மன்னன் என்றது, அந்நாட்டு மன்னர் யாவரையும் வென்று தனக்குத் திறை கொடுக்கும்படி அடிப்படுத்தியது குறித்தது. ஆழியாய் என்றது திருமாலே என விளித்ததாம். காக்குந் தொழிலாற் காவலர் திருமாலுக்கு ஒப்பாவார் என்ற கருத்து.

பகலவன் - சூரியன். பகலவனே என்றது சூரியன் குல முதல்வ னாதலால் அவன் போன்றவனே என விளித்ததாகக் கொள்க. பாடலர்-புலவர். பாடலர்சாரும் ஓரேழுபார் எனக் கூட்டுக. பாடு அலர் எனப் பிரித்துப் பாடும் புகழ் எனப் பொருள் கொள்ளலும் ஒன்று. ''ஒரு குடையால் எட்டுத் திசை கவித்த'' என மன்னன் அரிய செயல் கூறப்பட்டது. கவித்தல் - மூடுதல், நிழல் செய்தல். இஃது அரசு புரிந்ததை யுணர்த்தியது. உன் அரசு எட்டுத் திசையிலுள்ளாரையும் இன்பமடையும்படி செய்தது என்பது கருத்து.

மலைகளில் உயர்ந்தது மேரு. அதுபோல மன்னர் குலத்துள் உயர்ந்தவன் நீ என்ற பொருள் தோன்ற ''வேத்துக் குலகிரியின் மேருவே'' என்றார். வேத்துக்குலம்+கிரி - மன்னர் குலமாகிய மலை. உலகில் மலைகள் சிறியனவும் பெரியனவுமாகப் பல காணப்படுகின்றன. அவற்றைப்போலவே மண்ணாளு மன்னர்கள் சிற்றரசரும் பேரரசருமாகப் பலர் இருக்கின்றனர். மேருமலையொத்த வேறுமலை எங்குமில்லாதது போல உன்னை யொத்தவரசர் பிறர் எங்குமிலர் எனச் சோழனைச் சிறப்பித்தது இதுவெனக் காண்க. வேத்துக்குலகிரி உருவகவணி. கலிங்கம் ஏழு பிரிவுடையது ஆதலால் 'கலிங்கங்கள் ஏழனையும்' என்றார். இவ்வாறே மற்றை நூல்களும் கூறுவதை நோக்குக. கலிங்கத்தை வென்றவன் சோழனல்லன்; அம்மன்னவன் படைத்தலைவனே என்பது தோன்றும்படி 'போய்க் கொண்ட தானை' என்றார். தியாக சமுத்திரம் என்பது பட்டப் பெயர், தானை—சேனை. தானைத் தியாக சமுத்திரம்-சேனைகளையுடைய விக்கிரம சோழன். எழுபொழில் வட்டம் - ஏழ் தீவினும் உள்ள வட்டமாகிய புவி. இம்பர் - இம்மண்ணுலகம். சிகாமணி - முடிமணி. முடியிலணியும் மணி போன்றவன் என்பது பொருள். மவுலி - கிரீடம்.

### 664—672. நின்பாரிற் படுவன.......புயல்வளவ!

(சொ - ள்.) 'நினது நாட்டில் உண்டாவன பலமணிகளும், நின் கடனீரிற் பிறந்தன சில முத்துக்களும், நின் நேரியாகிய மலையிடத்துள்ளனவும், நினக்குரிய பிற மலையிடத்துள்ளனவும் ஆகிய வைரங்களும். மன்னனே! நின் சோழ நாட்டில் உள்ள எழில் நிறைந்த பூத்தொழிலையுடைய துகில்களும் நின்னை வந்து இவள் புணிந்தவுடன் கொள்ளை கொண்டாய். அன்றியும் இவள் கொங்கையிற் படர்ந்த செழித்த தேமலும், நீங்காத நிறையும், மாந்தளிர் போன்ற சாயலும், பழைமையான துயிலும் நீ கவர்ந்தது நின் பழைமையான குலத்திற்றோன்றிய முன்னோர் பழகிய

சிறந்த மனு நூலின் முறையாகுமோ? மேகம்போன்ற கொடையிற் சிறந்த சோழனே! (கூறுவாய்) என்றார்.

(வி - ம்.) நின் நாட்டில் உண்டாவன சில மணிகள் என்பது ஒன்பதுவகை மணிகளில் பின் கூறப்படும் முத்தும் வைரமும் ஒழிந்த ஏழினையும் உணர்த்தும். "மரகதம் பவளம் நீலம் வச்சிரம் பதும ராகம், விரவிய தரள மேகோ மேதகம் புருடராகம், உரவிய காந்தி விட்டே யுமிழ்வயி டூரியம்தான், பெருகிய நவமணிக்குப் பெயரிவை யாகும் என்ப." இக்கவியால் ஒன்பது மணிகளின் பெயர் கண்டு கொள்க. மணிகள் பதித்த அணிகளை 'பன்மணியும்' என்றார். நித்திலமும், முத்துமாலையும், வைரமும் வைரம்பதித்த அணிகளும்; கொண்டாய் - கவர்ந்து கொண்டாய் பேரிளம்பெண்ணாகிய இவள் நின்னை வந்து கண்டு வணங்கினால் அவளுக்கு வேண்டும் பொருள்களைக் கொடுத்து மனமகிழ்ச்சி யூட்டி இன்பமுறுவித்து விடுப்பதன்றோ மனுகுலவேந்து வள்ளலாகிய உனக்குப் பெருமையாம். அவள்பாலிருந்த மணியும் அணியும் துகிலும் பிறவும் கவர்ந்தது பெருமையாமோ? நின் பாரில் நின் கடல் நீரில் நின் வெற்பில் நின் காட்டில் தோன்றிய பொருள்கள் என ஆய்ந்து அவற்றைக் கவர்ந்து கொண்டா யெனினும் இவள் கொங்கைச் சுணங்கும், நிறையும், தளிர் நிறமும் துயிலுங் கவர்ந்தது மனு நூல் விதிக்குப் பொருந்துமோ? கூறுக என வினவினர் அத்தோழியர் என்க. புயல்வளவ! என்ற விளி இப்பெயருனக்குப் பொருத்தமில்லையே என்று கூறுவதுபோல இறுதியில் நிற்கின்றது.

இவள் நின் பவனி கண்டு பணிந்தாள்; நின்மேற் காதல் கொண்டாள்; உடல் மெலிந்தாள்; உடை நெகிழ்ந்தது; மணிகள் பதித்த பலவணிகளும் கழன்று வீழ்ந்தன; முத்துமாலையும் பூமாலையும் அவ்வாறே கழன்றன; கொங்கையிற் சுணங்கு மறைந்து பசலை பூத்தது; நிறையழிந்தது; சாயலும்போய் உடல் பசலையாயிற்று; இனித் துயிலும் நீங்கும். இவ்வாறு காதலித்து நிற்கும் இவளைக் கண்ணாலும் பாராது நீ செல்வது முறையாகுமோ? காதல்கொண்ட காரிகையாரைக் கலந்தணைவது மன்னர் குலத்திற்குத் தக்கதன்றோ? இவள் உயிர் நீங்கின் அப்பழி உன்னைத்தானே சாரும்? என்று கூறுவார் போல இருந்தது அவர் கூற்று. நேரிய - நேரியினிடத்துள்ள. நின் வெற்பில்-நினக்குரிய மலையில். நேரிய வயிரம் எனவும், வெற்பில் வயிரம் எனவும் தனித்தனி கூட்டுக. நிறை - மனத்தைத் தீயவழியிற் செல்லாது நிறுத்தும் பண்பு. ஆடவர்க்கும் இக்குணம் உரியது எனக் கூறுவர் புலவர்.

## 673—684. மன்னிய......உத்துங்க துங்க னுலா

(சொ - ள்.) நிலைபெற்ற வளமுள்ள தொண்டைநாடு (காமனுக்கு) அம்புகளையும், காவிரி வளம்பொருந்திய சோழ நாடு அழகிய விற்களையும், குமரித்துறையுடைய பாண்டியநாடு தேர்களையும் (அவன்) குறை நீங்கும்படி செய்தால் அக்காமன் நாணத்தையுடைய இளமங்கையரை ஒருநாளேனும் (போர் புரிந்து வருத்தாது) விடுவனே? (விடான்). அவன் சினம் இந்த நீலமலர் போன்ற விழியுடையி இப்பேரிளம்பெண்ணின் உயிர்ப் பாரமேயாம். (இவள் நன்னிலைமை) ஆனல் மலையேயிதுவென்று கூறத்தகுந்த நின் கோயில் வாயிலிற்றூங்குமணி ஒன்றே நிலை பெற்றதாம். உலகத்தில் இது நீங்குமோ (எப்போதும் நீங் காது) என்று இத்தன்மையான சொற்களைக் கூறி வணங்கு மளவு வரையும் அம்மங்கையர்மீது சினந்து மதன் வில்லை வளைக்கப் பகைவரைத் தொலைப்பதற்குக் கொம்பாற்குத்தும் மதயானை மேல் உயர்ந்தோர்க்கெல்லாம் உயர்ந்தவனாகிய கொடைத் தன்மையுடைய சோழன் உலா வந்தான்.

(வி - ம்.) காமனுக்கு அம்புகள் மலர்கள். தாமரை' முல்லை,'அசோகு, நீலம், மாம்பூ இவையைந்து. தொண்டை நாடு சான்றோருடைத்து' எனக் கூறியபடி ஆங்குக் கோயில் வழிபாடு செய்யும் சான்றோர் பலர் நந்தவனம் வைத்து வளர்த்து மலர்கள் மிகுதியாக உண்டாக்கப்படுவது குறித்து 'தொண்டை நாடு வாளியும்' என்றார். சோழநாட்டுழவர் வயல் களிற் கரும்பு விரும்பி நட்டு வளர்ப்பது குறித்து "பொன்னி நாடு பூஞ்சிலையும்" என்றார். பொதியமலையிலிருந்து தென்றற் காற்று வருவதால் "கன்னித்திருநாடு தேரும்" என்றார். காம னுக்கு அம்பு மலர்; வில் கரும்பு; தேர் தென்றற் காற்று என்பதும் தெரிக. தொண்டை நாடு அவனுக்குக் குறை நீங்கும்படி அம்பு களைக் கொடுக்கின்றது. சோழனாடு வில்லைக் கொடுக்கின்றது; பாண்டி நாடு தேரைக் கொடுக்கின்றது. அம்பும் வில்லும் தேரும் அவனுக்குக் குறைவின்றிக் கிடைக்கின்றன. இம்மூன்று நாடுகளும் இவ்வாறு குறையறுப்பச் செய்தால் அவன் போர் புரியாமல் விடுவானே? ஒருநாளாயினும் விடமாட்டான். அவை கள் மூன்றும் நினக்குரியவைதாம். அவ்வாறு செய்யாமல் தடுத்து நிறுத்தினல் எமது துன்பம் நீங்கும். அதுவும் நீ செய் கின்றிலை யென்பது குறிப்பு. இப்போது அப்பேரிளம்பெண் ணின் உயிர்ப் பாரத்தைக் காமன் சினம் தாங்கியிருக்கிறது. காமன் சினம் தாங்கவில்லை யெனின் உயிர் போய்விடும். சின மோங்கினல் உயிர் நீங்கும். சினம் நீங்கினல் உயிர்வரும்.

இந்நிலையில் இவள் இருக்கின்ருள் என்பது குறிப்பு. ஆனக்கால் (இந்நிலை நீங்கி உடல் நலம்) ஆனல். தூங்குமணி ஒன்றே என்ற எழுவாய்க்குப் பயனிலையாக, 'சிறந்தது; ஒப்பற்றது; நீதியுடையது; நிலைபெற்றது' என்பவற்றுள் ஒன்று கொள்க. இவட்கு இடையூறு நீங்கினல் அம்மணி அடிக்கப்படாமல் இருக்கும். அதனல் அது சிறந்ததாம் என்க. ஒழியுமே, இதில் ஏகாரம் வினப்பொருளில் வந்தது. ஒழியுமோ? அம்மணி ஒழியாது என்ற பொருளைத் தந்தது. இவள் துன்பத்தை நீக்கி இன்பம் பெறச் செய்வது நின் கடமையாம் எனக் குறிப்பித்த வாறு இது. ஆனக்கால் என்பதற்கு, இவள் உயிர் கெடும் நிலைமையானல் எனப் பொருள் கொள்ளின் தூங்குமணி யொன்றே இதுகாறும் இடையூறின்றி நெறிமுறையின் நின் றது; இனி இதுவும் நீங்கிவிடும் என்று கூறியதாகக் கொள்க. இப்பொருட்கு ஏ அசையாம். வணங்கிய மங்கையர்க்கெல்லாம் காதலுண்டாயிற்று என்பார், "வணங்கு மளவு மனங்கன் சிலை வளைப்ப" என்ருர். போந்தான் - வந்தான். உலா போந்தான் எனக் கூட்டுக

## முடிவு

(1) சீர்தந்த, (4) காசிபனும், (6) தேரோனும்; (8) மனுவோனும், (10) கொற்றவனும், (11) மன்னவனும், (12) பூபதியும், (14) செம்பியனும், (16) தராபதியும், (18) கீழ் கடற்கு விட்டோனும், (20) கோவும், (22) தூயோனும், (24) தந்தோனும், (26) பூபதியும், (28) பார்த்திவனும், (30) புரவலனும், (32) காவலனும், (34) கொண்டோனும், (36) கற்பகமும், (38) சேவகனும், (40) கொண்டோனும், (42) பாயலமைத்தோனும், (44) துணித்தோனும், (45) காத் தோனும், (46) புரந்ததற்பின், (53) தந்து அளிக்கும், (54) அப யற்குத், (55) தோன்றியகோன் விக்கிரமசோழன், (70) உறை கின்ற நாளி லொருநாள், (80) எய்திய பள்ளி இனிதெழுந்து, (82) காப்பணிந்து, (86) முடிவணங்கி, (88) மானக்கலன்கள் வரவருளி, (90) தயங்க, (92) சூழ, (94) வயங்க, (96) மல்க, (98) வாய்ப்ப, (99) அணியணிந்து, (100) வனப்பமைந்து, (103) பெயர்ந்து கோயிற்புற நின்று, (127) அயிராபத நின் றதனை, (128) படியாவேறி, (129) கிழற்ற, (130) அசைப்ப, (134) கொடியோங்க, (138) தொண்டைமானும்...... (178) பல்லவனும், (180) இருமருங்கு மொய்த்தீண்ட, (182) வீதி குறுகுதலும், (184-192) போன்றும்,.....விரைவினராய், (202-212) உரகவரமகளிர் ஒப்பார்,......அரமகளிர் போல்வார் அருகணைந்து, (214-224) பணைப்பென்பார், ......குவிப்பூர்

சிலர் செறிய அங்கொருத்தி, (232) பேதை, (260) (மாலையிது வாங்கித்) தம்மின்க ளென்றுரைப்ப. (263) எளிதோவரிது என்ன? (264) சிறியாளும், (266) அடியிட்டாள். (268) அறவே யயர்த்தாள் (பெதும்பை), (268) ஒருத்தி, (29?) கண்டு மகிழ்ந்தேன் கனவிலென, (298) தாயர், (301,302) சென்னியுடன் வல்லி பெறுதியென வாழ்த்தும் எல்லை, (303) அகளங்கன், (304) மதவரைமேற் போத, (317-320) கண்ட கண் வாங்காள்......தனி நின்றுள். (325) மங்கைப் பருவத் தொருத்தி, (376-378) இறைவனைக் கண்டு......கொண்டு பெயர்ந்தது. (295) ஒருமடந்தை.........(444) அடுத்தனர் தோண்மேலயர்ந்தாள். (460) அரிவை, (524) வாராவிருப்பு வருவித்தாள். (தெரிவை). (525) கோது விரவாக்கொழும்பாகு, (609) நிற்கண்டாயென்றிரந்து நின்றுள். (610) பேரிளம் பெண் வேறொருத்தி, (654) தோழியர் தோண்மேலயர்ந்தாள்: 'அத்தோழியரும்' 'ஆழியாய்'! (656 - 664) கோமானே! பல்லவனே! மேருவே! தியாக சமுத்திரமே! சிகாமணியே! நம்ப!, (671) துயிலுங் கவர்ந்தது. (672) திருநூற்படியோ (680) ஒன்றேயுலகுக் கொழியுமே என்றினைய, (681) கூறி வணங்கிடு மவ்வளவும், (683, 684) கடாக்களிற்றுக் கொடைச் சென்னி உலாப் போந்தான் என வினைமுடிவு செய்க.

விக்கிரமசோழன் அரசுபுரியும் நாளில் ஒருநாள் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்ற ஏழ் பருவப் பெண்களும் வந்து கண்டு காதல் கொண்டு மயங்கி நிற்க, பட்டத்து யானைமேற் பவனி வந்தான் என்பது.

## நேரிசை வெண்பா

கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே!—வையம்
அளந்தாய் அகளங்கா! ஆலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளிம் மான்.

(சொ - ள்.) கையும் மலர் அடியும் கண்ணும் கனிவாயும் செய்ய - இரு கரங்களும், தாமரைப் பூப்போன்ற இரு பாதங் களும் இரு விழிகளும் கோவைக்கனிபோன்ற வாயும் சிவந்த! கரிய திருமாலே - கரிய நிறமான உருவமுடைய திருமாலே: வையம் அளந்தாய்; பூவுலகத்தை (ஓரடியால்) அளந்தவனே!, ஆல் இலை பள்ளிமேல் வளர்ந்தாய்-ஆலிலையாகிய பாயலின்மேற் கண் வளர்ந்தவனே!, அகளங்கன் - அகளங்கன் என்ற பெய

ருடைய விக்கிரமசோழனே! இம்மான் தளர்ந்தாள் - இந்த மான் போன்றவள் (உன் காதலால்) சோர்ந்தாள்; (நீ வந்து இவளை அணைவாய்).

(வி - ம்.) பாங்கி தலைவற்குரைத்தல். இஃது பெருந் திணைப்பாற்படும். பவனி கண்டு காதல் கொண்ட பெண்ணொருத்தி தன் பாங்கியிடம் கூற, அவள் நிலைமையையுணர்ந்த தோழி தானேசென்று தலைவனிடங் கூறியதாகவுணர்க. "காமப் பகுதி கடவுளும் வரையார்" (தொல். பொருளதி. 83) சூத்திரத்தில் நச்சினார்க்கினியர் உரையில் "இது வேறோர் காமமென்று கொள்க" என்றதனால் இது பாடாண் பகுதியுள் அடங்கும் என்று கொள்க. திருமால் வேறு, விக்கிரமசோழன் வேறு என்பதின்றித் திருமாலே இவன் என்ற கருத்துப் புலப்படத் "திருமாலே! அளந்தாய்! வளர்ந்தாய்! அகளங்கா" என்று விளித்தார். உலகங்காப்பதற்குத் திருமால் வந்து பிறந்தனன் என அவன் செயலால் அறிந்தனர் போலும். சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை, படர்க்கைப்பரவலில் வந்துள்ள "கண்ணும், திருவடியுங் கையும் கனிவாயுஞ் செய்ய, கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே" என்ற அடிகளை இவ்வெண்பாவின் முன்னிரண்டடியும் ஒற்றி வந்துள்ளன. திருமாலின் கை, கால், கண், வாய், உந்தியாகிய உறுப்புக்கள் செந்தாமரை மலர்போற் சிவப்பாகத் தோன்றும் என்பதும், கரிய மேகம்போல வடிவந் தோன்றும் என்பதும் நூல்மரபு. "மாவலிபால் மூன்றடி மண்ணிரந்து வாங்கித் தன் ஓரடியால் இவ்வுலக முழுவதும் அளந்தான்" என்பதும், திருப்பாற்கடலில் ஆலிலைமேல் அறிதுயிலமர்ந்தான் என்பதும் திருமால் வரலாறு. கண் வளர்ந்தாய் என்பதுகுறைந்து 'வளர்ந்தாய்' என நின்று குறிப்பினால் துயின்றாய் என்னும் பொருளைத் தந்தது. பள்ளி ஆலிலைமேல் என்றுவது ஆலிலைப்பள்ளிமேல் என்றுவது மாற்றிப் பொருள் கொள்க. பள்ளி - பாயல், படுக்கை: இம்மான் தளர்ந்தாள் என்று கூறியதால் நின்னைக் கண்டு காதல் கொண்டு தளர்ந்தாள் எனவும் இவ்வாறு தளர்ந்தவளைக் காப்பது நின் கடமையாதலால் இவளைக் கலந்து துன்பம் நீக்கி இன்பந்தருக எனவும் விரித்துரைத்துக் கொள்க. மான் - உவமையாகு பெயர். செய்ய, கரிய என்ற குறிப்புப் பெயரெச்சங்கள் திருமால் என்ற முதற் பெயரைக் கொண்டு முடிந்தன. இவ்வெண்பா இந்நூலாசிரியர் பாடியதன்றென்று தெரிகின்றது. உலா நூலுக்கும் இப்பாவிற்கும் தொடர்பில்லையாதலால் வேறு புலவர் விக்கிரமனைச் சிறப்பித்துக் கூறியது எனக் கொள்வதே பொருத்தம்.

முற்றிற்று.

சிற்றிலக்கியச்

## சொற்பொழிவு நூல்கள்

### முதலாவது சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் :

உலா, கலம்பகம், தூது ஆகிய பகுதிகள் பற்றிப் பேராசிரியர் எண்மர் ஆற்றிய சீரிய சொற்பொழிவுகள் அடங்கியது.

கலிக்காக் கட்டு ரூ. 6-00

### இரண்டாவது சிற்றிலக்கியச் சொற்பொழிகள் :

பிள்ளைத் தமிழ்ப்பகுதி பற்றிப் பேராசியர் எண்மர் ஆற்றிய அரிய சொற்பொழிவுகள் அடங்கியது.

கலிக்காக் கட்டு ரூ. 6-25

### மூன்றாவது சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் :

பரணி, பள்ளு, குறவஞ்சி ஆகிய பகுதிகள் பற்றிப் பேராசிரியர் பதின்மர் ஆற்றிய சிறந்த சொற்பொழிவுகள் அடங்கியது.

கலிக்காக் கட்டு ரூ. 6-25

### நான்காவது சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் :

கோவை நூல்கள்பற்றிய சொற்பொழிவுகள் அடங்கியன.

கலிக்காக் கட்டு ரூ. 6-50

### ஐந்தாவது சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் :

அந்தாதி நூல்கள்பற்றிய சொற்பொழிவுகள் அடங்கியன.

கலிக்காக் கட்டு ரூ. 7-00

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6 சென்னை-1.